கேள்விகளும் பதில்களும்

...நான் பிரசங்க பீடத்திற்கு வருவதற்கு முன்னர் இந்தக் கேள்விகள் உள்ளன, ஆனால் சகோதரன் மூர், அவர் ஒரு அவசர அழைப்பை அனுப்பினார், யாரோ ஒருவர் மிகவும் சுகவீனமாயிருந்தார் என்று நான் எண்ணினேன், அவர் ஒரு கூட்டத்தை நடத்த விரும்பினார். எனவே நான் அங்கே தொலைபேசி இணைப்பை நிறுத்திவிட முயற்சித்துக் கொண்டிருந்தேன். அவர் நன்றிகூறுதலினூடாக லூசியானாவிற்கு வந்து அவர்களுக்காக ஒரு கூட்டத்தை நடத்த அவர் விரும்பினார். கடந்த வருடம் நாங்கள் அங்கிருந்தபோது, கர்த்தர் எங்களுக்கு—ஒரு எழுப்புதலைத் துவங்கினார், அது இன்னும் ஒருபோதும் முடிவடையவில்லை; அந்த எழுப்புதல் இன்னும் போய்க் கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு எழுப்புதலுக்குப் பிறகு, எத்தனை நூற்றுக்கணக்கானோர் இரட்சிக்கப்பட்டுள்ளனர் என்பதை மறந்துவிடுங்கள்.

2 இப்பொழுது, இந்தக் காலையில் இங்கே இருப்பது ஒருவிதமாக ஆச்சரியமாயிருக்கலாம் என்று நான் யூகிக்கிறேன்; எனக்கும் அது அப்படித்தான். எனக்குத் தெரியாது, எனவே நாங்கள் அதைச் சிலருக்கு மத்தியில் விளம்பரப்படுத்தவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள், சில கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்காக உள்ளே வந்தேன். நான் அந்த விதமாக நினைத்தேன்...வழக்கமாகவே ஒரு போதகர் கேள்விகள் கேட்கும்போது, தன்னுடைய ஜனங்களின் இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை அவர் கண்டறிய முடியும். அந்தவிதமாக ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை நாம் கண்டறிகிறோம்.

3 இந்தக் காலையில் நாம் துவங்குவதற்கு முன்பு, பிரதிஷ்டை செய்ய ஒரு குழந்தையை அவர்கள் வைத்திருப்பதாக ஒருவர் கூறினார் என்று நான் நினைக்கிறேன். ஒரு குழந்தையின் பிரதிஷ்டை ஒன்று இருப்பதாகப் பில்லி என்னிடம் கூறிக்கொண்டிருந்தான். அப்படியானால், நான்...சரி. நாம் அந்தச் சிறுவனைக் கொண்டுவந்து, அதைக் கர்த்தருக்கு பிரதிஷ்டை செய்வோம்; அதன்பின்னர் நாம் கேள்விகளுக்குப் பதிலளிப்போம், அதன்பின்னர் நாங்கள் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கப் போகிறோம்.

4 என்னுடைய தாயார் வழக்கம்போல் இருக்கிறார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அவள்...அவர்கள் அப்படி நினைத்தாலும், அவள் நிலை மோசமாகிவிட்டதாக நான் நினைக்கவில்லை. ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை; அவள் முன்போலவே இருக்கிறாள் என்று நான் நம்புகிறேன். அவள் மரிக்கப் போகிறாள் என்று தேவன் என்னிடம் கூறும் வரை, நான் அதை நம்பப் போவதில்லை. மேலும் அம்மா மரிக்கப் போகிறார்

என்று அவர் சொல்லும் வரை (புரிகிறதா?), நான் அவளுக்காக விசுவாசத்தை வைத்திருக்கப் போகிறேன்.

5 இப்பொழுதே, அவர் அவளை அழைக்கக்கூடும்; எனக்குத் தெரியாது. அவருடைய...அதை என்னிடத்திலிருந்து விலக்கி, கவலைப்படுவதிலிருந்து என்னைக் காத்துக் கொள்ளலாம் அல்லது அதுபோல ஏதாவது செய்திருக்கலாம்; ஆனால் அவள் என்ன நிலையில் இருந்தாலும் தேவன் அவளைச் சுகமடையச் செய்யப்போகிறார் என்று நான் விசுவாசிக்கப் போகிறேன். அவள் மூன்று வாரங்களாகக் குளுக்கோஸைத் தவிர வேறு எதுவும் சாப்பிடவில்லை; ஆனாலும், அவள் எப்படியும் குணமடைந்துவிடுவாள் என்று நான் விசுவாசிக்கிறேன். பார்த்தீர்களா?

சகோதரர் நெவில். பாருங்கள், இது ஒரு, மற்றொரு பிரசங்கியாக இங்கு வருவார் என்று நாம் நம்புகிறோம், அது ஒரு சிறிய திரு. உட். ஆம், ஐயா. அவனுடைய முழுப் பெயர் என்ன? வில்லியம் டேவிட். ஜூனியரா? நீங்கள் அவரை ஜூனியர் என்று அழைக்கப் போகிறீர்களா? ஹூ-ஹூம். இது ஒரு சிறிய அடையாளமாக அங்குள்ள உட் என்பவரின் குடும்பத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது, நிச்சயமாகவே அவர் பாட்டியின் செல்லப்பிள்ளை, மேலும்... சிறுவன் வில்லியம் டேவிட் ஜூனியர். அவன் நிச்சயமாக ஒரு அருமையான சிறு பையன். அவனுடைய சிறிய சகோதரி அவனை அங்கே சமநிலையுடன் வைத்திருப்பாள், ஏனென்றால் அவள்... ஆம், இப்போது அவன் தன் விரலை மடக்கிக் கொண்டிருக்கிறான், சுடும் விரல் மடிந்துவிட்டது. அணில் வேட்டைக்காரன். அவன் ஒற்றைக் கண்ணால் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் கொஞ்சம் பின்னுக்கு தள்ளியவாறு இருக்கிறான் என்று நினைக்கிறேன். ஹூ? ஆனால், இவற்றை வளர்க்கும் பொறுப்பை நமக்கு அளிப்பதில் நாம் நன்றி பாராட்டும் வகையில், தேவன் நம் வீட்டிற்கு அனுப்பும் இவை சிறிய காரியங்கள் என்பதை நாம் அறிவோம். தேவனுடைய கிருபை இந்தக் குடும்பத்தில் தொடர்ந்து இருக்குமானால், இந்தக் குழந்தை தேவனுடைய போதனையில் வளர்க்கப்படும். நாம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் இந்தக் காலையில் குட்டி வில்லியம் டேவிட் உட்டை கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் உம்மிடம் கொண்டு வருகிறோம், வேதவாக்கியத்தின்படி, அவர் இவ்வுலகில் இருந்தபோது, அவர் தம் கைகளை அவர்கள்மேல் வைத்து ஆசீர்வதிப்பதற்காக, மக்கள் சிறு குழந்தைகளையும் சிறு பிள்ளைகளையும் அவரிடம் கொண்டுவந்தார்கள். அவர் இந்தக் காலையில் இங்கே ஒரு மாம்ச சரீரத்தில் இருப்பாரானால், நம்முடைய சகோதரனும் சகோதரியும் இந்தச் சிறிய கிருபையின் அடையாளத்தை அவரண்டை கொண்டு செல்வார்கள் என்பதை நாங்கள் அறிவோம். எனவே, இன்றைக்கு நாங்கள் அவருக்குச்

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் விதத்தில், அவருக்குப் பிரதிநிதியாக இருக்க வேண்டும், அவர்கள் அந்தக் குழந்தையை எங்களிடம் கொண்டு வருகிறார்கள். விசுவாசத்தினால் நாங்கள் குட்டி டேவிட்டை உம்மண்டை இயேசுவின் நாமத்தில் உயர்த்துகிறோம், கர்த்தாவே, நீர் அவனை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். தேவனே, நீர் தாமதித்தால், இவன் ஒரு— ஒரு ஊழியக்காரனாக ஜீவிக்க அருள்புரியும். கர்த்தாவே, அதை அருளும். அவனுக்கு ஆரோக்கியத்தையும், பெலனையும் கொடும். அவனுடைய தகப்பனையும், அவனுடைய தாயையும் ஆசீர்வதியும். அது உம்முடைய தெய்வீக சித்தத்தில் இருக்குமானால், வரப்போகும் நாட்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க இந்தச் சிறு பையன் எழும்புவான். கர்த்தாவே, அதை அருளும். நாங்கள் இந்தச் சிறிய வில்லியம் டேவிட் உட் என்பவனை உம்முடைய ஊழியக்காரனாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உமக்கு அளிக்கிறோம். ஆமென்.

டேவிட், நான் அந்தச் சிறு நபர்களிடம் எப்பொழுதுமே மிகவும் கவனமாக இருக்கிறேன்; அவர்கள் அவ்வண்ணமாய் இருப்பதைப் போன்று நீங்கள் உணருகிறீர்கள், உங்களுக்குத் தெரியும், நீங்கள் அவர்களை எப்போதும் கீழே போட்டுவிடுவீர்கள் என்பது போலத் தோன்றும்.

என் கருத்துப்படி, சின்னக் குழந்தைகளும் வயதானவர்களும்: வாழ்க்கையில் பல அனுபவங்களைக் கண்ட ஒரு வயதானவரைப் போன்றவரை; அல்லது, மிகவும் அப்பாவித்தனமான ஒரு சின்னக் குழந்தையைத் எடுத்துக் கொள்ளுங்கள், உங்களுக்குத் தெரியும்; அவர்களைக் குறித்து நான் உண்மையாகவே விரும்புகிற ஒரு காரியத்தை நான் எடுத்துக்கொள்கிறேன்.

நாம் இந்தப் பிரசங்க பீடத்தின் விளக்கை இங்கே ஏற்றுவோமா என்று யோசிக்கிறேன். சகோதரன் நெவில், அவர்கள் எங்கே...என்று உங்களுக்குத் தெரியுமா? ஓ, இங்கே நாம் இருக்கிறோம்.

6 இப்பொழுது, கேள்விகளில், அவைகளில் சிலவற்றை நாம் இங்கே வைத்துள்ளோம், கேட்கப்பட்டுள்ள கேள்விகளைக் குறித்து வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கக் கூட எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை; ஏனென்றால் அது இன்று காலை கொடுக்கப்பட்டது. ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு நான் அவைகளை எடுத்தேன், அவைகளின் ஒரு பாகத்தை மேலோட்டமாகப் பார்த்தபோது, சில கேள்விகளைக் கண்டேன், எப்படி என்று யோசிக்கிறேன்...மேலும் அவர்களில் சிலர்... நான் இதுவரை சந்தித்த குழுக்களிலேயே இதுதான் மிகவும் கடினமான குழு. எனவே அவைகளினூடாக நோக்கிப் பார்த்தபோது, இவைகளோடு நமக்கு ஒரு கடினமான நேரம் இருக்கப் போகிறது என்பதை நான் கண்டேன்.

7 இந்தக் கேள்விகளில் உங்களுடைய நம்பிக்கையின்படி நான் அவைகளுக்கு பதிலளிக்கவில்லையென்றால்...இப்பொழுது,

என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் அவைகள் உள்ளன என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். அதன்பின்னர் சில சமயங்களில் நான்—இதில் அவைகளுக்கு பதிலுரைக்க ஒரு வேதவாக்கியத்தை நான் சுட்டிக்காட்ட வேண்டியதாயிருக்கலாம், ஒருக்கால் அதை ஆராய்ந்து பார்க்க நேரமில்லாமல் இருக்கலாம். அதன்பின்னர் நீங்கள் வீட்டிற்குச் செல்லும்போது, நீங்கள் அதைத் தேடிப் பார்த்துத் தெரிந்துகொள்வீர்கள். நான் அதைத் தவறாக மேற்கோள் காட்டியிருந்தால், அப்படியானால், நான்—நான் தவறாக இருப்பேன். நான் யாரையும் தவறாக மேற்கோள் காட்ட விரும்பவில்லை, அல்லது—வேத வசனத்தையும் தவறாக மேற்கோள் காட்ட வேண்டும் என்று விரும்பவில்லை, ஆனாலும் சில சமயங்களில் நாம் அதைச் செய்துவிடுகிறோம். அது ஏதோ ஒரு வார்த்தையாக இருக்கக்கூடும், அப்பொழுது நாம் அதை வேறு விதமாகக் கூறலாம். அதைச் செய்வது எவ்வளவு எளிது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

8 ஆனால் நாம் அவைகளை நேராக மேற்கோள் காட்டுவதே நோக்கமாகக் கொண்டுள்ளோம்—எங்களுடைய நோக்கம். நான் அவைகளை இந்த ஞாயிற்றுக் கிழமை எடுத்துக்கொண்டும், அடுத்த ஞாயிறு அவைகளுக்கு பதிலளிக்க வேண்டுமானால்; அப்பொழுது நான் அவைகளை இந்த வாரம் முழுவதும் பார்க்க நேரம் கிடைக்கும்.

9 ஆனால் அநேக சுகவீனமான ஜனங்கள் உள்ளே வருகின்றனர், நான் மிகுந்த, மிகுந்த வேலையாயிருந்தபடியால், வெளியே சென்று என்னுடைய அநேக அழைப்புகளைச் செய்ய எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இன்றைக்கு ஒரு நல்ல நேரமாயிருக்கும் என்று நான் நினைத்தேன், அந்தச் சுகவீனமான ஜனங்கள் கூடாரத்திற்குள் வரட்டும், நாங்கள் அவர்களுக்காக ஜெபிப்போம். ஜெபம் காரியங்களை மாற்றுகிறது என்பதை நாம் அறிவோம்.

10 ஜெபம் நமக்காக ஏதோ ஒரு காரியத்தைச் செய்கிறது. ஜெபத்தின் மூலமாகவே நான் இன்றைக்கு ஜீவிக்கிறேன். நான் ஜெபத்தின் மூலமாகத் தேவனுடைய கிருபையினால் ஜீவிக்கிறேன். இந்தக் காலையில் சற்று சோர்வுற்று, களைப்புற்று இருப்பதால், எனக்காக நீங்கள் ஜெபிக்கும்படியான உங்களுடைய ஜெபங்களை நான் வாஞ்சிக்கிறேன்.

11 அதன்பின்னர் நேற்று நான் ஒரு நண்பரின் வீட்டிற்குச் சென்றிருந்தேன், அது ஒரு கிறிஸ்தவ இல்லம், அங்குச் சில இளம் கிறிஸ்தவர்கள் கூடியிருந்தனர். நான் அவர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, அந்த—ஏதோ ஒரு காரியம் எனக்குத் தோன்றி, எப்படி என்பதைக் குறித்த சிந்தனை... நான் காடுகளுக்குள்ளும், மரங்களைச் சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்தபோது, அவைகள் மரித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன், மேலும் நான், “அந்த மரங்கள் மரித்துக் கொண்டிருக்கிறபோதிலும் அவை எவ்வளவு அழகாக இருக்கின்றன;

இருந்தாலும் அவைகள் அழகாயிருக்கின்றன" என்று நினைத்தேன். மேலும் சில சமயங்களில் ஒரு மரமானது அதனுடைய பசுமையான சிறந்த நிலையில் இருப்பதைக் காட்டிலும் அது மரித்துக் கொண்டிருக்கும்போது நன்றாகக் காணப்படுகிறது. அது நம்முடைய பரலோகப் பிதாவுக்கு நம்முடைய நிலைமைகளை வெளிப்படுத்தும் காட்சியாய் இருக்கவில்லையா என்று நான் எதிர்பார்க்கிறேன், ஏனென்றால் அவர், "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" என்றார்.

12 பிதாவானவர் தம்முடைய வீட்டிற்கு தம்மிடம் திரும்பி வந்து, கிறிஸ்துவிலும், தமது விசுவாசத்திலும், தமது அறிக்கையிலும் தம் நிலையை உறுதியாகப் பற்றிக்கொள்வதை மேலிருந்து நோக்குவது எவ்வளவு அழகான ஒரு—ஒரு காரியமாக இருக்க வேண்டும் (பார்த்தீர்களா?), "நான் தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன்!" அங்கே நின்று (பார்த்தீர்களா?) மரண வேளையில், அதே சமயத்தில் நாம் நம்முடைய அறிக்கையைப் பற்றிக்கொள்ள முடியும், நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்.

13 நம்முடைய பிதா நம்முடைய சாட்சியை விசுவாசித்து, நம்முடைய தீரத்தை நேசிக்கிறவராயிருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். நீங்கள் நலமாயும், ஆரோக்கியமாயும், பலமுள்ளவர்களாயுமிருக்கும்போது, அது சாட்சி பகருவதற்காக அல்ல; அது நீங்கள் தளர்ந்து, பெலவீனமாயும், தொல்லைக்குள்ளாயும் இருக்கும்போது. அங்குதான் உங்களுடைய சாட்சி கணக்கிடப்படுகிறது.

14 அதன்பேரில் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, நான் இதைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தேன், அதாவது மரணம் என்பது ஜீவனோடு சம்பந்தப்படவில்லை. ஜீவனும் மரணமும் ஒரே நேரத்தில் இருக்க முடியாது. மரத்தின் இலை மரித்துப் போவதற்கு முன்பு, மரங்களிலிருந்து சத்து வெளியேறிவிட வேண்டும். ஆகையால், மரணம் என்பது ஒரு மானிட வர்க்கத்தின் மண்டலங்களில் சம்பந்தப்பட்டது என்று நான் நினைக்கிறேன்—மரணமானது பாவத்தோடு சம்பந்தப்பட்டது. ஏனென்றால் நமக்குப் பாவம் உண்டாயிருந்ததற்கு முன்பு, நமக்கு மரணமே இல்லாதிருந்தது. ஆனால் மரணம் எங்கே உள்ளதோ, அப்பொழுது பாவமும் உண்டு; பாவமுள்ள இடத்தில் மரணம் உண்டு; ஏனென்றால் மரணம் பாவத்தின் விளைவு.

15 அப்பொழுது, அந்த...பாவஞ்செய்கிற ஆத்துமா, அது சாகும். ஆனால் நாம் தேவனுடைய ஆவியினால் மீண்டும் பிறக்கும்போது, நாம் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறோம். பார்த்தீர்களா? மரணத்தை ஜீவனோடு தொடர்புபடுத்த முடியாது. ஜீவனை மரணத்தோடு தொடர்புபடுத்த முடியாது.

16 நேற்றைய தினம் சில வாலிப கிறிஸ்தவர்கள் இருந்த அந்த அறையில் பேசிக்கொண்டிருந்தேன், நான், "நீங்கள்

இங்கே சாலையில் நின்று கொண்டிருக்கும்போது, ஒரு கார் கட்டுப்பாடின்றி மணிக்குத் தொண்ணூறு மைல் வேகத்தில் வந்துகொண்டிருந்தால், உங்களால் முடிந்தவரை விரைவாக அந்த நெடுஞ்சாலையிலிருந்து வெளியேறிவிடுவீர்கள். நீங்கள் குதித்து, சறுக்கி, எந்தக் காரியத்தையும் செய்து, அந்தக் காரின் வழியிலிருந்து விலகிச் செல்லுவீர்கள்" என்றேன். அந்தவிதமாகத்தான் பாவம் ஒரு கிறிஸ்தவனுக்கு இருக்க வேண்டும், ஏனென்றால் பாவம் மரணத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. நீங்கள் பாவத்தை எந்த ரூபத்தில் கண்டாலும், அதிலிருந்து குதித்து, அதிலிருந்து விலகிச் செல்லுங்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டியதாயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை, பொல்லாங்கான தோற்றத்தை விட்டு விலகுங்கள். ஏனென்றால் நினைவிருக்கட்டும், பாவத்தோடு தொடர்புகொள்வது மரணம். அங்கே நின்று அந்த வாகனம் உங்களைத் தாக்கும்படி அனுமதிப்பது போன்றேயாகும்.

17 அது என்ன செய்யும் என்று காத்திருந்து பார்க்க வேண்டாம்; அதிலிருந்து விலகிச் செல்ல வேண்டும். பொல்லாங்காய் தோன்றுகிறபடியால், அதைச் சீக்கிரமாய் விட்டுவிடுங்கள். ஒரு சோதனை வருவதை நீங்கள் காணும்போது, பாவம்...உங்களுக்குத் தெரியும், அது தவறாயிருந்தால், மரணம் உங்களைத் தொடர்ந்து பதுங்கிக் கொண்டிருக்கிறது. பார்த்தீர்களா? அப்படியானால், மணிக்குத் தொண்ணூறு மைல் வேகத்தில் வரும் ஒரு கார் அருகில் வருவதைப் போல, அதிலிருந்து உடனடியாக விலகிச் செல்லுங்கள். பார்த்தீர்களா? நீங்கள்—நீங்கள் உடனடியாக அதிலிருந்து விலகிச் செல்ல விரும்புவீர்கள்: வழியை விட்டு, குதித்து, சறுக்கி, எந்த வழியிலும் ஓடி, அதிலிருந்து விலகிச் செல்லுங்கள்.

18 நாம் ஜீவனை உடையவர்களாயிருக்கிறோம் என்பதை நாம் எப்படி அறிவோம், நாம் பாவத்தை வெறுப்பதே ஆகும். நாம் பாவத்தை மிகவும் வெறுக்கிறோம், எனவே மரணம் அதனோடு தொடர்புடையதாயிருக்கிறது என்பதை நாம் அறிந்து, அதனுடைய தோற்றத்தை நாம் புறக்கணிக்கிறோம். பாவத்திலிருந்து விலகி இருக்க நாம் எதைச் செய்தாலும், குதித்தாலும், ஓடினாலும், நாம் செய்யக்கூடிய எதையும் செய்வோம், ஏனென்றால் பாவத்தில் மரணம் உண்டு. நாம் நிச்சயமாக மரணத்தோடு எந்தக் காரியத்தையும் சம்பந்தப்படுத்த விரும்பவில்லை. நாம் அதிலிருந்து விலகியிருக்க விரும்புகிறோம்.

19 எனவே அது ஒரு நல்ல சிறு கருத்தாக இருக்கும் என்று நான் நினைத்தேன். நேற்றைய தினம் இந்தக் கிறிஸ்தவர்களிடம் பேசினது என் மனதில் பட்டது; குறிப்பாக, இளைஞர்கள் இங்கே அமர்ந்து அது போன்ற சோதனைகளுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கும்—உள்ளாகிக்கொண்டிருக்கும் இந்த வேளையில், மேலும் இன்று காலைச் சபைக்கு இதைத் தெரிவிப்பது நல்லது என்று நான் நினைத்தேன்.

20 மேலும், நான் நம்பும் ஒரு கேள்வி, நாம் இங்கே கீழே சென்று அதைப் பார்க்க முடிந்தால், அதனுடன் தொடர்புடைய இன்னொன்றும் இருக்கிறது...மேலும் நினைவில் கொள்ளுங்கள், பாவமான எதுவாக இருந்தாலும், மரணம் அங்கேயே காத்திருக்கிறது. நீங்கள் அந்தப் பாவத்தில் பங்குபெறும்போது, நீங்கள் மரணத்தில் பங்குபெறுகிறீர்கள். எனவே அதிலிருந்து விலகியிருங்கள்.

21 பாவம் என்றால் என்ன? அவிசுவாசம். ஹு-ஹூ! எல்லா அவிசுவாசத்திலிருந்தும், வேதாகமத்தை அவமதிக்கிற எந்தக் காரியத்திலிருந்தும் விலகியிருங்கள். தேவனுடைய வார்த்தையை அவமதிக்கிற எந்தக் காரியத்திலிருந்தும், அதிலிருந்து விலகியிருங்கள்! என்னுடைய சுகமளிக்கும் ஆராதனைக்கு முன்னர் நான் இவைகளைக் குறித்து சரியான நேரத்தில் பேசி முடித்தால், நான் அதன் பேரில் சிறிது பேச விரும்புகிறேன், அவமரியாதைகள்.

22 இப்பொழுது, நாம் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு முன்பு அல்லது அதை முயற்சி செய்ய முயற்சிக்கும் முன்பு, நாம் ஜெபிப்போமாக. எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் இந்தக் காலையில் இயேசுவின் நாமத்தில் உம்முடைய பிரசன்னத்திற்குள்ளாக வந்து, நாங்கள் உலகத்தின் காரியங்களோடு எங்களை விட்டு விலக்கிக் கொண்டதாக உரிமை கோருகிறோம், அது தேவனுக்கும், உலகத்தைப் பொருட்படுத்துகிற உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய முடியாது என்று அவரால் கூறப்பட்டுள்ளது; நாம் ஒன்றை வெறுத்து மற்றொன்றை நேசிக்க வேண்டும் அல்லது ஒன்றை நேசித்து மற்றொன்றை வெறுக்க வேண்டும்.

23 நாங்கள் நித்திய ஜீவனோடு தொடர்பு கொண்டிருக்கிறோம் என்று இந்தக் காலையில் நாங்கள் விசுவாசிக்கிறோம், நாங்கள் விசுவாசத்தினால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியானவர் எங்களுடைய ஜீவியங்களில் ஜீவித்து நம்மை வழிநடத்திக்கொண்டிருக்கிற அத்தாட்சியை உடையவர்களாயிருக்கிறோம். இதற்காக நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம், நாங்கள் பாவத்தைக் காணும்போது, எவ்வளவு லேசானதாயிருந்தாலும், அது எவ்வளவு அழகாகக் காணப்பட்டாலும் அது ஒரு பொருட்டல்ல, எங்களுக்குள் இருக்கும் ஏதோ ஒன்று எங்களைத் திடுக்கிடச் செய்கிறது, அதிலிருந்து விலகிடச் செய்கிறது, அந்தக் கார் பயங்கர வேகத்தில் வருவதைக் குறித்து நான் விளக்கிக் காண்பித்து போலவே. நாம் எந்த இடத்திலும் பாவத்தில் சிக்கிக் கொள்ள விரும்பவில்லை. அதிலிருந்து விலகியிருப்போமாக.

24 இப்பொழுதும், கர்த்தாவே, இந்தக் காலையில் அநேகர் சுகவீனமாயும், தேவையுள்ளவர்களுமாய் இருப்பதை உணர்ந்து, நான் அவர்களுக்காக ஜெபிப்பேன், கர்த்தாவே, விசேஷமாக இந்தக்

காலையில் கூடாரத்தில் ஜெப வரிசைக்குள் வரும் இவர்களுக்கு நீர் விசுவாசத்தை அளிப்பீர் என்றும், பாரமான யாவற்றையும், எல்லா—எல்லா அவிசுவாசத்தையும் தள்ளிவிட்டு, அதிலிருந்து சீக்கிரமாய் விலகி, விசுவாசிக்கும்படி விசுவாசத்தோடு கர்த்தராகிய இயேசுவினிடத்திற்கு ஓடிப்போக வேண்டும்.

25 மருத்துவமனைகளில் உள்ளவர்களுக்காகவும், சுகமளிக்கும் வீடுகளில் உள்ளவர்களுக்காகவும் நான் ஜெபிக்கிறேன். மேலும், கர்த்தாவே, நான் என் தாயாருக்காக ஜெபிக்கிறேன். கர்த்தாவே, இதுவரை நீர் அவளை எங்களோடு வைத்திருக்கிறீர், நாங்கள் இதற்காக உமக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். மேலும் விசுவாசத்துடன், நாம் விரும்பும் கரங்களுடன், முதலாவதாகத் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளவும், அவள் செல்வது அவருடைய சித்தம்தானா என்று பார்க்கவும் கரம் நீட்டுகிறோம். அது அவருடைய சித்தம் என்றால், அதுவே எங்களுடைய சித்தம், ஆனால் முதலில் சாத்தான் இந்தப் பொல்லாங்கைச் செய்தானா என்பதை நாங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறோம், அது நமக்கு ஒரு சோதனையை அளிக்கும்படி எங்களில் அன்பு கூருகிறவர்களுக்கு நன்மைக்காக ஒன்று சேர்ந்து கிரியை செய்து கொண்டிருக்கிறது. அப்படியானால், கர்த்தாவே, நாங்கள் கடமையின் பாதையில் தீரமாக நிற்க விரும்புகிறோம்.

26 பிதாவே, இந்தக் காலையில் இந்தத் தொலைபேசி அழைப்புகள் மற்றும் விசேஷித்த வேண்டுகோள்களையும், அங்கே அலுவலகத்தில் காத்திருக்கிற எல்லாவற்றையும் நினைவு கூரும்படி நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். எங்குமுள்ள எங்களுடைய அன்பார்ந்தவர்களை ஆசீர்வதியும்.

27 இன்றைக்கு கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டிய தருணம் வந்திருப்பதால், கர்த்தாவே, இவை ஆழமானவை என்பதையும், ஜனங்களுடைய இருதயத்தில் உள்ள உத்தமமான காரியங்கள் என்பதையும் நாங்கள் உணருகிறோம். அவர்கள் ஒருபோதும் அவைகளை மதிகேடாய் கேட்கவில்லை; அவர்கள் சத்தியத்தை அறிந்து கொள்வதில் ஆர்வங்கொண்டுள்ள காரணத்தால் அவர்கள் அவைகளைக் கேட்டனர். உம்முடைய வசனமே சத்தியம்.

28 எனவே, பிதாவே, நீர் இந்தக் காலையில் இந்தச் சத்தியத்திற்குள்ளாக, வார்த்தையோடு இணைக்குமாறும், எங்களுடைய சிந்தைகளை இணைக்குமாறும், கர்த்தாவே, இந்தப் போதனை இல்லத்தை விட்டு வெளியேறும் இன்று, நாங்கள் இன்னும் நன்கு புரிந்துகொள்ள எங்களுக்கு உதவும்படிக்கும், அது எங்களுடைய ஆத்துமாக்களுக்கு நன்மையாயிருக்கும்படிக்கு நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் இதைத் தேவனுடைய மகிமைக்காக அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்!

29 இப்பொழுது, இங்கே சில கைக்குட்டைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, நாம் ஜெபிக்கப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன், நம்மால் முடிந்தளவு சீக்கிரத்தில் நாம் அதைச் செய்வோம். இப்பொழுது, சரியான நேரத்தில் நமக்கு ஏறக்குறைய ஒன்றரை மணி நேரம் உள்ளது. நான் இதற்கு முன்பு கூறியுள்ளதுபோல, இவை அனைத்திற்கும் என்னால் பதிலளிக்க முடியுமா அல்லது இல்லையா என்பதை நான் சரியாக அறியேன். ஆனால் இன்றைக்கு நாம் திட்டத்திற்காகத் திட்டமிட்டுள்ள கேள்விகளுக்கும், ஜனங்களுடைய விசுவாசத்திற்கு உதவியாக இங்கே ஒரு சிறு பிரசங்கத்தை வைத்துள்ளோம், அதன்பின்னர் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கவுள்ளோம். இன்றிரவு ஆராதனைகளையும், வாரத்தின் நடுப்பகுதி ஜெபக் கூட்டங்களையும், மனிதனுடைய கூட்டங்கள் போன்றவற்றையும் நினைவில் கொள்ளுங்கள்.

30 அடுத்த ஞாயிற்றுக் கிழமையைக் குறித்து எனக்குத் தெரியாது... என் இருதயத்தில் ஒரு—ஒரு செய்தி இருக்கிறது, முடிந்தால், அதைச் சபைக்குக் கொண்டுவர விரும்புகிறேன், கர்த்தர் அதை அனுமதிப்பாரேயானால், வரும் ஞாயிற்றுக்கிழமை, பிரசங்கிப்பதற்காக இந்த வாரம் எனக்கு மிகவும் சிறப்பான ஒரு—ஒரு விஷயம் தோன்றியுள்ளது, ஒரு செய்தியின் பேரில் பிரசங்கிக்க, சுவிசேஷ செய்தியை...நம்முடைய கர்த்தர் வழிநடத்துகிறபடியால் அதைக் குறித்து சற்று நேரம் கழித்து நாம் பார்ப்போம்.

31 இப்பொழுது எனக்காக ஜெபியுங்கள், ஏனென்றால் சில மகத்தான தீர்மானங்கள் செய்யப்பட வேண்டியதாயுள்ளது. சகோதரன் ராய் பார்டர்ஸ் (அவர் இன்று காலை இங்கே எங்காவது அமர்ந்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்), அவர் கூட்டங்களைக் கவனித்துக்கொள்கிறார், மேலும், கடந்த சில மாதங்களில் அவருக்கு வந்த அழைப்பிதழ்கள், செல்ல வேண்டிய இடங்கள், மற்றும் கூட்டங்களுக்காக அவரை அழைக்கும் நபர்கள் என அனைத்தும் அடங்கிய ஒரு புத்தகம் அவரிடம் உள்ளது. எனவே நான் என்ன செய்தாலும், அது சரியாக இருப்பதாக, எண்ணிப்பார்க்கும்படியாக, நான் சரியான தீர்மானத்தைச் செய்யத் தேவன் என்னை அனுமதிக்கும்படி நீங்கள் ஜெபிக்கிறீர்கள்.

32 இப்பொழுது நாம் கேள்விகளுக்குக் கூர்மையாகப் பதிலளிப்பது...ஆகையால்தான் நான் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறேன் (நாங்கள் ஒரு சுகமளிக்கும் ஆராதனையையோ அல்லது ஏதோ ஒன்றையோ ஒருபோதும் விளம்பரப்படுத்தவில்லை, எனவே அது இங்குள்ள சபையோர்களாகவே இருக்கும்), அவர்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை நாங்கள் கண்டறிய முடிந்தது.

33 சகோதரன் நெவில் இங்கே பின்னால் அமர்ந்திருக்கிறார், நம்முடைய விலையேறப்பெற்ற சகோதரனும், போதகருமான

அவர்—நான் தேவனுடைய இராஜ்ஜியத்தில் அவர் முன்னேறிச் செல்வதைக் காண மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்; கடந்த இரண்டு வருடங்களாக அவர் மற்ற எல்லா வருடங்களையும் சேர்த்து வைத்துள்ளதைக் காட்டிலும் அதிகமாக முன்னேறிவிட்டார் என்று நான் நினைக்கிறேன். கர்த்தர் அவரை எவ்வளவாய் ஆசீர்வதித்திருக்கிறார்! நான் அதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

34 நான் அதை அவர் முகத்திற்கு நேரே சொல்லமாட்டேன்... அவருக்குப் பின்னால் தான் சொல்வேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் ஒரு பையனாய் இருந்த முதற்கொண்டே சகோதரன் நெவில் அவர்களை நான் அறிவேன். பார்த்தீர்களா? நான் அதை அறிவேன். சகோதரன் நெவில்...நான் இதை விசுவாசிக்கிறேன்; நம்மெல்லோரைப் போல அவரும் தவறுகளுக்கு ஆளாகிறார்; நாம்—நாம் எல்லோரும் அதற்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம், நாம் இன்னமும் மானிடர்களாகவே இருக்கிறோம். ஆனால் அது அவருடைய இருதயத்திலிருந்து வரவில்லை; நான் அதை நம்பவில்லை. அவர் உத்தமமாயிருப்பார், அவர் எப்பொழுதுமே உத்தமத்தில் மிக உயர்ந்தவராயிருப்பார்.

35 அவர் இந்தச் செய்திக்கு வந்தபோது, இப்பொழுது அவர் புரிந்து கொண்டிருக்கிற காரியங்களைப் புரிந்து கொள்ளாதபோது, நான் அவரைச்—அவரைச் சபையின் வாக்கெடுப்பின் மூலம் இங்குப் போதகராக நான் கொண்டுவந்தேன். ஆனால் தனக்கு ஒரு நல்ல உறுதியான பின்னணி இருப்பதாக நான் கருதும் வரை, அதை விட்டுக்கொடுக்காமல் நிதானமாகப் பரிசீலித்து, மரியாதையுடன் அணுகும் அவரது நேர்மையால்தான், இப்போது அவர் முன்னுக்கு வரும்போது, தான் எந்த நிலையில் நிற்கிறார் என்பதை அவர் அறிந்திருக்கிறார்.

36 எனவே நான்—நான் இந்தக் கூடாரத்திற்காக மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறேன். அவர்கள் அன்றொரு இரவு அவர்கள்—அவர்கள் இங்கே ஒரு கூட்டம் நடத்தினார்கள், அதில், ஒரு புதிய கூடாரத்தைக் கட்டுவதா அல்லது இந்தக் கூடாரத்தை விரிவுபடுத்திப் பெரிதாக்கி, அதில் ஞாயிறு பள்ளி அறைகளை அமைப்பதா என்பது குறித்து விவாதிக்கப்பட்டது; சபை ஒருமனதாக விரிவாக்கத்திற்கு வாக்களித்தது. அதாவது, இந்தக் கூடாரத்திற்கு வெளியே ஒரு புதிய விரிவாக்கத்தைக் கட்டி, அதை இன்னும் பெரிதாக்கி, எல்லா வகுப்பினருக்கும் வகுப்புகள் இருக்கும் வகையில் ஞாயிறு பள்ளி அறைகளை அமைத்து, தரையில் தரைவிரிப்பு விரித்து, அதன் மேல் பிர்ச் மரப்பலகைகளைப் பதித்து, அதை மிகவும் அழகாகச் சீரமைத்து, வெளிப்புறத்தில் பெட்ஃபோர்ட் கற்களைப் பதிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே, சபை அவ்வாறு வாக்களித்தது. கட்டிடக் கலைஞர்களும் மற்றவர்களும் இப்பொழுது பணியில் இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நாளை அதை

ஒரு—ஒரு பெரிய சபையாக்க, பின்புறமாக விரிவுபடுத்துவதற்கும், மேலும் அதைச் சுற்றி மாற்றியமைப்பதற்கும் நாளை அதற்கொரு கூட்டம் நடைபெறுகிறது. எனவே அதற்காக நாம் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருப்போம்.

37 இப்பொழுது, இந்தக் கேள்விகளில் நான்...அவைகளில் சிலவற்றை நான் அவைகளை நோக்கிப் பார்க்கவேயில்லை. நான் அதைக் கண்டறிய வார்த்தைகளை மெதுவாக உச்சரிக்க வேண்டியிருக்கலாம். அது உங்களுடைய எழுத்து அல்ல, ஆனால் அது என்னுடைய கல்வி மட்டுப்படுத்தப்பட்டதாயுள்ளது.

151. நாம் ஞானஸ்நானம் பண்ணப்படுவதை விசுவாசிக்கிறோம்... அப்போஸ்தலர் 2:38, ஆனால் மற்ற ஞானஸ்நானத்தைக் குறித்து நாம் எப்படி ஜனங்களுக்குப் பதிலளிக்க முடியும்? அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது இல்லையா? மேலும் கடந்து சென்று, ஒருபோதும் வெளிச்சத்தைப் பெறாதவர்களும் கூட?

38 இப்பொழுது, இது ஒரு—ஒரு நல்ல கேள்வி. இப்பொழுது, நான் மீண்டும் கூறட்டும் (புரிகிறதா?) இந்தக் கேள்விகளின் பேரில் நீங்கள்—நான் அவைகளுக்கு உங்களுடைய சிந்தனைகளின்படி பதிலளிக்கவில்லையென்றால்...நான் அவைகளை வேதப்பிரகாரமானதாக்க, நான் அறிந்துள்ளவரை வேதவாக்கியத்திற்கு நெருக்கமாக அவைகளுக்கு பதிலளிக்கப் போகிறேன்.

39 இப்பொழுது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கொடுக்கப்படும் தண்ணீர் ஞானஸ்நானத்தின் வேதப்பிரகாரமான வழி, அது அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:38-லும் மற்றவை, வேதம் முழுவதிலும் காணப்படுகிறது. இன்றைக்கு அநேக ஜனங்களும், ஏறக்குறைய எல்லா சபைகளும் துவக்கத்திலிருந்தே, அதைத் துவங்கினவர், அவர்கள் ஜனங்களுக்குப் பிதாவின் நாமத்தில், குமாரனின் நாமத்தில், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். இப்பொழுது, அவர்கள் ஒரு பிழையினூடாக அதைச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட கட்டளை வேதாகமத்தில் எங்குமே கிடையாது. அது வேதவாக்கியங்களில் கூடக் காணப்படவில்லை.

40 பேதுரு...இயேசு கூறினதை மத்தேயு எழுதிக் கொண்டிருந்தபோது...அவர்கள் மத்தேயு 28:19-ஐ எடுத்துக் கொண்டனர், "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து"...

41 பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, அது பட்டப்பெயர்கள், ஒரு நாமம் அல்ல. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதாகும். பிதா, குமாரன், பரிசுத்த

ஆவி...அவர்...அப்பொழுது அவர்கள் வேதம் முழுவதிலும் ஞானஸ்நானம் கொடுத்தார்கள், ஒவ்வொரு நபரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். சரித்திரத்தினூடாக அவர்கள் ரோமாபுரியிலுள்ள நிசாயாவில் உள்ள கத்தோலிக்க சபையின் நிசாயா ஆலோசனை சங்கம் நிறுவப்படும் வரை லவோதிக்கேயா சபை வரை வந்து கொண்டேயிருந்தனர், (நான் உங்களுடைய மன்னிப்பை வேண்டுகிறேன்).

42 பெந்தேகோஸ்தே சபையானது...இரண்டு குழுக்கள், அவர்கள் பிரிந்தபோது, ஒருவர் வார்த்தையோடு, எழுதப்பட்ட வார்த்தையோடு தரித்திருக்க விரும்பினர், மற்றவர்கள் ஒரு உன்னதமான சபையை விரும்பினர். அது கான்ஸ்டன்டைன் அரசாட்சியின் காலமாயிருந்தது. கான்ஸ்டன்டைன் ஒரு பக்தியுள்ளவன் அல்ல; அவன் துவக்கத்தில் ஒரு அஞ்ஞானியாக இருந்தான். ஆனால் அவன்—அவன் இணைக்க விரும்பிய ஒரு அரசியல்வாதியாக இருந்தான்...ரோமாபுரியின் பாதி பேர் கிறிஸ்தவர்கள்; அதில் பாதி அஞ்ஞான மார்க்கமாயிருந்தது, எனவே அவன் அஞ்ஞான மார்க்கத்தையும், சில கிறிஸ்தவ மார்க்கத்தையும் ஏற்றுக்கொண்டான்; அவர்கள் தங்களுக்கென ஒரு சொந்த மதத்தை உருவாக்கிக்கொண்டனர்.

43 ஆகையால் வேதாகமத்தை அலட்சியம் செய்யும்படி, கத்தோலிக்க சபையானது, அது விரும்பின எந்தக் காரியத்தையும் மாற்ற அல்லது செய்யத் தேவன் சபைக்கு அதிகாரத்தை அளித்துள்ளார் என்று நம்புகிறது. புரிகிறதா? ஆகையால், கத்தோலிக்க சபை சரியாயிருந்தால், தேவன் செய்தது உண்மையாயிருந்தால், அப்பொழுது கத்தோலிக்கர்களைத் தவிர நாம் யாவரும் தவறாயிருக்கிறோம் (புரிகிறதா?), கத்தோலிக்க சபை சரியாயுள்ளது. அப்படியானால் மெத்தோடிஸ்டு சபை சரியாயிருக்கிறது. அப்படியானால் பாப்டிஸ்டு சபை சரியாயிருக்கிறது, அல்லது எல்லா ஸ்தாபனங்களும் சரியாயிருக்கின்றன. புரிகிறதா? அவர்களுக்கு ஒரு உரிமை உண்டு. அப்படியானால் யார் சரியானவர்? வேதாகமம் சொல்ல விரும்பும் எதையும் மாற்றி, அதை "மரியே வாழ்க" என்பது போன்ற வேறு விதமான கோட்பாடுகளாக மாற்றும் அதிகாரம் கத்தோலிக்கர்களுக்கு இருந்தால், மெதடிஸ்டுகளுக்கு, "முழுக்கு ஞானஸ்நானம் தவறு; நாங்கள் தெளிப்போம்" என்று சொல்ல உரிமை உண்டு, மேலும் அவர்கள் அனைவரும் சொல்வது சரிதான், ஏனென்றால் ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பியதைச் செய்ய முடியும், இப்போது, சபை என்பது யார்? அது மெத்தோடிஸ்டா, பாப்டிஸ்டா, பிரஸ்பிடேரியனா, கத்தோலிக்கமா, அல்லது அது என்ன? புரிகிறதா?

44 ஆகையால் எல்லா ஞானத்திற்கும் ஊற்றுமூலராகிய தேவனால் அதைப் போன்ற ஒரு காரியத்தைச் செய்ய முடியாது என்பதை

உங்களால்—நீங்கள் அறிந்து கொள்ள முடியாது. அப்படிப்பட்ட ஒன்றும் இல்லை...இயற்கைக்கு மேம்பட்ட மனிதனின் அறிவுத்திறன் ஒருபுறம் இருக்க, அதில் பொது அறிவு கூட இல்லை. சரியான ஒரு காரியம் உண்டு; அதுதான் வார்த்தை. வார்த்தை சரியே!

45 அப்படியானால், கத்தோலிக்க சபை இன்று காலை, "நாங்கள் ஞானஸ்நானத்தை முழுவதுமாக விட்டுவிட்டு, ஒவ்வொரு காலையிலும் ஒரு கட்டி சர்க்கரையை சாப்பிடுவோம்" என்று சொல்ல விரும்பினால். அதைத்தான் நாம் பாவ மன்னிப்புக்காக ஏற்றுக்கொள்வோம்!" அப்பொழுது அது சரியாயிருக்க வேண்டும், ஏனென்றால் தேவன் அந்த அதிகாரத்தைச் சபைக்கு அளித்தார்.

46 ஆனால் நீங்கள் பாருங்கள், எனக்கு வார்த்தையே சரியானது, ஏனென்றால் வேதாகமத்தின் முடிவிலே தேவன் தம்முடைய வார்த்தையில், "இதிலிருந்து ஒரு வார்த்தையை எடுத்துப் போடுகிறவன் அல்லது இதனோடு ஒரு வார்த்தையைக் கூட்டினால், ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய பங்கு எடுத்துப்போடப்படும்" என்று கூறினார். எனவே எனக்கு அது வார்த்தையாயுள்ளது!

47 எவரும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டதாக வேதத்தில் அப்படிப்பட்ட ஒரு காரியமே இல்லை; ஏனென்றால் அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது. *பிதா* என்பது நாமமல்ல; *குமாரன்* என்பது நாமமல்ல; *பரிசுத்த ஆவி* என்பது நாமமல்ல, ஆனால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாயிருக்கிறது. காலங்களினூடாக அப்போஸ்தலர்களும் மற்ற யாவரும் அதை அவர்கள் அங்கீகரித்துள்ளனர்.

48 இப்பொழுது அடுத்த கேள்வி...வேதப்பிரகாரமாக அது உண்மையே. அதுதான் சத்தியம்.

49 அவர்கள் வேதத்தில் இயேசு கிறிஸ்துவின் நாமம் அல்லாமல் வேறு வழியில் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றிருந்த ஜனங்களைக் கண்டறிந்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பு—அப். 19:5ல், அவர்கள் மீண்டும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கட்டளையிடப்பட்டனர். சரியே! எனவே அது வேதப்பிரகாரமான சத்தியமாயுள்ளது.

50 இப்பொழுது, எந்தப் பேராயரும் இல்லை; அங்கே தலைமை பேராயர் இல்லை; ஊழியக்காரன் இல்லை; வேறு யாரும் அதற்கு எதிராக ஒரு வார்த்தையும் கூற முடியாது, ஏனென்றால் அது சத்தியமாயிருக்கிறது. பார்த்தீர்களா?

51 அன்றொரு நாள் சிக்காகோவில் அங்கு நின்றிருந்த முந்நூறு ஊழியக்காரர்களுக்கு முன்பாக விவாதிக்கவும் கேட்கவும்...நான் கேட்டேன்...நான் கர்த்தர் என்னிடம் கூறினார், அவர் எனக்கு ஒரு தரிசனத்தை அளித்து, நாம் எங்கே இருக்க வேண்டும் என்றும்,

என்ன செய்ய வேண்டும் என்றும் என்னிடம் கூறினார். நான் முந்நூறு திரித்துவ போதகர்களுக்கு முன்பாக நின்று, "இப்பொழுது, நான் இந்த உபதேசத்தில் மிகவும் தவறாக இருந்தால், உங்களில் சிலர் இங்கே எழும்பி நின்று, ஸ்தாபன பாடப் புத்தகம் இல்லாத வேதவாக்கியத்தின் மூலம் நான் எங்கே தவறாயிருக்கிறேன் என்பதை எனக்குக் காண்பியுங்கள். சர்ப்பத்தின் வித்து என்ற அப்படிப்பட்ட ஒரு காரியமோ அல்லது நான் போதித்து வந்த அதைப் போன்ற ஒரு காரியமோ இல்லாமற்போனால், இங்கே வந்து வேதவாக்கியங்களைக் கொண்டு எனக்குக் காண்பியுங்கள்" என்று கூறினேன். ஒருவரும் அசையவில்லை. (புரிகிறதா?), ஏனென்றால் அது செய்யப்பட முடியாது. அது உண்மை. வித்தியாசமாயிருக்க வேண்டும் என்பதற்காக அல்ல, ஆனால் அது உண்மையாயிருக்கிறது; அது வார்த்தையாயுள்ளது. அங்கே... யாரும் அதைக் குறித்து விவாதிக்க முடியாது; அது தேவனுடைய வார்த்தையாயுள்ளது; எவருமே அதைச் செய்ய முடியாது. பார்த்தீர்களா?

52 ஆனால் இப்பொழுது, "இல்லாதவர்கள்..." இது சரியா என்பதை நிச்சயப்படுத்த நான் இதை வாசிக்கட்டும். பார்த்தீர்களா? "மற்ற ஞானஸ்நானங்களைக் குறித்து, அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது இல்லையா? மேலும், ஒருபோதும் ஒளியைப் பெறாமல் மரித்துப்போய்விட்டவர்களைக் குறித்தும் என்ன?"

53 பாருங்கள், உலகத்தோற்றத்திற்கு முன்னர் அங்கிருந்த அனைவரையும், தேவன் தம்முடைய ஜனங்களை அழைத்து, தம்முடைய சபையை நியமித்தார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்—நம்புகிறேன். வேதம் அதைப் போதிக்கிறது என்று நான் நினைக்கிறேன். தேவனை தன்னுடைய முழு இருதயத்தோடும் நேசிக்கிற ஒவ்வொரு மனிதனும் சத்தியத்தைத் தேடுவான் என்று நான் விசுவாசிக்கிறேன். அவர்கள் அதைச் செய்வார்கள் என்று நான்—நான்—நான் நம்புகிறேன். தேவனை நேசிக்கிற ஒவ்வொரு மனிதனும் அதைச் செய்வான்.

54 நான் நினைப்பது ஒரு மனிதன் அறியாமையினால், அவன் தவறாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டான் என்பதை அறியாமல் தவறாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தால்...இப்பொழுது, இதை வேதப்பூர்வமாக என்னால் கூற முடியாது. ஆனால் ஒரு மனிதன் சரியாக என்ன செய்ய வேண்டும் என்பதை அறியாமலிருந்தால், அவன் தன்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் மிகச் சிறந்த ஒரு காரியத்தைச் செய்தான், தேவன் அதைக் கண்டு கொள்ளாமல் விட்டு, எப்படியும் அவனை இரட்சிப்பார் என்று நான் நம்புகிறேன், ஏனென்றால் அவன்...நினைவில் கொள்ளுங்கள், வெஸ்லியின் நாட்களில், லூத்தரின் நாட்களில் சீர்திருத்த காலத்தில், தேவன் அவர்களைக் கனப்படுத்திய அந்த மகத்தான தேவனுடைய

மனிதர்களை அவர் கனப்படுத்தினார் என்று நிரூபித்தார், அவர்கள் விசுவாசத்தில் மரித்தார்கள், (புரிகிறதா?), அவர்கள் பெற்றிருந்த முழு வெளிச்சத்தோடு மரித்தார்கள்.

55 மேலும் நான் இன்னும் நம்பும் சில விஷயங்கள் இருக்கலாம்... "பழைய நாகரீகமான எழுப்புதல் வேளையா?" என்ற தலைப்பில் சார்லஸ் புல்லர் கூறுவதை எவரேனும் கேட்டீர்களா? அவர் எனக்கு மிகவும் விருப்பமான வேதாகம ஆசிரியர்களில் ஒருவர், அதே சமயத்தில் அவர் வயோதிகராயிருக்கிறார், மேலும்...ஆனால் அவர் ஒரு மகத்தான வேதாகம போதகர் என்று நான் நினைக்கிறேன். அவர் இந்தக் காலையில் கூறினார் (அவர் தீர்க்கதரிசனத்தின் பேரில் போதித்துக்கொண்டிருந்தார் என்று நான் நினைக்கிறேன்); வரவிருக்கும் காலத்தில் மகத்தான காரியங்கள் இருக்கின்றன என்றும், சபைக்கு இதுவரை தெரியாத காரியங்கள் மக்களுக்கு வெளிப்படுத்தப்படும் என்றும்—என்றும் அவர் கூறினார். நான் அதற்கு "ஆமென்!" என்றேன். இந்நாட்களில் ஒன்றில் பூமியை நிரப்பி வழியும் மகத்தான வெளிச்சம் நமக்கு இன்னமும் வந்து கொண்டிருக்கிறது என்றும், நான் நம்புகிறேன், ஒரு குறுகிய காலத்திற்கு என்றும் நான் நம்புகிறேன், ஒருகால் இன்னும் ஒரு சில மாதங்களில் இருக்கலாம். ஆனால் மகத்தான வெளிச்சம் வந்து கொண்டிருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன்.

56 எந்தவொரு நபரும் தமது விசுவாசம், நேர்மை மற்றும் தங்களிடம் உள்ள முழு ஒளியில் நடப்பதன் மூலம் இரட்சிக்கப்படுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

57 நினைவிருக்கட்டும், கர்த்தராகிய இயேசுவின் வருகையில், அவர்கள் நடக்க வேண்டிய எல்லா ஒளியிலும் நடந்தவர்களை அவர் கண்டுகொண்டார் என்பது நினைவிருக்கிறதா? என்ன நடந்தது என்பது நினைவிருக்கிறதா? "அவன் ஒரு நல்ல மனிதனல்லவா, ஒரு ரோம நூற்றுக்கதிபதியும் கூட, அவன் நம்முடைய நகரத்தை—இல்லை நம்முடைய ஜனங்களுக்கு ஒரு ஜெப ஆலயத்தைக் கட்டியிருக்கிறான், அவன் (அவன் செய்த இந்த எல்லாக் காரியங்களையும்)—அவனுக்காகக் கேட்கப்படும் இந்த ஆசீர்வாதத்திற்கு அவன் பாத்திரவான்." பாருங்கள், தேவன் புரிந்துகொள்ளுகிற பிதாவாயிருக்கிறார்; அவர் உங்களுடைய இருதயத்தை அறிந்திருக்கிறார், நீங்கள் உண்மையாகவே ஒளியைக் கண்டாலும் அல்லது நீங்கள் ஒளியைக் காணாவிட்டாலும்; அவர் அறிந்திருக்கிறார்.

58 இப்பொழுது, இந்தக் கேள்விக்கான சரியான பதில் இதுதான் என்று நான் என் முழு இருதயத்தோடு உண்மையாகவே விசுவாசிக்கிறேன், சரியான ஞானஸ்நானம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கொடுக்கப்படுவதே, தங்களுடைய இருதயங்களில் சுயநலமின்றி, முரணாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள், "சரி, நான் அதனோடு நேரத்தை வீணாக்க விரும்பவில்லை!"

என்று கூறுகிறார்கள்...இப்பொழுது அந்த நபர், அது அவர்களையும் தேவனையும் பொறுத்தது. ஆனால் அவர்கள் எந்த வித்தியாசத்தையும் அறிந்திருக்கவில்லையென்றால், அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். நான்—நான் அதை என் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறேன், ஏனென்றால் அவர்கள் எந்த வித்தியாசத்தையும் அறிந்திருக்கவில்லை.

நாம் அந்த ஒன்றின் பேரில் நீண்ட, நீண்ட நேரம் தரித்திருக்கலாம், ஆனால் நம்மால் முடிந்தால் அவைகள் யாவற்றையும் நாம் பார்க்க முயற்சிக்கிறோம்.

152. நீங்கள் தயவு கூர்ந்து எபிரெயர் 6:4 மற்றும் 6 வசனங்களையும், எபிரெயர் 10:26-39 வசனங்களையும் விளக்கிக் கூறுவீர்களா? இது பரிசுத்த ஆவியின் ஜனங்களைக் குறிக்கிறதா அல்லது பரிசுத்தமாக்கப்பட்ட ஜனங்களைக் குறிக்கிறதா என்பதை தயவுசெய்து விளக்கவும்; தயவுசெய்து அந்த வித்தியாசத்தை விளக்குங்கள்.

59 பாருங்கள், அந்த நபர் எபிரெயர் 6 மற்றும் 4-ஐ எங்கே குறிப்பிடுகிறார் என்று நாம் பார்ப்போம். உங்களுக்குள்ளாக உள்ள ஏதோ ஒரு காரியத்தை வெளியே இழுக்கிற—அந்த வேதாகம கேள்விகளை நான் விரும்புகிறேன். மற்றவிதமாக நீங்கள் பெற்றுக்கொள்ளாத ஏதோ ஒரு காரியத்தை நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்கள். ஏனென்றால் நீங்கள்—நீங்கள் மற்றவர்களுடைய சிந்தை என்னவென்பதையும், அவர்களுடைய இருதயங்களில் என்ன இருக்கின்றது என்பதையும் (புரிகிறதா?) நீங்கள் பெற்றுக் கொண்டு, அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இப்பொழுது எபிரெயர் 10-ம் அதிகாரம் உள்ளது. இங்கே எபிரெயர் 6-மற்றும் 4. சரி.

> *ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும்,*
>
> *தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும்,*
>
> *மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்.*

இப்பொழுது அந்த ஒன்று. இப்பொழுது, எபிரெயர் 10:26. சரி, எபிரெயர் 10 மற்றும் 26.

> *சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால்,*

பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல்,

நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.

மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே;

தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள்.

60 அவைகள் இரண்டுமே கிட்டத்தட்ட ஒரே காரியத்தைக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது, நான் இதை அந்த நபருக்கு விளக்கிக் கூற விரும்புகிறேன். இப்பொழுது, நீங்கள் இங்கே எபிரெயர் 6 மற்றும் 4-ல் கவனிப்பீர்களேயானால், அது, "ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டவர்களுக்கு அது கூடாத காரியம்..." என்று கூறியுள்ளது. அது—அது சற்று முன்னர் வாசிக்கப்பட்ட இந்த மற்ற வேதவாக்கியத்தோடு சம்பந்தப்பட்டுள்ளது. நீங்கள் பிரகாசிப்பிக்கப்பட்டிருந்து, அதன்பின்னர் உங்களுடைய பிரகாசியொளியிலிருந்து விலகினால், அந்த நபர் மீண்டும் தன்னுடைய ஸ்தானத்தை அடைவது கூடாத காரியம். பார்த்தீர்களா?

61 இப்பொழுது, இந்தப் புறக்கணிப்பைத் தொடர்ந்து வரும் தண்டனையை மாத்திரமே எபிரெயர் கூறுகிறது. கிறிஸ்துவை புறக்கணிப்பது உலகத்தில் உள்ள பயங்கரமான காரியங்களில் ஒன்றாகும், அது வேத வெளிச்சத்தை புறக்கணிப்பதாகும்.

62 இப்பொழுது, நீங்கள் கவனியுங்கள், "ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது..." பார்த்தீர்களா? இங்கே நாம் இருக்கிறோம். "ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், ருசிபார்த்தும் (கவனியுங்கள்), பரம ஈவை ருசி பார்த்தும்..." அவர்கள் அதன் விளிம்பில் இருந்தார்கள்: "பரம ஈவை *ருசி* பார்த்தும்...கூடாத காரியம்."

63 இப்பொழுது, அவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்கு ஒருபோதும் வரவில்லை என்பதை நீங்கள் கவனியுங்கள். பார்த்தீர்களா? அவர்கள் அதற்குப் பிரகாசிக்கப்பட்டிருந்தனர்: "பரம ஈவை ருசிபார்த்தும் (புரிகிறதா?), ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றும் (அதைக் ருசிபார்த்ததன் மூலம்.), தேவனுடைய நல்வார்த்தையையும், (அதன் பாகத்தை. புரிகிறதா?)

இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது…"

64 இப்பொழுது, எபிரெயர் 10 இங்கே அதற்கான நியாயத்தீர்ப்பை மாத்திரமே அளிக்கிறது. "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை மிதித்து, பரிசுத்தமாக்கப்பட்டதை அசுத்தமாக எண்ணினவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள்?"

65 இப்பொழுது, இந்த இரண்டையும் ஒன்று சேர்த்து உங்களுக்காகக் கேள்வியை எழுப்புவோம், நாம் ஒரு வேதவாக்கியத்தையும், இதைச் செய்ததாக வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஒரு நபரையும் எடுத்துக் கொள்வோம், அப்பொழுது நாம் கண்டறியலாம்.

66 இப்பொழுது, இன்றைக்கு முழு சபையும் அந்த மாதிரியின் முன் மாதிரியாக உள்ளது. நாம் அதை அறிவோம். ஒரு அடையாளமும், முன்னடையாளமும் உண்டு. இப்பொழுது, இஸ்ரவேல் பாலஸ்தீன தேசத்திலிருந்து, அல்லது, எகிப்திலிருந்து பாலஸ்தீனத்திற்குச் செல்லும் தங்கள் யாத்திரையில் இருந்தபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கான அதனுடைய யாத்திரையில் இன்றைக்கு ஆவிக்குரிய சபைக்கு ஒரு மாதிரியாய் இருந்தது… நீங்கள் அனைவரும் அதை ஒப்புக்கொள்கிறீர்கள், அல்லவா? எல்லா வேத சாஸ்திரிகளும் அதை ஒத்துக்கொள்கிறார்கள், அது அந்த மாதிரியாயிருந்தது.

67 அவர்கள் எகிப்தை விட்டுச் சென்றனர். எகிப்தே உலகமாயிருந்தது. அவர்கள் வெளியே வந்து, ஞானஸ்நானத்தினூடாகச் சிவந்த சமுத்திரத்தண்டை பிரிவினையின் தண்ணீர்களினூடாகச் சென்று, மற்றொரு பக்கத்தில் வெளியே வந்து களிகூர்ந்து தேவனைத் துதித்து, நியாயப்பிரமாணங்களுக்குச் சென்று, அங்கிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குச் சென்றனர்.

68 பாருங்கள், அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடைவதற்கு சற்று முன்பு நீங்கள் கவனித்தீர்களா (புரிகிறதா?), வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் அவர்கள் பிரவேசிப்பதற்கு முன்பு, அது ஒரு சில நாட்கள், பத்து அல்லது பதினொரு நாட்கள் மாத்திரமே இருக்கும், ஒருவேளை அவ்வளவு அதிகமானதாக இல்லாமலிருக்கலாம், ஏனென்றால் அது நாற்பது மைல்கள் தூரத்தில் மாத்திரமே இருந்தது. அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நேராகச் சென்றிருப்பார்கள், நாம் நடந்து வந்த யாத்திரையின் ஒவ்வொரு—ஒவ்வொரு கட்டத்திலும் அவர்கள்—வருடத்தினூடாக வந்திருப்பார்கள். அவர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தனர். அவர்களுக்குப்

பின்னால் பார்வோனுடைய சேனை மூழ்கடிக்கப்பட்டுவிட்டது. அவர்கள் தங்களுடைய சத்துருக்களிடமிருந்து விடுதலையாகி, வனாந்திரத்தினூடாகப் புறப்பட்டுச் சென்று, காதேஸ்பர்னேயாவில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் எல்லையை அடைந்து, அங்கே அவர்கள் தோல்வியடைந்தனர். ஏன்? அவர்கள் ஏன் தவறிப் போனார்கள்?

இப்பொழுது, மோசே பத்து கோத்திரங்களிடத்தில் கூறினான், அவன், "ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒருவனைப் பிரதிநிதியாக அனுப்பி, தேசத்தின் நிலைமை எப்படி இருக்கிறது என்று வேவு பார்க்கச் செல்வான்" என்றான்.

69 இப்போது, அது சரியாகப் பொருந்தவில்லை என்றால்— இன்று காலை நீங்கள் வந்திருக்கும் உங்கள் இடம். நீங்கள்... சபையானது லூத்தரின் மூலமாக நீதிமானாக்கப்படுதலினூடாக, பரிசுத்தமாக்கப்படுதலின் மூலம், மெதோடிஸ்டு மூலம், இப்பொழுது வாக்குத்தத்தத்தின் நேரம் வரையிலும் வந்துள்ளது. வாக்குத்தத்தமானது ஆவியின் அபிஷேகமாயிருக்கிறது, அது பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு முழுவதிலும் கூட வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது (புரிகிறதா?), வாக்குத்தத்தம்: "இதோ, என் பிதா வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை உங்களுக்கு அனுப்புகிறேன்..." என்று பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு கூறினான்.

70 அதுவே வாக்குத்தத்தமாயுள்ளது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமானது இந்தப் பரிசுத்த ஆவியின் தேசத்தில் வாழ்வதாகும். அது சபைக்கான தேவனுடைய வாக்குத்தத்தமாயுள்ளது, அது ஆவியின் வல்லமையில் ஜீவிப்பதாகும். அது வேறொரு உலகம்; அது வேறொரு தேசம். நீங்கள் இருந்த நிலைமைகளிலிருந்து, இந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் வசிப்பதற்கும், வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் வெளியே வர வேண்டும். "பரிசுத்த ஆவியானவர் உங்கள்மேல் வந்தபின், நீங்கள் உன்னதத்திலிருந்து வல்லமையைப் பெறுவீர்கள்..." என்ற வாக்குத்தத்தை நினைவில் கொள்கிறீர்களா?

71 பேதுரு, பழைய மற்றும் புதிய ஏற்பாடு முழுவதும் கொடுக்கப்பட்ட வாக்குறுதி என்று கூறினான்...பெந்தெகொஸ்தே நாள்வரைக்கும், நீங்கள்—நீங்கள் வாக்குத்தத்தம் செய்ததை கண்டறிவீர்கள், அதன்பின்னர் அவர்கள் வாக்குத்தத்தத்திற்குள் பிரவேசித்தனர்.

72 இப்பொழுது, அந்த ஜனங்கள் வெளியே வந்து, இஸ்ரவேலில் பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் கண்டிருந்தனர். அதன்பின்னர் அவன் வேவு பார்க்க ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒரு மனிதனை அனுப்பினான். அவர்களில் சிலர் திரும்பி வந்து...சரி, அவர்களில் சிலர் அதற்கு மேல்

கடந்து செல்லமாட்டார்கள். இருவர் கடந்து சென்றனர். அவர்கள் திரும்பி வந்தபோது, இரண்டு பேர் சுமக்க வேண்டிய அவ்வளவு கனமான திராட்சைக் குலையைக் கொண்டு வந்திருந்தார்கள். இப்பொழுது, அவர்கள் ஒருபோதும் திராட்சை பழங்களை ருசி பார்த்ததேயில்லை. அவர்கள்—அவர்கள் வனாந்திரத்தில் இருந்தனர்; ஆகையால் அந்த ஸ்தலத்தில் கனியும், பொருளும் இல்லாதிருந்தது. அவர்கள் மன்னாவிலிருந்து, பரலோகத்திலிருந்து வந்த அப்பத்திலிருந்து போஷிக்கப்பட்டனர், காடைகள், வனவிலங்குகளால், போஷிக்கப்பட்டனர்.

73 ஆனால் இப்பொழுது அவர்கள் தேசத்திற்குள் சென்று கொண்டிருந்தனர், அவர்கள் ஒரு குலை திராட்சை பழங்களைச் வைத்திருந்தனர், அது இந்தத் திராட்சை பழங்களைச் சுமக்க இரண்டு மனிதர்கள் தேவைப்பட்டது. இந்த இருவரும் தேசத்திற்குள் சென்று திரும்பி வந்து, கரையிலிருந்த மற்ற ஒவ்வொருவருக்கும் இந்தத் திராட்சை பழங்களை ருசி பார்க்கக் கொடுத்தனர். அவர்கள் என்ன செய்தனர்?

அவர்கள் திரும்பிச் சென்றபோது, அவர்கள் திராட்சை பழங்களை ருசி பார்த்தபடியினால் சந்தோஷப்படுவதற்குப் பதிலாக, அதற்குப் பதிலாக, அவர்கள் தங்களுடைய கோத்திரங்களுக்குத் திரும்பிச் சென்று, "ஓ, பெலிஸ்தியரின் பெரிய மதில்கள் சூழ்ந்த பட்டணங்களையும், அல்லது ஏத்தியர், பெர்சியர்கள், மற்றும் அங்குள்ள எல்லா வித்தியாசமான *ஜாதிகளையும்* கண்டிருக்கிறோம்" என்று கூறினர். "ஏன்," "அவர்கள் ராட்சதர்கள். ஏன், நாங்கள் அவர்களுக்குப் பக்கத்தில் சிறிய வெட்டுக்கிளிகளைப் போல் காணப்படுகிறோம். நாம் அந்த நிலத்தைக் கைப்பற்ற முடியாது. நீர் ஏன் எங்களை இங்கே வெளியே கொண்டு வந்தீர்?" என்று கேட்டனர். பார்த்தீர்களா? அவர்கள் ஒவ்வொருவரும் வனாந்திரத்தில் அழிந்து போனார்கள் என்று வேதம் கூறியுள்ளது; அவர்கள் மரித்தார்கள். அவர்கள் என்ன செய்தனர்? அவர்கள் எல்லைக்கோடு விசுவாசிகளாயிருந்தனர். அவர்கள் உண்மையான காரியத்தின் அருகே வந்து, அந்த வாக்குத்தத்தத்தைக் கண்டார்கள், ஆனால், தங்களால் அந்த வாக்குத்தத்தத்தைக் கடந்து சென்று ஏற்றுக்கொள்ள முடியாது என்று உணர்ந்தார்கள்.

74 இப்பொழுது, அது சரியாக இன்றைக்கு நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதலினூடாக வந்துள்ளது. பார்த்தீர்களா? "அவன் பரிசுத்தமாக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை மிதித்துள்ளான்," பரிசுத்தமாக்கப்பட்ட ஜனங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் காண்கிற ஒரு இடத்திற்கு வருகிறார்கள், அவர்கள் புறக்கணித்து, "அது மதவெறித்தனம்; நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் எங்களுடைய வகுப்புகளிலிருந்து வெளியேற்றப்படுவோம்; நாங்கள் எங்களுடைய இடங்களிலிருந்து புறம்பாக்கப்படுவோம். நாங்கள் எங்களுடைய சபைகளிலிருந்து

புறம்பாக்கப்படுவோம். எங்களால் அதைச் செய்ய முடியாது (புரிகிறதா?), ஏனென்றால் அது எங்களுடைய சபை போதனைக்கு முரணாயுள்ளது" என்கிறார்கள். பார்த்தீர்களா? தன்னை இவ்வளவு தூரம், வாக்குத்தத்தத்தின் முத்திரையிடப்படும் வரைக்கும், கொண்டு வந்த இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை எண்ணிப் பார்த்து, பின்னர் அதிலிருந்து விலகிச் செல்கிறார்கள். அவர்கள் இரட்சிக்கப்படுவது முற்றிலும் கூடாத காரியம் என்று அவர் கூறினார். பாருங்கள், பார்த்தீர்களா? வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் நடந்து சென்றவர் அல்ல...

75 இரண்டரை இலட்சம் ஜனங்களைக் கொண்ட அந்த முழு குழுவிலும் யோசுவாவும் காலேபும் இருவர் மாத்திரமே என்பதை நினைவில் கொள்ளுங்கள் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் சென்றதால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் சென்றதால், ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு, திரும்பி வந்தனர். அவர்களோ, "நாம் அதைக் கைப்பற்ற முடியும், ஏனென்றால் தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார்" என்றனர்.

76 அங்கே அவர்கள் தங்கியிருந்தனர். ஏன்? இப்பொழுது, அந்த ஜனங்கள் யாவரும் சூழ்நிலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர், ஆனால் யோசுவாவும் காலேபும்: "நான் அந்தத் தேசத்தை உனக்குக் கொடுத்தேன்; போய் அதைப் பெற்றுக்கொள்" என்று தேவன் கூறினதை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

77 அதுதான் இன்றைக்கு, ஜனங்கள், "ஓ, நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டால், நான் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டாலும், நான் அந்நிய பாஷைகளில் பேசினாலும் அல்லது தீர்க்கதரிசனம் உரைத்தாலும், அல்லது நான் சாட்சி கொடுத்தால் அல்லது என்னுடைய சபையில் சத்தமிட்டால், அவர்கள் என்னை வெளியே தள்ளிவிடுவார்கள்" என்று கூறுகிறார்கள். தொடர்ந்து செல்லுங்கள்!

78 நீங்களோ, "சரி, நான் ஒரு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்கிறேன்; நான் ஒரு நல்ல, சுத்தமான, பரிசுத்தமாக்கப்பட்ட வாழ்க்கை வாழ்கிறேன்..." என்று கூறலாம். அது உண்மைதான், ஆனால் நீங்கள் பலப்பரீட்சைக்கு வந்து, அந்த இடத்திற்கு, எல்லைக்கோடுக்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் அதை விட்டு விலகினால், அப்பொழுது "ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டவர்களுக்கு அது கூடாத காரியம்..." பாருங்கள்?

79 வேறு வார்த்தைகளில் கூறினால், ஒரு மனிதன் நீதிமானாக்கப்படுதலினூடாக வருகிறான், அவன் போய், "நான் வார்த்தையைப் பிரசங்கிக்க விரும்புகிறேன் என்று நான் விசுவாசிக்கிறேன்" என்று கூறுகிறான். அவன் இரட்சிக்கப்படுகிறான்; அவன், "நான் பாவத்தினால் களைப்புற்றிருக்கிறேன்" என்கிறான். சரி. அதன்பின்னர் அவன் வெளியே செல்கிறான், முதலாவதாக

அவன் இன்னமும் புகை பிடிக்கிறான், ஒருகால் அவன் இச்சிக்கவோ அல்லது வேறெதோ ஒன்றையோ செய்யலாம். சிறிது கழித்து அவன், "தேவனே, இது ஒரு கிறிஸ்தவனுக்கு, விசேஷமாக ஒரு ஊழியக்காரனுக்கு, ஸ்திரீகளைத் தவறான முறையில் நோக்கிப் பார்ப்பதும், சிகரெட் புகைப்பதுமே தகாது!" அல்லது; "நான் என் நண்பர்களுடன் சேர்ந்து நட்பு முறையில் மதுபானம் அருந்துவதுண்டு, ஆனால்—மற்றும் என்னுடைய சபையோரும் கூட, ஆனால் அது சரியானதாகத் தெரியவில்லை. கர்த்தாவே, என்னைப் பரிசுத்தப்படுத்தும்" என்று கூறுகிறார். அதன்பின்னர் கர்த்தர் அவனைப் பரிசுத்தப்படுத்தி, அவனிடத்திலிருந்து அந்த எல்லா இச்சைகளையும், ஒவ்வொரு காரியத்தையும் எடுத்துப் போடுகிறார். அப்படியானால் அவன் ஒரு பரிசுத்தமாக்கப்பட்ட பாத்திரமாயிருக்கிறான். அப்பொழுது தேவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை அவனுக்கு அளிக்கிறார். அதைச் செய்ய, அவன் தன்னோடு இருக்கிற கூட்டத்திலிருந்து வெளியே வர வேண்டும். அங்கே தான் அவன் தன்னுடைய நிறத்தைக் காண்பிக்கிறான்; அதன்பின்னர் அவன் பின்வாங்குகிறான். அவன் பின்வாங்கும்போது அவன் என்ன செய்கிறான்? அவனைப் பரிசுத்தமாக்கிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை அவன் மிதிக்கிறான். அது அவனை அங்கே கொண்டு செல்ல முடியாத ஒரு பரிசுத்தமற்ற காரியமாய் கருதப்படுகிறது. அப்படியானால் அவன் இரட்சிக்கப்படுவது கூடாத காரியம். அப்பொழுது அது என்னவாயிருந்தது? ஆனால் உக்கிர கோபத்திற்கும், நியாயத்தீர்ப்புக்கும் சென்றான்.

அது தெளிவாக உள்ளது என்று நான் நம்புகிறேன். அப்படியில்லையென்றால், ஏன், நீங்கள் வேறொரு நேரத்தில் எனக்குத் தெரியப்படுத்துங்கள். நான் அவைகளில் அநேகமானவற்றை இங்கே வைத்துள்ளேன், நான்...

153. சகோதரன் பிரான்ஹாம், பரிசுத்த யோவான் 21:15 முதல் 17 வசனங்களில் இயேசு எதைப் பொருட்படுத்திக் கூறினார், அவர் பேதுருவிடம் அன்பு கூர்ந்து, அவருடைய ஆட்டுக்குட்டியைப் மேய்க்கும்படி அவனிடத்தில் கூறியபோது, அப்பொழுது அவர், "என் ஆடுகளைப் மேய்ப்பாயாக" என்றார், 17-ம் வசனத்தில் அவர் மீண்டும், "என் ஆடுகளைப் மேய்ப்பாயாக" என்று கூறினார் என்பதை நீங்கள் அறிவீர்களா?

80 சரி, அது வெறுமனே இதுதான்: பாருங்கள், கிறிஸ்துதான் மேய்ப்பர், அவர் சென்றுகொண்டிருந்தார், அவர் தம்முடைய ஆடுகளுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையை விட்டுச் சென்றுகொண்டிருந்தார், எந்த மேய்ப்பனும் அதை மேய்க்கிறான், அவைகள் அவருடைய மந்தையை, அவருடைய சபையை, பாருங்கள், அவர் வழிநடத்திக் கொண்டிருந்தார், அல்லது, ஒரு மேய்ப்பனாயிருக்க: ஆடுகளை மேய்க்க, இந்தச் சீஷர்களுக்கு

தொடர்ந்து மந்தையை மேய்க்கும்படியான கட்டளையை விட்டுவிட்டார்.

81 இதைப் போன்ற வேறு வார்த்தைகளில் கூறினால், நீங்கள் இங்கே நோக்கிப் பார்த்தால்...இன்று காலையில், அதைத்தான் நான் செய்து கொண்டிருக்கிறேன். இப்பொழுது, நீங்கள் ஆடுகளுக்கு ஆகாரம் கொடுப்பதால் மாத்திரமே ஆடுகள் வளரும். இப்பொழுது, நீங்கள் ஒரு பெரிய இறைச்சி கலந்த இடையீட்டு ரொட்டியை வறுத்து, அதை ஒரு ஆட்டுக்குக் கொடுத்தால், அதனால் அது வளர முடியாது, ஏனெனில், பாருங்கள், அது—அது ஆட்டின் ஆகாரம் அல்ல. புரிகிறதா? மேலும்—மேலும் நான் ஒரு நல்ல டி-வடிவ மாட்டிறைச்சி எலும்புத் துண்டை வறுத்து, ஒரு ஆட்டுக்குக் கொடுத்தால், அது—அது ஆட்டின் ஆகாரம் அல்ல. அவனால் அதைப் புசிக்க முடியாது, அவ்வளவுதான், ஏனென்றால் அது ஒரு ஆடாக இருக்கிறது. ஆனால் ஆடுகளுக்கு ஆட்டுத் தீவனம்தான் பிடிக்கும். அப்படியானால் நீங்கள் தேவனுடைய மந்தையைப் போஷிக்கும்போது, மனிதனால் உண்டாக்கப்பட்ட ஏதோ ஒரு வேத சாஸ்திரத்தினால் அவர்களைப் போஷிக்காதீர்கள்; வார்த்தையினால் அவர்களைப் போஷிப்பாயாக; அங்கிருந்துதான் ஆடுகள் வளருகின்றன. வார்த்தையைப் போஷிப்பீர்!

82 ஒரு மேய்ப்பனாக, ஒரு உண்மையான மேய்ப்பனாக இரு. “என் ஆடுகளை மேய்ப்பாயாக.” நிச்சயமாகவே, ஆட்டுக்குட்டிகள் சிறியவை, ஆடுகள் வயது சென்றவைகள். எனவே வாலிபரும் வயோதிகனும் தேவனுடைய மந்தையைப் மேய்ப்பாயாக! பார்த்தீர்களா? வார்த்தையினால் அவர்களைப் போஷிப்பாயாக! வார்த்தை, நீங்கள் பாருங்கள், சத்தியம்! இயேசு, “மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்” என்றார். அது சரியா? ஆகையால், மனிதன் பிழைக்க வேண்டுமானால், அவர்கள் தேவனுடைய மந்தையாக இருந்தால், இந்த—சபை, அப்பொழுது அவர்கள் தேவனுடைய வார்த்தையிலும் மன்னாவிலும் செழித்திருக்க வேண்டும். இதுவே அவருடைய மன்னா!

83 வேதாகமத்தில், நாம் சபைக் காலங்களில் அதைக் குறித்து இப்பொழுதுதான் ஆராய்ந்து பார்த்தோம். இயேசு மறைவான மன்னாவாயிருக்கிறார், கிறிஸ்து சபையின் மன்னாவாயிருக்கிறார். மன்னா என்றால் என்ன? பழைய ஏற்பாட்டில் உள்ள மன்னா என்பது ஒவ்வொரு இரவும் புதியதாகப் பரலோகத்திலிருந்து இறங்கி வந்து சபையை அதனுடைய யாத்திரையில் ஆதரிக்கும்படியாக இருந்தது. அது சரியா? இப்பொழுது, புதிய ஏற்பாட்டில் மறைவான மன்னா என்றால் என்ன? “இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது (மறைக்கப்பட்டிருக்கும்); நீங்கள் என்னைக் காண்பீர்கள், ஏனென்றால் நான் உலகத்தின் முடிவுபரியந்தம்

உங்களோடும் உங்களுக்குள்ளும் இருப்பேன்" என்றார். கிறிஸ்துவே ஒவ்வொரு நாளும்—ஒவ்வொரு நாளும் புதியதாகப் பரலோகத்திலிருந்து தேவனிடத்திலிருந்து வருகிற அந்த மறைவான மன்னாவாயிருக்கிறார்.

84 நாம், "பாருங்கள், இரண்டு வாரங்களுக்கு முன்பு நான் தேவனைக் குறித்த ஒரு மகத்தான அனுபவத்தைப் பெற்றேன்" என்று கூற முடியாது. இப்பொழுது அதைக் குறித்து என்ன? பார்த்தீர்களா? ஒவ்வொரு நாளும், புதியதாக, ஒரு புதிய ஆசீர்வாதத்தை, ஒரு புதிய ஏதோ ஒரு காரியம் தேவனிடத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறது, அந்த மறைவான மன்னா தேவனிடத்திலிருந்து பரலோகத்திலிருந்து இறங்கி வருகிறது, கிறிஸ்து. மேலும் கிறிஸ்து என்னும் இந்த மன்னாவை நாம் உண்டு மகிழ்கிறோம், நாம் அந்தப் யாத்திரையில் மறுகரையில் உள்ள தேசத்தை அடையும் வரையிலும் அவர் நம்மை ஆதரிக்கிறார்.

85 இப்பொழுது, "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று அதைத்தான் அவர் பொருட்படுத்திக் கூறினார். நாம் அதைப் பற்றிப் பார்ப்போம். மற்ற கேள்விகளுக்கு நாம் ஒருபோதும் செல்லமாட்டோம், ஏனென்றால் அது எனக்கு ஒரு நல்ல கேள்வியாயுள்ளது. கிறிஸ்து மன்னாவாகவும், ஆடுகளுக்கான ஆகாரமாகவும் இருப்பதைக் குறித்து நான் பேசும்போது, எனக்கு அது பிடிக்கும்.

86 கிறிஸ்துவை அவருடைய வார்த்தையிலிருந்து அவர்களுக்குப் போஷியுங்கள். பார்த்தீர்களா? கிறிஸ்துவின் வார்த்தையை இங்கே எழுதப்பட்டுள்ள விதமாகவே எடுத்து, அதை ஆடுகளுக்குக் கொடுங்கள். வேறு எவரும் என்ன கூறினாலும் அது ஒரு பொருட்டல்ல, "ஓ, அவர்களுக்கு ஒரு இறைச்சி கலந்த இடையீட்டு ரொட்டி தேவை!" நீங்கள் அதை நம்ப வேண்டாம். இங்கே அவர்களுக்குத் தேவை என்னவெனில், இங்கேயே! இதுவே அது. பார்த்தீர்களா? இதை அவர்களுக்குக் கொடுங்கள்! இது ஆட்டு ஆகாரம். அதுவே அவர்களை வளரச் செய்கிறது. பரிசுத்த ஆவி, இது அவருடைய வார்த்தை, அவருடைய கட்டளை. வார்த்தை ஒரு வித்து. விதை ஒரு செடியைப் பிறப்பிக்கிறது; நாம் உண்ணும் தாவரமாகும். இப்பொழுது, பரிசுத்த ஆவியானவர் செழித்தோங்கி நிற்கிற இந்தச் செடிதான் சபையைக் கொண்டு வருகிறது. அது போஷிக்கிறது...அது—அது—அது சபையைப் போஷிக்கிறது, பரிசுத்த ஆவியானவர் அதைச் செய்கிறார், தேவனுடைய பிரசன்னத்தில் களிகூருகிறார், ஏனென்றால் ஜனங்கள் அவருடைய வார்த்தையை விசுவாசித்து, அவர்கள் மூலமாக அவரைக் கிரியை செய்ய அனுமதிக்கிறார்கள், அவர்கள் செய்வதாகத் தேவன் அவர்களுக்கு வாக்குப்பண்ணியிருந்த அதே காரியங்களை அவர்களுக்கு அளித்தார். தேவன் தம்முடைய சபை வளருகிறதையும், ஆகையால் ஆடுகள் போஷிக்கப்படுவதையும்,

பரிசுத்த ஆவியானவர் மகிமைப்படுத்தப்படுவதையும் காண்கிறார். பார்த்தீர்களா? அதுதான். "என் ஆடுகளை மேய்ப்பாயாக!" சரி.

இப்பொழுது, அது மாத்திரமல்லவென்றால், ஏன், நீங்கள் சிறிது நேரம் கழித்து எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

154. சகோதரன் பிரான்ஹாம், நான் சிறிது நேரத்திற்கு முன்னர் ஜெப வரிசையினூடாகச் சென்றபோது, அபிஷேகம் பண்ணப்பட்ட கரங்கள் என்மேல் வைக்கப்பட்டு, இரட்சிக்கப்படாத என்னுடைய கணவனுக்காக ஜெபிக்கப்பட்டது. நான் கர்த்தருடைய வல்லமையினால் ஆட்கொள்ளப்பட்டேன்! அவர் இரட்சிக்கப்படுவார் என்பதற்கு இது ஒரு திட்டவட்டமான அடையாளமா?

87 பாருங்கள், ஒரு...அது ஒரு பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். சகோதரியே, அவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்ற ஒரு திட்டவட்டமான அடையாளமாயிருந்தது என்று நான் நினைக்கமாட்டேன்—நான் நினைக்கமாட்டேன், இருப்பினும் நான் நம்புகிறேன்—அந்தத் தேவன், அது...அவர் நிச்சயமாக இரட்சிக்கப்படுவார் என்று நான் விசுவாசிக்கிறேன், ஆனால் கூறப்போவது..."இப்பொழுது, அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்று உங்களால் கூற முடியுமா?" அதைக் குறித்து கவனமாயிருங்கள் (புரிகிறதா?), ஏனெனில், பாருங்கள், பரிசுத்த ஆவியானவர் உங்களை ஆசீர்வதித்திருக்கலாம், ஏனென்றால் நீங்கள் கிறிஸ்துவின் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். பார்த்தீர்களா?

88 கிறிஸ்து பாவமுள்ள சபைக்காக நிற்கச் சிலுவையண்டைச் சென்றதுபோல, உங்களுடைய பாவமுள்ள கணவனுக்காக நிற்கவே நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் பார்த்தீர்களா? நீங்கள் செய்தது ஒரு மகத்தான காரியமாயிருந்தது. ஆனால் நான் என்ன செய்வேன்...இந்தக் காலையில் நீங்கள் பிரசன்னமாயிருந்தால், இந்தக் கேள்வியை எழுதின நீங்கள், நான் என்ன செய்வேன், தேவன் அதைச் செய்யப் போகிறார் என்று நான் என் முழு இருதயத்தோடு விசுவாசிப்பேன் (புரிகிறதா?)—தேவன் அதைச் செய்யப் போகிறார், ஏனென்றால் அவர் உங்களுக்கு ஆசீர்வாதங்களை அளித்தாலும் அல்லது அவர் அளிக்கவில்லையென்றாலும், அது தேவன் உங்களுக்குக் கூடுதலாக ஏதோ ஒன்றை அளித்ததாயிருந்தது. ஆனால் அது—அது உங்களை நன்றாக உணரச் செய்யும் என்று நான் நம்புகிறேன், ஏனென்றால் அவர் உங்களை ஆசீர்வதித்தார்.

89 அது நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசும்போது, சபையில் அர்த்தம் உரைப்பவர் இல்லாதிருந்தால், ஏன், அந்நிய பாஷைகளை வியாக்கியானம் செய்ய யாராவது இல்லையென்றால், நீங்கள் சபையில் பேசக் கூடாது. ஆனால் நீங்கள் அந்நிய பாஷையில் பேசினால், அதற்கு அர்த்தம் உரைப்பவர் இல்லை...ஏன்... நீங்கள்...நீங்கள் உங்களுடைய வீட்டிலோ அல்லது நீங்கள் எங்கே

ஜெபத்தில் இருந்தாலும், அப்பொழுது பேசுங்கள், ஏனென்றால், "அந்நிய பாஷை பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்." அது அவனுக்கு ஆறுதலை அளிக்கிறது. பார்த்தீர்களா? அவன் நன்றாக உணருகிறான், ஏனென்றால் அவன் அங்கு நின்று ஜெபித்துக் கொண்டிருக்கிறான், நீங்கள் அறிந்துள்ள முதல் காரியம், பரிசுத்த ஆவியானவர் அவன் அல்லது அவள் மீது இறங்கும்போது, அவர்கள் அந்நிய பாஷையில் பேசத் துவங்கினர். அவர்கள்—அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசின காரணத்தால், அவர்களுடைய ஆத்துமா களிகூர்ந்து கொண்டு, சந்தோஷமாயிருந்தது. பார்த்தீர்களா?

90 ஏன், அது—அது—அது நீங்கள் ஜெபித்துக் கொண்டிருந்த ஜெபத்திற்கு தேவன் பதிலளிக்கப் போகிறார் என்பதற்கு அது ஒரு அடையாளம் மட்டுமல்ல, ஆனால் அது பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குச் செவி கொடுக்கிறார் என்பதற்கு ஒரு அடையாளமாயிருந்தது. அது ஒரு—அது...அவர் உங்களை அறிந்திருக்கிறார்; அவர் உங்களோடு இருக்கிறார். அதேக் காரியத்தைத்தான் நான் இதற்கும் பொருத்திக் கூற விரும்புகிறேன். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு ஒரு—ஒரு ஆசீர்வாதத்தை அளித்திருக்கிறார்.

91 இங்கே சில காலத்திற்கு முன்பு. நான் கடந்த முறை அந்நிய பாஷையில் பேசினபோது, என்னால் நினைவுகூர முடிந்த வரைக்கும்...நான்...அது மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. நான் இல்லினாய்ஸில் இருந்தேன், சீயோன் நகரத்தில் ஜெப வரிசைக்குச் செல்லப் பில்லி என்னைப் பின்தொடர்ந்து வந்தான். நான் என் இருதயத்தில் பாரங்கொண்டிருந்தேன், நான் முழங்காற்படியிட்டு ஜெபிக்கத் துவங்கினேன். நான் ஜெபித்துக் கொண்டிருக்கையில், பில்லி வந்து கதவைத் தட்டுகிற சத்தத்தை நான்—நான் கேட்டேன். நான், "பில்லி என்னால்—என்னால் இப்பொழுது போக முடியாது" என்றேன். அவன் அங்கே போய் உட்கார்ந்தான்.

92 நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன், என் இருதயம் மிகவும் பாரம் கொண்டது; என்னால்—என்னால் அந்தவிதமாகச் சபைக்குச் செல்ல முடியாது. பாருங்கள், வழக்கமாகச் சில சமயங்களில் ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்பதை அவர் எனக்கு ஒரு தரிசனத்தில் தருகிறார், ஆனால் அப்பொழுது அவர் அதைச் செய்யவில்லை. நான் அங்கே அறையில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, யாரோ ஒருவர் பேசுவதை நான் கேட்டேன். நான் ஜெபிப்பதை விட்டுவிட்டேன். நான் அதைக் கேட்டேன், அங்கே வாசலில் யாரோ ஒருவர் இருந்தார், அவர்கள்...ஒரு அந்நிய பாஷையைப் போன்று தொனித்தது, ஜெர்மானிய அல்லது லோ டச்சு அல்லது ஏதோ ஒன்றைப் போல; அது மிக வேகமாக, பேசக்கூடியதாக இருந்தது. நான் மீண்டும் செவிகொடுத்து, "பாருங்கள், யாரோ ஒருவர்

அங்கு வந்து அந்த விடுதி மனிதனிடம் ஜெர்மானிய மொழியில் பேசிக் கொண்டிருக்கிறார்; ஒரு வேளை அவன் அவனுக்குப் பதிலளிப்பான்" என்று நான் நினைத்தேன்.

93 நான் ஜெபிப்பதை நிறுத்திவிட்டு, இந்தவிதமாக ஒரு நாற்காலியில் சாய்ந்துகொண்டு, கேட்டுக்கொண்டிருந்தேன், அவன் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தான். நான், "சரி, ஏன் யாரோ ஒருவர் திரும்பிப் பதிலளிக்கவில்லை என்று யோசிக்கிறேன்" என்று எண்ணினேன். நான் செவி கொடுத்தேன்; நான், "இப்பொழுது அது விநோதமாக இருக்கிறதல்லவா" என்று எண்ணினேன்.

94 அங்கே சாலையில் ஒரு எடையுள்ள தராசு இருந்தது, அங்கே அந்த நபர், "ஓட்டிக்கொண்டு போ!" உங்களுக்குத் தெரியும், "ஓட்டிக்கொண்டு போ!" என்று சத்தமிடுவதை நான் கேட்டேன். நான் திரும்பி, அந்தப் பக்கம் நோக்கிப் பார்த்தேன், நான் என் வாயை உணர்ந்தேன். நான்தான் பேசிக் கொண்டிருந்தேன் என்பதை கண்டறிந்தேன். அது நானாக இருந்தது. நான் ஒரு காரியத்தையும் அறியாமல், உண்மையாகவே அமைதியாயிருந்தேன். நான் எதைக் கூறிக்கொண்டிருந்தேன் என்பதைக் காட்டிலும் என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை, நான் கூறிக்கொண்டிருந்த ஒரு காரியத்தையும், ஒரு காரியத்தையும் கூட அறியாதிருந்தேன். நான் அப்படியே...என்னுடைய வாய் அசைந்து கொண்டிருந்தது, நான் ஒருவிதமான பாஷை பேசிக்கொண்டிருந்தேன். நான் உண்மையாகவே அமைதியாயிருந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு அது நின்றுவிட்டது. அது நின்றபோது, ஓ என்னே, என்னால் சத்தமிட முடியும் என்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் அந்தப் பாரமானது என்னை விட்டுப் போய்விட்டது.

95 எனவே நான் அப்பொழுது சபைக்குச் சென்று, பில்லியை அழைத்தேன். நான் சபைக்குச் சென்றபோது...திரு. பாக்ஸ்டர் அப்பொழுது கூட்டத்தின் மேலாளராக இருந்தார். அவர் பாடிக்கொண்டே காத்துக் கொண்டிருந்தார். நான் அரை மணி நேரத்திற்கும் மேலாகத் தாமதமாக வந்தேன். நான் தாமதமாக வந்துவிட்டேன் என்று நான் அவரிடம் கூறினேன்.

நான் அழுதுகொண்டிருந்ததை அவர்—அவர் கண்டார், மேலும் அவர், "என்ன விஷயம்?" என்று கேட்டார்.

96 அதற்கு நான், "ஒன்றுமில்லை" என்றேன். நான் ஏறக்குறைய பத்து நிமிடங்கள் தொடர்ந்து அப்படியே இருந்தேன், அரங்கத்தின் பின்பக்கத்திலிருந்து ஒரு ஸ்திரீ உள்ளே வந்தாள், அவள் அங்கே பின்னால் உள்ள இடத்தைப் எடுத்துக்கொள்ள இருந்தாள். மேலும் நாங்கள் அந்தப் பெண்ணிடம், உண்மையைத் தெரிந்துகொள்ளச் சென்றபோது, அவள் இரட்டை நகரங்களிலிருந்து (செயின்ட் பால் மற்றும் மின்னியாபோலிஸ், எங்கோ, அந்த நகரங்களில்

ஒன்று) தன்னுடைய பாதையில் வந்துகொண்டிருந்தாள்...அவள் **காசநோயால்** மிகவும் மோசமாக இருந்ததால், அவளை அவசர ஊர்தியில் அழைத்து வரத் துணியவில்லை, அவளுடைய நுரையீரல்கள் கூழ் போல மிகவும் மோசமான நிலையில் இருந்தன. எனவே இரண்டு சகோதரர்கள் ஒரு பழைய செவர்லே காரை வாங்கிக்கொண்டு, பின் இருக்கையை எடுத்து, அங்கே எப்படியோ அவளுக்கு ஒரு கட்டிலை அமைத்து, அல்லது படுக்கையில் அவளைப் படுக்க வைத்து, அவளைக் கூட்டத்திற்கு கொண்டு வந்து கொண்டிருந்தனர். அவள் வர விரும்பினாள்.

97 மருத்துவர்கள் அவளைக் கைவிட்டிருந்தனர். மேலும் சாலையில்...அவர்கள் அவளுக்குச் சிறு அடி பட்டால்கூட இரத்தக் கசிவு ஏற்படும், அவ்வளவுதான் என்று அவளிடம் கூறினர். அவள் ஒரு இரத்தக் கசிவுக்குள் சென்றாள். அவர்கள் அவளை வெளியே கொண்டு சென்று, ஒரு புல்வெளி சமதளத்தின் மேல் அவளைக் கிடத்தினார்கள். பரிசுத்தவான்கள் அங்கே நின்றுகொண்டு அந்த ஸ்திரீக்காக ஜெபித்துக் கொண்டிருந்தனர். அவள் அப்படியே... ஒவ்வொரு முறையும் அவள் சுவாசிக்கும்போது, அது அப்படியே மூச்சுத்திணறிக் கொண்டிருந்தது; அவளுடைய வாயிலிருந்து இரத்தம் இந்தவிதமாக வெளியேறும்.

98 திடீரென்று அவள் உடனடியாகச் சுகமடைந்தாள்! அவள் அங்கிருந்து குதித்து களிகூரத் துவங்கி, சபைக்கு வந்தாள். அவள் அங்கே பின்னால், பின்னால் சாட்சி கொடுத்துக் கொண்டிருந்தாள்.

99 நான், "அது எந்த நேரத்தில்?" என்று கேட்டேன். அது என்ன நேரம் என்பதைக் குறித்து அவள் நேரத்தைக் கூறினபோது, சரியாக அதே நேரத்தில்தான் அந்தப் பேச்சு என் வழியாக நிகழ்ந்துகொண்டிருந்தது. சரி, அது என்னவாயிருந்தது? அது அந்த ஸ்திரீக்காக அங்கே பரிசுத்த ஆவியானவர் பரிந்து பேசினதாயிருந்தது! நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா?

100 இப்பொழுது, வேதம் அதைக் கூறுகிறது. சில நேரங்களில் நாம் வார்த்தைகளை முணுமுணுக்கிறோம்; நாம் எதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதை நாம் அறியோம். ஆனால் பரிசுத்த ஆவியானவரே அங்கே உள்ளே அசைவாடி, நம்மால் புரிந்துகொள்ள முடியாத காரியங்களுக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். பார்த்தீர்களா?

101 அந்த ஸ்திரீ உடனடியாகக் குணமடைந்தாள். அங்கிருந்து நீண்ட காலத்திற்குப் பிறகு அவளிடமிருந்து எங்களுக்குத் தகவல் கிடைத்தது. அவள் பரிபூரணமாக நலமாக இருக்கிறாள், அவள் சரியாகிவிட்டாள்.

102 இப்பொழுது, அந்தக் காரியங்கள் எங்கே உள்ளன என்பதை தேவன் அறிந்திருக்கிறார், அதைச் செய்ய அவர் ஒரு வழியை உடையவராயிருக்கிறார். பார்த்தீர்களா? அதைச் செய்ய அவர்

தம்முடைய சொந்த வழியை உடையவராயிருக்கிறார். அவர் என்ன செய்கிறார் என்பதற்கு நாம் நம்மையே சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிறகு—அதன் பிறகு அங்கு நீங்கள் சென்றடையும்போது செய்ய வேண்டிய கடினமான காரியம் என்னவென்றால், வெறித்தனம் எனும் அந்த ஒரு சிறு கத்தியின் கூர்முனை போன்ற காரியத்திலிருந்து சத்தியத்திற்கு உங்களைக் காத்துக்கொள்வதாகும்.

103 இப்பொழுது, நீங்கள் கவனிக்கவில்லையென்றால், பிசாசு உங்களை ஒரு கூட்ட மதவெறித்தனத்திற்குள் தள்ளிவிடுவான், நீங்கள் உங்களுடைய எல்லா அனுபவங்களையும் மற்றும் மற்ற ஒவ்வொரு காரியத்தையும் இழப்பீர்கள். (புரிகிறதா?), நீங்கள் அதைச் செய்யும்போது. ஆனால் உங்களால் திடமான சத்தியத்தை பற்றிக் கொள்ள முடிந்தால், வேதத்தைக் கவனித்து, அதனோடு தரித்திருந்து, சாந்தமாயும், தாழ்மையாயும் தரித்திருந்து, நீங்கள் அப்படியே தரித்திருந்தால், தேவன் உங்களைக் கல்வாரியை நோக்கித் தொடர்ந்து கொண்டு செல்வார், அதைப் போன்ற பாதையில்.

104 சகோதரியே, அது உங்களுடையதைப் போன்றது. தேவன் உங்களுக்கு ஒரு ஆசீர்வாதத்தை அளித்துக் கொண்டிருந்தார். நீங்கள் கூறப்போவது ஒரு திட்டவட்டமான சாட்சியாக இருக்கலாம்... ஆனால் நான் அதன் பேரில் மாத்திரம் சார்ந்திருக்கமாட்டேன் (நீங்கள் பாருங்கள்?), "கர்த்தர் என்னிடம் கூறினார்!" என்பது போல் அல்ல. ஏனென்றால் நான் அந்த அனுபவத்தைக் கூறினேன், காரணம் நீங்கள் தொடர்ந்து விசுவாசிக்கும்படியாக அது உற்சாகமூட்டலாம். தேவன் அங்கே என்ன செய்தாரோ, அந்தவிதமாக ஆவியை உங்கள்மேல் கொண்டு வந்தார், அது ஏதோ ஒரு நோக்கத்திற்காகவேயாகும். அது வேறு ஏதோ காரியமாய் இருந்திருக்கலாம்; ஆனால் அது உங்களுடைய கணவருக்காக இருந்தால், அவன் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள்ளாக நிச்சயமாக வருவான். நான் அதை விசுவாசிக்கிறேன்.

155. சகோதரன் பிரான்ஹாமே, பெண்கள் சபையில் பேசக் கூடாது என்பது வேதப்பூர்வமானதல்லவா?

105 அவர் இங்கே இரண்டு கேள்விகளை உடையவராயிருக்கிறார். அது உண்மை. அது—அது உண்மை. பெண்கள் ஊழியக்காரர்களாயிருந்து, சபையில் பேசுவது சரியல்ல. அது உண்மை, முதலாம் கொரிந்தியர் 14-ம் அதிகாரம்.

106 நிச்சயமாகவே இங்குள்ள சபையோர் யாவரும், நீங்கள் யாவரும் இதை அறிவீர்கள். இந்தக் காலையில் இங்கே இது ஒரு அந்நியராக இருக்கலாம்; எனக்குத் தெரியாது. ஆனால் ஸ்திரீகள் ஒரு—ஒரு ஊழியக்காரியாக இருப்பது சரியல்ல. அது—அது உண்மை.

நான் அதை இங்கே உங்களுக்கு வாசித்துக் காண்பிப்பேன், நீங்கள்—நீங்கள் அதைக் கண்டறியலாம். அப்பொழுது நீங்கள்—

நீங்கள் அறிந்து கொள்வீர்கள்: முதலாம் கொரிந்தியர் 14-ம் அதிகாரம் என்று நான் நம்புகிறேன். நான் அதை இன்னும் ஒரு நிமிடத்தில் எடுத்து விடுவேன், என்னால் கண்டுபிடிக்க முடிந்தால்...ஆம், இதோ அது உள்ளது.

சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. (இப்பொழுது, அந்தக் காலங்களில் பெண்கள் ஆசாரியராக இருப்பதற்கும் அதுபோன்றவற்றுக்கும் நியாயப்பிரமாணம் அனுமதிக்கவில்லை. புரிகிறதா?)

அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே.

107 இப்பொழுது, நீங்கள் இங்கே கொரிந்துவை கவனிப்பீர்களேயானால்...இந்தக் கொரிந்திய கிறிஸ்தவர்களில் அநேகர் மற்றும் அநேக...அந்நாளில் உலகத்தின் மகத்தான தெய்வம் தியானாள், அது ஒரு ரோம தேவதையாயிருந்தது. அவள் எபேசுவின் தேவதையாயிருந்தாள். அவள் உலகம் முழுவதிலும் வழிபடப்பட்டாள். இப்பொழுது, அவளுடைய ஊழியக்காரர்கள்... உண்மையாகவே, அவள் ஒரு பெண்ணாயிருந்தபடியால், அப்பொழுது அது அவளுடைய ஊழியக்காரர்களை பெண்களாக்கியது. அவர்கள் பவுலால் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டபோது...இப்பொழுது, பவுல் ரோமாபுரியில், அவன் இந்த நிருபங்களை எழுதும்போது, அவன் சிறையில் இருந்தான்.

108 இப்பொழுது, அவர்கள் அவனுக்குக் கடிதங்களை எழுதினர், நீங்கள் பாருங்கள், அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசத் தொடங்கி, அவர்களுக்குள் பெரிய வரங்கள் கிரியை செய்யத் தொடங்கினர். பாருங்கள், இந்த ஸ்திரீகள் தங்களுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்ய வேண்டும் என்று எண்ணினர்.

109 இப்பொழுது, நீங்கள் கவனிப்பீர்களேயானால், உங்களுடைய வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்கள், அவன் கூறிய 36-ம் வசனம்.

தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது?

ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது, ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்.

ஒருவன் அறியாதவனாயிருந்தால், அவன் அறியாதவனாயிருக்கட்டும்.

110 இப்பொழுது, வேறுவிதமாக, பெண்கள்...இப்போது, சபையின் இந்த நிரூபத்திற்கான வரலாற்றை நீங்கள் எடுத்துக்கொண்டால் (பார்த்தீர்களா?), இந்தப் பெண்கள் தங்களை...அவர்கள் தியானாள் தேவதைக்கு ஒரு—பூசாரியாக இருந்தவிதமாகவே தங்களுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்து வந்தனர். தேவன் ஒரு ஸ்திரீயல்ல; தேவன் ஒரு மனிதன். உண்மையாகவே ஒருவர் மாத்திரமே இருக்கிறார், அது ஒரு மனிதன். ஒரு பெண் ஒரு மனிதனிலிருந்து ஒரு உப உற்பத்தியாயிருக்கிறாள். மனிதன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்படவில்லை, ஆனால் ஸ்திரீ மனிதனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டாள். பார்த்தீர்களா? உங்களுடைய ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலை நீங்கள் திறந்து காண்பீர்களேயானால், நீங்கள் பாருங்கள். பார்த்தீர்களா?

111 மனிதன்—அவன் முதன்முதலில் பூமிக்கு வந்தபோது, பாலினமாக மாறுவதற்கு முன்பு, ஆணும் பெண்ணும், பெண்ணியவாதியும் ஆண்பாலுமாக இருந்தான். பார்த்தீர்களா? ஒரு பெண்மைத்தன்மை கொண்ட ஆவி, கீழ்த்தரமான ஆவி, அது கூச்ச சுபாவமுள்ள ஒன்றாய் உள்ளது. அப்பொழுது அவன் ஆண்மைத்தன்மை கொண்டவனாகவும் இருந்தான். ஆனால் அவர் சிருஷ்டித்து, அவனை வித்தியாசப்படுத்தினபோது...உலகத்தை இனப்பெருக்கம் செய்வதற்காக, அவர் அவனிடத்திலிருந்து பெண்ணின் ஆவியை அகற்றிவிட்டு, அவனுடைய பக்கவாட்டிலிருந்த ஒரு விலா எலும்பைப் பெற்று ஒரு பெண்ணை உண்டாக்கினார்.

112 அவள் ஆளுகை செய்ய வேண்டியவளல்ல! அவள் அதை முதலில் ஆரம்பித்தபோது, அவள் முழு மானிட வீழ்ச்சிக்கும் காரணமாயிருந்தாள். பார்த்தீர்களா? எல்லாமே, அதுவும் கூட... அவளே வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தாள். அதன்பின்னர் தேவன் அவளை மேலே எடுத்து, ஸ்திரீயின் மூலம் கிறிஸ்துவினூடாக உலகத்திற்கு ஜீவனை திரும்பக் கொண்டு வந்தார். ஆனால் எந்த இடத்திலும் ஒரு பெண் சபையில் ஒரு ஊழியக்காரியாக இருக்க ஒருபோதும் அனுமதிக்கப்படவில்லை.

113 இரண்டாம் தீமோத்தேயு 3-ம் அதிகாரத்தில், அவன், “உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை, அவள் அமைதலாயிருக்க வேண்டும்” என்றான். நீங்கள் பார்த்தீர்களா? ஸ்திரீ பிரசங்கிப்பது சரியல்ல; அது உண்மை.

114 இப்போது, ஏமி மெக்பெர்சன் மற்றும் அங்குள்ள பல பெண்களைப் போல, உண்மையான பிரசங்கிகளாக இருந்த சில பெண்களை நான் பார்த்திருக்கிறேன்—அவர்களாலும் பிரசங்கம் செய்யவும் முடிந்தது. ஆனால் சிறிது நேரம் அவர்கள்மேல் உங்களுடைய கரத்தை வையுங்கள். பார்த்தீர்களா? அது அல்ல... அந்நிய பாஷைகளில் பேச முடிந்த ஜனங்கள் இந்தக் காலையில்

இந்தச் சபையில் அமர்ந்திருப்பதை நான் அறிவேன். அர்த்தம் உரைப்பவர் இல்லாமலிருந்தால், அவர்கள் அதைச் செய்யத் துணியாமலிருப்பார்கள். பார்த்தீர்களா?

115 அந்த ஸ்திரீகள் ஒரு குறிப்பிட்ட கோட்டின் கீழ் பிறந்திருந்தனர் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும், அதாவது அவர்கள்...உங்கள் பிறப்புக்கும் இதற்கும் நிறைய சம்பந்தம் உண்டு. அது உங்கள் பெயர், உங்களைப் பற்றிய அனைத்தும் (உங்களுக்குப் புரிகிறதா?) எதுவாக இருந்தாலும், அதற்கென ஒரு அமைப்பு இருக்கிறது.

116 இன்று காலை நான் இங்கிருந்து வெளியே வந்து துப்பாக்கியால் சுட்டு ஒருவரைக் கொன்றிருக்க முடியும், ஆனால் அதைச் செய்ய எனக்குத் துணிவில்லை. ஆனால் என்னால் அதைச் சரியாகச் செய்ய முடியும், நிச்சயமாக. பாருங்கள், நீங்கள் ஒரு அணிலைக் கொல்லக் கூடியது போல, என்னால் ஒரு மனிதனைக் கொல்ல முடியும்; ஆனால் நீங்கள்—நீங்கள் அதைச் செய்யக் கூடாது. பார்த்தீர்களா? அது அதே காரியம்தான். நீங்கள் அந்தக் காரியங்களைக் கவனிக்க வேண்டும், இப்பொழுது நீங்கள் செய்யாத...இவை கர்த்தருடைய கற்பனைகள்.

117 அவர்கள் அதை எழுதி, "ஏன், பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கூறினார்!" என்று கூறினர். (பார்த்தீர்களா?), பவுல், "என்ன? தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது? உங்களில் யாருக்காவது—அங்கே தீர்க்கதரிசிகள் யாராவது இருந்தால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன். (புரிகிறதா? அது சரி!) ஆனால் ஒரு மனிதன் தன்னுடைய—தன்னுடைய—அவன் முரண்பாடாய் இருக்க விரும்பினால், அவன் அறியாமையுள்ளவனாயிருக்க விரும்பினால், அவன் அறியாதவனாய் இருக்கட்டும். (புரிகிறதா?) அவனைத் தனியே விட்டுவிடுங்கள், அவன் தொடர்ந்து போகட்டும். (புரிகிறதா?) அதற்கு முரண்பாடான எந்தக் காரியத்தையும் செய்யாதே" என்றான். ஆனால் அவள் சபையில் பேசக் கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

118 ஆகையால், உங்களுடைய போதகரை அல்லது வேறு யாராக இருந்தாலும், அவர் ஆவிக்குரியவராயிருக்கிறாரா அல்லது இல்லையா என்பதை நீங்கள் அங்குதான் நிதானித்தறிய முடியும். பார்த்தீர்களா? அவன், "எந்த மனிதனாவது ஆவிக்குரியவனாக அல்லது தீர்க்கதரிசியாக இருந்தால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன்" என்றான். பார்த்தீர்களா?

119 அந்தக் காரணத்தினால்தான் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் மீண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று நான் கட்டளையிடுகிறேன். பவுல் அதைச் செய்தான், மேலும் அவன்,

“வானத்திலிருந்து வருகிற ஒரு தூதன் வந்து, வேறெதையாவது போதித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்” என்றான். இது ஏற்கனவே இங்கேயும் கூடப் போதிக்கப்பட்டிருக்கிறது. எவரேனும் வந்தால்...வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து, “ஸ்திரீகள் பிரசங்கிக்கட்டும், பிரசங்கிமார்களாயும், அவர்களுக்கு ஊழியக்காரர்களாக நியமித்திருக்கட்டும்!” என்று கூறினால், வேதம், “அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்” என்று கூறியுள்ளது. இதுவே இங்குள்ள கர்த்தருடைய கட்டளைகளாகும்.

156. கிறிஸ்தவ புருஷனும், ஸ்திரீயும் ஒருவரையொருவர் முத்தமிட்டு வாழ்த்துதல் கூறுவது சரியா? (ஓ!)

120 இல்லை, ஐயா! உண்மையாகவே இல்லை! இல்லை, ஐயா! சகோதரனே, நீங்கள் ஒரு பெண்ணை முத்தமிடுகிறீர்கள், அது உங்களுடைய மனைவியை (புரிகிறதா?) அல்லது உங்களுடைய—உங்களுடைய குழந்தையை அல்லது...புரிகிறதா?

“அது சரியா...” நான் அதைச் சரியாகப் புரிந்துகொண்டேனா என்று பார்க்கட்டும்! “கிறிஸ்தவ ஆண்களும் ஸ்திரீகளும் வாழ்த்துக் கூறும்போது ஒருவரையொருவர் முத்தமிடுவது சரியா?”

121 இல்லை, ஐயா! உண்மையாகவே இல்லை! அது...நீங்கள் அதை ஒருபோதும் துவக்க வேண்டாம்! ஆம், ஐயா! இல்லை, ஐயா! நீங்கள் பெண்களை விட்டு விலகியிருப்பீர்களாக! அவர்களிடத்திலிருந்து விலகியிருங்கள்! முற்றிலும் சரியே!

122 இப்பொழுது, அவர்கள் நம்முடைய சகோதரிகள், ஆனால்... இப்பொழுது, அவர்கள் அதைப் பெற்றுள்ளனர். அது...அந்தக் காரியம் பெந்தெகொஸ்தேயிலும் கூடப் பரவிவிட்டது, அது “சுதந்திரமான அன்பு” என்று அழைக்கப்படுகின்றது. நீங்கள் அதைப் போன்ற எந்தக் காரியத்தையும் செய்யும்போது—நீங்கள் அதிலிருந்து விலகியிருங்கள். அது உண்மையே!

123 நீங்கள் எவ்வளவு சுத்தமாக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை...நீங்கள் என்னுடைய சகோதரன், நீங்கள் ஒரு நல்ல பரிசுத்தமாக்கப்பட்ட, பரிசுத்த மனிதனாயிருக்கக் கூடும் என்று நான்—நான் நம்புகிறேன். நீங்கள் எவ்வளவு பரிசுத்தராயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை; நீங்கள் இன்னமும் ஒரு மனிதனாயிருக்கிறீர்கள். அவள் எவ்வளவு பரிசுத்தமாயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை; அவள் இன்னமும் ஒரு பெண்ணாய் இருக்கிறாள். நீங்கள் விவாகம் செய்து கொள்ளும் வரை அதிலிருந்து விலகியிருங்கள். நீங்கள் அதைச் செய்யுங்கள்!

124 நினைவிருக்கட்டும், சரீரம்...மூப்பர்களாகிய நீங்கள் புரிந்துகொள்ளும்படியாக நான் இப்பொழுது இரட்டிப்பாகப் பேசப் போகிறேன். இது ஒரு கலப்படமான குழு, ஆனால்

நான் உங்களுடைய சகோதரன், இது ஒரு கேள்வியாயுள்ளது. பார்த்தீர்களா?

125 ஒவ்வொரு மனிதனுக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறு விதமான சுரப்பிகள் உள்ளன. ஒரு பெண்ணுக்கு ஒரு பெண் சுரப்பி, பாலின சுரப்பி உள்ளது. ஒரு ஆணுக்கு ஒரு ஆண் சுரப்பி, பாலியல் சுரப்பி உள்ளது. அந்தச் சுரப்பிகள் மனித உதடுகளில் இருந்தன. அது உண்மை.

126 இங்கே மற்றொரு காரியம் கொண்டுவரப்படலாம், மனிதர்கள் ஒருவரையொருவர் வாயில் முத்தமிடுகின்றனர். அது அசுத்தமானது! அது அசுத்தம்! அது என்ன செய்கிறது? அது ஓரினச்சேர்க்கையில் ஈடுபடத் துவங்குகிறது. அதிலிருந்து விலகியிருங்கள்! நீங்கள் கூறுவது...

127 அண்மையில் ஒரு நபர் என்னிடத்தில் கேட்டபோது, "சகோதரன் பிரான்ஹாம், ஏன், அவர்கள் ஒருவரையொருவர் ஒரு பரிசுத்த முத்தத்தினால் வாழ்த்துகின்றனர்" என்று கேட்டார். அவர்கள் கழுத்தின் பின்பக்கத்தில் முத்தமிட்டு, அவர்களுடைய கழுத்தின் மேல் அணைத்து, அவர்களைக் கழுத்தின் பின்பக்கத்தில் முத்தமிட்டனர். அது கைகுலுக்கல் வழக்கம் வருவதற்கு முன்பு. அது ஒரு வாழ்த்துதல். அந்த விதமாகத்தான் அது உள்ளது. அவர்கள் ஒருவருக்கொருவர் கரங்களைக் குலுக்கவில்லை; அவர்கள் தங்களுடைய கரங்களை ஒருவரையொருவர் சுற்றிப் போட்டு, ஒருவரையொருவர் கழுத்தின் பின்பக்கத்தில் முத்தமிட்டனர், உதடுகளில் அல்ல, முகத்தில் அல்ல. அது ஒரு தாறுமாறாக்கத் துவங்குகிறது. அதிலிருந்து விலகியிருங்கள்! அதை ஒருபோதும் செய்யாதீர்கள்!

128 இந்நாட்களில் நாம் ஒருவரோடு ஒருவர் கைகுலுக்குகிறோம். நீங்கள் விரும்பினால்...நீங்கள் உங்களுடைய கரத்தை உங்கள் சகோதரனைச் சுற்றிப் போட்டு, அவரைக் கழுத்தில் முத்தமிட்டால், அல்லது அவர் உங்கள் கழுத்தில் முத்தமிட்டால், பரவாயில்லை. ஆனால் நீங்கள் அந்தப் ஸ்திரீயை முத்தமிடாதீர்கள், அந்தப் பெண் உங்களை முத்தமிட நீங்கள் அனுமதிக்காதீர்கள். பார்த்தீர்களா? அது உண்மையே! நீங்கள் அவளுடைய கரத்தைப் பற்றிப் பிடித்து, "சகோதரியே, ஒரு நிமிடம் இங்கேயே (பார்த்தீர்களா?) ஒரு நிமிடம் பொறுங்கள்; நாம் இதைச் சரிப்படுத்துவோமாக!" என்று கூறுங்கள். எனவே, இப்பொழுது நீங்கள் அதைச் செய்யுங்கள்.

129 இப்பொழுது நான் முதலில் ஆரம்பித்தபோது, சற்று நேரத்திற்கு முன்பு நான் உங்களிடம் என்ன கூறினேன்? ஒரு கார் சாலையில் மணிக்குத் தொண்ணூறு மைல் வேகத்தில் வருவதை நீங்கள் காணும்போது, அதனுடைய வழியை விட்டு விலகுங்கள். அது உண்மையே! அதைப் போன்ற எந்தக் காரியத்திலும் நீங்கள் முதல் திருப்பத்தைக் காணும்போது, அதிலிருந்து விலகிச் செல்லுங்கள்;

அதிலிருந்து விலகியிருங்கள்! அப்படியே...அந்த இடத்தில்தான் நீங்கள் இருக்கக் கூடாது. உங்களுடைய ஆத்துமாவை நொறுக்கி, உங்களை நரகத்திற்கு அனுப்பும்படியான ஏதோ ஒரு காரியத்தைச் சாத்தான் உங்களுக்கு அளிக்கிறான். அதிலிருந்து விலகியிருங்கள்! பொல்லாங்கான தோற்றத்தை விட்டு விலகுங்கள். அது உண்மை!

130 ஒரு ஆணாக இருங்கள், ஒரு பெண்ணாக இருங்கள்...நான் பெண்களுக்காக ஒரு நிமிடம் எடுத்துக் கொள்ளப் போகிறேன். அது வழக்கத்திற்கு மாறானது, இல்லையா? அவர்கள்—அவர்கள், "ஓ, அந்த ஸ்திரீயே அதற்குக் காரணமாயிற்றே! ஓ, அது அந்தப் பெண்ணின் தவறாயிருந்தது. அவள் தன்னுடைய ஸ்தானத்தை விட்டுச் செல்லாமலிருந்திருந்தால், பாருங்கள், அந்த மனிதன் தன்னுடைய ஸ்தானத்தை விட்டு வெளியே வந்திருக்க மாட்டான்" என்று கூறுகிறார்கள். அது உண்மை. அது—நாம் அதைச் சரியென்று கூறுவோம். அவள் தன்னுடைய ஸ்தானத்தை விட்டு அகன்று விடுகிறாள். ஒரு மோசமான பெண் இருந்தாலொழிய ஒரு மனிதன் மோசமாக இருக்க முடியாது; ஆனால் ஒரு மோசமான மனிதனாக இல்லாமல் ஒரு மோசமான பெண் இருக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது உண்மையே!

131 தேவனுடைய குமாரன் என்று உரிமை கோருகிற நீங்கள், உங்களுடைய கொள்கைகள் எங்கே? ஸ்திரீயானவள் அவளுடைய ஸ்தானத்திலிருந்து விலகியிருக்கவில்லையென்றால், நீங்கள் ஒரு தேவனுடைய குமாரன் அல்லவா? நீங்கள் உயர்ந்த, பலமுள்ள பாத்திரமாயிருக்கவில்லையா? வேதம் கூறுகிறபடி, அவள் பலவீனமாக இருக்கிறாள், அப்பொழுது அவள் பலவீனமாக இருந்தால், அப்பொழுது உங்களைத் தேவனுடைய மனிதனாகக் காண்பியுங்கள். அவளிடம், "சகோதரியே, நீங்கள் தவறாக இருக்கிறீர்கள்" என்று கூறுங்கள். அது உண்மையே! நான் அதைச் செய்திருக்கிறேன், மற்ற கிறிஸ்தவர்களும் அதைச் செய்திருக்கிறார்கள். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருக்கும் வரையில் நீங்கள் அதை எப்பொழுதுமே செய்வீர்கள், ஆனால் உங்களையே காண்பியுங்கள். நீங்கள் ஒரு தேவனுடைய குமாரன். அந்த ஸ்திரீயைக் காட்டிலும் நீங்கள்—நீங்கள் உங்கள் மேல் அதிக அதிகாரம் பெற்றிருக்கிறீர்கள். அவள் பெலவீனமானவளாயிருந்தால், அவள் பெலவீனமானவள் என்பதை அடையாளங்கண்டுகொள்ளுங்கள். அவளுடைய தவறுகளையும், அதைப் போன்ற காரியங்களையும் புரிந்து கொள்ளுதல் அல்லது அவளைத் திருத்த முயற்சிக்க வேண்டும். "சகோதரியே, நாங்கள் கிறிஸ்தவர்கள், நாங்கள் அதைச் செய்யக் கூடாது" என்று கூறுங்கள். பார்த்தீர்களா? ஒரு உண்மையான மனிதனாகி, ஒரு தேவனுடைய குமாரனாயிருந்து, ஸ்திரீகளைக் கவனியுங்கள்.

132 அங்கேதான் துவக்கத்தில் மகத்தான வீழ்ச்சி துவங்குகிறது. அது ஏவாளோடிருந்த சாத்தான். அதுதான் மானிட வர்க்கத்தின் முழு

வீழ்ச்சியையும் அதன் மூலமாகவே கொண்டு வந்தது.

133 நீ ஒரு தேவனுடைய குமாரனாயிருந்தால், பெலன் கொண்டிரு; ஒரு உண்மையான மனிதனாயிருக்க வேண்டும். நீங்கள் அந்தவிதமாக இல்லாவிட்டால், நீங்கள் அந்தவிதமாக ஆகுமளவிற்கு பீடத்தண்டை தரித்திருங்கள். பொல்லாங்கின் தோற்றத்தைப் புறக்கணிக்க வேண்டும். இப்பொழுது வாழ்த்தத் துவங்காதீர்கள்...

134 யாரோ ஒருவர் இங்கே என்னுடைய சபையில் இரண்டு அல்லது மூன்று முறை அதைக் கண்டதாகச் சில காலத்திற்கு முன்பு என்னிடம் கூறினார், அதாவது...இங்கே சபையில் அல்ல, ஆனால் சபைக்கு வரும் ஜனங்கள். நீங்கள் இந்தக் காலையில் இங்கே உட்கார்ந்து கொண்டிருந்தால், நான் இதை உங்களுக்கு நன்றாக ஆழமாக எடுத்துக் கூறப்போவதாயிருந்தேன். பார்த்தீர்களா?

135 ஸ்திரீகள், வாலிப ஸ்திரீகள் வந்து, இந்த மனிதர்கள் இந்த ஸ்திரீகளை முத்தமிடுகின்றனர். நீங்கள் அதைச் செய்யாதீர்கள்! நீங்கள்...நீங்கள் அங்கிருந்து விலகியிருங்கள். நீங்கள் அதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! அவள் வாலிபமாயிருந்தாலும், மணமாகாதவளாயிருந்தாலும் அல்லது அவள் என்னவாயிருந்தாலும்; அவள் என்றோ ஒரு நாள் யாரோ ஒருவருடைய மனைவியாக இருப்பாள். அதைச் செய்ய உங்களுக்கு எந்த வேலையும் கிடையாது. அவளிடத்திலிருந்து விலகியிருங்கள். நீங்கள் அவளை வாழ்த்த விரும்பினால், அப்பொழுது தேவனுடைய குமாரனாயிருங்கள், அவளுடைய கரத்தைக் குலுக்கி, "சகோதரியே, நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்" என்று கூறுங்கள். அதுவே அதற்கு அங்கே சரியான தீர்வாகட்டும். பார்த்தீர்களா?

136 அந்தக் காரியங்களிலிருந்து விலகியிருங்கள்; அது அசுத்தமாயுள்ளது. அது சீக்கிரத்தில் உங்களைத் தொல்லைக்குள்ளாக்கிவிடும். நீங்கள் வெறுமனே...ஓ, அது அப்படியே...பாவம் மிகவும் சுலபமானது, அது மிகவும் கவர்ச்சிகரமானது, மிகவும் இனிமையானது. அதற்குள் விழுந்து போவது மிகவும் சுலபம். செய்ய வேண்டிய மிகச் சிறந்த காரியம் என்னவென்றால், அதனுடைய சீரான தோற்றத்தில், அதிலிருந்து விலகி நிற்பதேயாகும்! திரும்பி வாருங்கள்! ஒரு உண்மையான கிறிஸ்தவனாயிருங்கள்!

137 மனிதன் ஒருவரையொருவர் முத்தமிடும்போது, நீங்கள் உங்களுடைய சகோதரனின் கழுத்தில் முத்தமிட்டால், நீங்கள் அதைச் செய்ய விரும்பினால், அது சரிதான். எந்த மனிதனின் உதடுகளிலும், வாயிலும் முத்தமிடாதீர்கள், அல்லது அதைப் போன்ற எந்தக் காரியத்தையும் செய்யாதீர்கள், ஏனென்றால் அது—அது சரியானதல்ல. பார்த்தீர்களா? இல்லை, அது—அது துவக்கத்திலேயே ஏதோ ஒரு சிறு தவறு இருப்பதைக் காண்பிக்கிறது.

பார்த்தீர்களா? எனவே அதிலிருந்து விலகி, அதைப் புறக்கணிக்க வேண்டும். இங்கே இந்தக் கூடாரத்தைச் சுற்றிலும் அதைத் துவங்க வேண்டாம். இல்லை, நாங்கள் அதை நிச்சயமாக ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். புரிகிறதா?

138 நீங்கள்—நீங்கள் உங்களுடைய சகோதரனைக் காண விரும்பினால், நீங்கள் அவருடைய கழுத்தில் முத்தமிட விரும்பினால், நீங்கள் தொடர்ந்து அதைச் செய்யுங்கள், ஆனால் ஜனங்களை வாயில் முத்தமிடாதீர்கள், ஏனென்றால் அது கிரியை செய்யாது; அது சரியல்ல! அது ஒரு விபரீதத்தை மாத்திரமே துவங்குகிறது. அது ஓரினச்சேர்க்கையாளர்களையும் மற்ற காரியங்களையும் துவங்குகிறது.

139 அதைப் போன்ற காரியங்களில் இரண்டு காரியங்கள் மாத்திரமே செய்யும்...நீங்கள் துவங்குவீர்களேயானால், அந்த மனிதர்கள்... நான் ஜனங்கள் மத்தியில் அநேக முறை கண்டிருக்கிறேன், அவர்கள் வருவார்கள். நான் சபைகளில் கண்டிருக்கிறேன், பிரசங்கியார் உள்ளே வந்து, ஒவ்வொரு சகோதரியையும், அவளைக் கட்டித் தழுவி முத்தமிட்டு அவளை அமரச் செய்தார். "சகோதரியே, நீங்கள் எப்படியிருக்கிறீர்கள், அல்லேலூயா!" கையை நீட்டி இவளை இழுத்து முத்தமிடுதல். அந்தவிதமாகச் சபையினூடாகச் செல்லுதல். என்னைப் பொறுத்தவரையில் அது தவறு!

140 நான் பின்லாந்தில் இருந்தபோது, நாங்கள் அங்கே எல்லா இடங்களிலும் இருந்தோம்...இதை நீங்கள் அறிந்திருக்கலாம், நாங்கள் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தோம். நான் ஒய்.எம்.சி.ஏ-வில் இருந்தேன். பின்லாந்தில் சோப்பு கிடையாது, சவர்க்காரம் கிடையாது. மேலும் மாத்திரம்...நான் கொஞ்சம் சவரன் சோப்பு வைத்திருந்தேன், நாங்கள் ஒவ்வொருவரும் எழுந்து நின்று துடைத்துக் குளித்துக் கொள்ள வேண்டியதாயிருந்தது, உங்களுக்குத் தெரியும், இந்தச் சவரன் சோப்புடன். எங்களிடத்தில் ஒரு துண்டு மாத்திரமே இருந்தது, எங்களிடத்தில் பின்லாந்தில் சோப்பு கிடையாது. அவர்கள் ஒருவிதமான கலவையைக் கொண்டு கழுவினால், அது கிட்டத்தட்ட உங்களுடைய தோலை எடுத்துப் போட்டுவிடும்.

141 எனவே அதன்பின்னர் நாங்கள்...அவர்கள் எங்களை ஃபின்லாந்தில் உள்ள ஒரு நீராவிக் குளியலுக்கு அறைக்கு அழைத்துச் செல்லப் போவதாக எங்களிடம் கூறினர். நாங்கள் ஒய்.எம்.சி.ஏ.வுக்குச் சென்றோம். நாங்கள் அங்கே ஒரு நீராவிக் குளியலை எடுக்கச் சென்றோம். அதுதான் அந்த ஃபின்லாந்து, புகழ்பெற்ற ஃபின்லாந்து குளியல். நான் முன்பு அவைகளை எடுத்திருந்தேன், அவைகள் அருமையாயிருந்தன. ஆனால் நான், "பாருங்கள், நாம்...ஒய்.எம்.சி.ஏ.வில் எடுக்கப் போகிறோம், அதனால் பரவாயில்லை" என்று எண்ணினேன்.

142 ஆனால் நான் அங்குச் செல்லத் துவங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் என்னிடத்தில், “நீ அதைச் செய்யாதே” என்றார். ஓ, பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பது மிகவும் நல்லது. “நீ அதைச் செய்யாதே.”

பாருங்கள், அப்பொழுது நான், “இன்று காலையில் நான் குளிக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை” என்றேன்.

வேத பண்டிதர் மன்னினெனும் மற்றவர்களும் கூறினர், “ஓ, சகோதரன் பிரான்ஹாம்,” “என்னே, அங்கே சில பெரிய கண்ணாடி அறைகள் உள்ளன,” மற்றும் என்று கூறி, “அது அழகாக இருக்கிறது” என்றனர். அவர், “அதுவல்ல...” என்றார்.

வழக்கமாக, அவர்கள் அப்படிச் செய்யும்போது, இந்தச் சூடான பாறைகள் மீது இந்தத் தண்ணீரை ஊற்றி, உங்களை முழுவதும் வியர்க்க வைத்துவிடுவார்கள், அப்படி பிர்ச் இலைகளால் உங்களை அடிப்பார்கள், பிறகு—பிறகு நீங்கள் நேராக வெளியே ஓடிச் சென்று குளிர்ந்த நீரில் குதிப்பீர்கள். அந்த ஃபின்லாந்துக்காரர்கள் நேராகப் பனி மற்றும் பனிக்கட்டி போன்ற இடங்களுக்குள் செல்வார்கள். ஆனால், நிச்சயமாக, அவர்கள் அதற்குப் பழக்கப்பட்டிருக்கிறார்கள்; பெரிய, பெரிய, உறுதியான மனிதர்கள். பிறகு அவர்கள் திரும்பி வந்து—மீண்டும் இந்த வெந்நீர்க் குளியலில் இறங்குகிறார்கள், அந்த விதமாக அவர்கள் சட்டென்று வெந்நீரிலிருந்து குளிருக்கு. ஆனால் என்னால் முடியாததால், அவர்கள் என்னைக் குளிர் காற்று இருந்த இடத்தில் நிற்க வைத்துவிட்டு, பிறகு திரும்பிச் செல்ல அனுமதித்தார்கள். அதைச் செய்ய, அது உங்களுடைய இருதயத்தை நிறுத்திவிடும் என்று நான் பயந்தேன், மேலும் அதற்குப் பழக்கமில்லாதிருந்தது.

எனவே எனக்கு—எனக்கு அவைகள் மிகவும் பிடித்திருந்தன, ஆனால் அந்த ஒன்றை எடுக்க வேண்டாம் என்று ஏதோ ஒன்று என்னிடம் கூறியுள்ளது. பாருங்கள், என்னுடைய சகோதரன் ஹாவர்ட், மற்றும் சகோதரன் பாக்ஸ்டர் மற்றும் அவர்கள் எல்லோருமே அங்குச் சென்றுகொண்டிருந்தனர், மற்றும் சகோதரர்கள், மற்ற எல்லோருமே, உங்களுக்குத் தெரியும், எல்லோரும் பேசிக்கொண்டு, உங்களுக்குத் தெரியும், மேலே செல்கிறார்கள். எனவே நான் ஒருவிதமான ஒரு சிறு குழப்பத்தை உடையவனாயிருக்கிறேன், உங்களுக்குத் தெரியும், ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர், “அதைச் செய்யாதே” என்று கூறினார்.

எனவே நாங்கள் ஒய்.எம்.சி.ஏ.க்கு சென்றோம், அவர்கள் உள்ளே வந்தனர், அங்கிருந்த எல்லா மனிதர்களும் என்னை வாழ்த்தினர். மேலும், ஓ, அவர்கள் செய்தித்தாளில் தலைப்புச் செய்தியாக, முதல் மற்றும் இரண்டாம் பக்கத்தில், ஒவ்வொரு நாளும் கூட்டங்கள் நடைபெறும் என்று வெளியிட்டிருந்தனர். அவர்கள் சுற்றிலும் இருந்தனர்.

நான் ஒரு சிறிய அறைக்குள் சென்று அமர்ந்தேன், அவர்கள் யாவரும் ஆடைகளைக் களைய அறைக்குள் சென்றனர். அவர்கள் அங்கே ஆடைகளை களை-...களைந்துகொண்டிருந்தபோது, இதோ, அழகான தோற்றமுடைய, சிறிய, ஃபின்லாந்து நாட்டைச் சேர்ந்த, பொன்னிற முடியுடைய ஒரு சிறுமி அங்கு வந்தாள்; அவர்கள் ஒரு அருமையான ஜனங்களாகவும், அவர்களால் முடிந்தளவு சுத்தமான, ஒழுக்கமுள்ள ஜனங்களாகவும் இருக்கிறார்கள். இதோ அவள் தோளின் மேல் துண்டுகளோடு அறைக்குள் நடக்கத் துவங்கினாள். நான், "ஹே, ஹே, ஹே! நிறுத்து! பிஸ்ஸ்!" என்றேன். நான் அவளைத் தடுக்க முயன்றேன். அவள் சுற்றும் முற்றும் பார்த்துச் சிரித்துவிட்டு, அங்கே உள்ளே சென்று, அவர்கள் ஒவ்வொருவருக்கும் (ஆடையேயில்லாமல் இருந்த, அந்த ஆண்களுக்கு) ஒரு துண்டு கொடுத்தாள். ஒவ்வொரு ஸ்திரீயும் வந்து, ஒரு மனிதனை அழைத்து, அந்தவிதமாக அவர்களை அங்கே கொண்டு சென்று தேய்த்துக் கழுவினர். பரிசுத்த ஆவி என்ன பொருட்படுத்துகிறது என்பதை நான் கண்டேன்.

ஆகையால் அதன்பின்னர் நான் வெளியே வந்தபோது, நான், "வேத பண்டிதர் மன்னினேன்," நான், "அது எப்படி வருகிறது? நீங்கள் கிறிஸ்தவர்களாக இருந்து, அவர்களோடு அந்த நீராவி குளியல்களை எடுத்துக்கொண்டு..." என்று கூறினேன்.

"ஓ," அவர், "சகோதரன் பிரான்ஹாம், அவர்கள் தேய்க்கும் பெண்கள்" என்றார்.

நான், "அவர்கள் என்னவாயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை. அது தவறு. அது சரியல்ல" என்றேன். அதற்கு நான், "இயற்கையே உங்களுக்குப் போதிக்கிறது" என்றேன்.

அவர், "ஏன், சகோதரன் பிரான்ஹாம், அவர்கள் குழந்தைகளிலிருந்து தேய்த்து விடுவதற்காகவே வளர்க்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவிலுள்ள உங்களுடைய செவிலியர்களைப் போன்றே, அதைப் போன்ற காரியங்கள், அவர்கள் அந்த அளவுக்கு வளர்க்கப்பட்டிருக்கிறார்கள்" என்றார்.

நான், "அவர்கள் என்னவாயிருந்தாலும் எனக்குக் கவலையில்லை, அது இன்னமும் தவறாகவே உள்ளது. முற்றிலுமாக. அது ஆணும் பெண்ணும் ஆகும், மேலும் அவைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட்டு, ஆடையணிவிக்கப்பட வேண்டும்" என்றேன். ஆமென்.

நான் அதன் பேரில் துவங்க விரும்பவில்லை, நான் சிறிது நேரம் கழித்து அதைக் குறித்து பிரசங்கிப்பேன், அல்லவா? சரி.

156ஆ. தயவு செய்து அப்போஸ்தல விசுவாசத்தை விளக்குங்கள்.

அந்த ஒரு கேள்விதான். ஒன்று, இரண்டு, மூன்று கேள்விகள் உள்ளன. *அப்போஸ்தல விசுவாசம்* என்பதற்கு

“அப்போஸ்தலர்களின் விசுவாசம்” என்று பொருள். அதைத்தான் அப்போஸ்தல விசுவாசம் பொருட்படுத்துகிறது, அதாவது நீங்கள் வேதத்தோடு தரித்திருப்பது. இப்பொழுது இன்றைக்கு அப்போஸ்தல விசுவாசம் என்று அழைக்கப்படுகின்ற, அவர்களில் அநேகர் வேதாகமத்தோடு நிலைத்திருப்பதில்லை. ஆனால் அப்போஸ்தல மார்க்கம் என்பது வேதத்தின் அப்போஸ்தல விசுவாசம், அப்போஸ்தல விசுவாசம் என்று பொருள்படுகிறது. சரி.

156இ....தங்களை அடிப்படைவாதிகள் என்று அழைத்துக் கொள்ளும் குழுவினர், இந்த இரண்டு கூட்டத்தாரும் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா?

இப்பொழுது, எனக்குத் தெரியாது. பாருங்கள், அதற்கு எப்படி பதிலளிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. இப்பொழுது, “இந்தக் குழுக்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றனவா?” எனக்குத் தெரியாது.

ஆவிக்கும்...இடையிலான வேறுபாட்டை விளக்கவும்...

பாருங்கள், இப்பொழுது இது ஒரு வித்தியாசமான கேள்வி.

இப்பொழுது, “இந்த இரண்டு கூட்டத்தாரும் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா?” நான் அதை உங்களுக்கு இன்னும் சற்று தெளிவாகப் புரிய வைக்கட்டும், “எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்திருக்காது” என்று கூறலாம்.

இப்பொழுது நினைவிருக்கட்டும், இங்கே என்னுடைய எண்ணங்கள் உள்ளன, அது தவறாக இருக்கலாம். என்னுடைய சிந்தனைகள் என்னவென்றால், ஒரு ரோமன் கத்தோலிக்கன் அல்லது அவன் யாராயிருந்தாலும், மெதோடிஸ்டு, பிரஸ்பிடேரியன், கிறிஸ்துவின் சபை, லூத்தரன், அவன் எங்கிருந்தாலும், அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசங்கொண்டு, தன்னுடைய இரட்சிப்பிற்காக அவரைப் பயபக்தியுடன் நம்பினால், அவன் இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என்று நான் விசுவாசிக்கிறேன்.

ஆனால், நீங்கள் பாருங்கள், ரோமன் கத்தோலிக்க சபை அதைச் செய்வதில்லை. சபை அவர்களை இரட்சிக்கிறது என்று அவர்கள் விசுவாசிக்கின்றனர். பார்த்தீர்களா? அவர்களுடைய—அவர்களுடைய இரட்சிப்பு சபையில் உள்ளது. சில காலத்திற்கு முன்பு, இந்தப் பாதிரியார், “திருச்சபையில், அதாவது ரோமன் திருச்சபையில் மட்டுமே இரட்சிப்பு உண்டு, வேறு இரட்சிப்பு இல்லை” என்று சொன்னதற்காக ஒளிபரப்பிலிருந்து நீக்கப்பட்டார். அது தவறு. இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவினால் உண்டாயிருக்கிறது. அது உண்மை. சபையினால் அல்ல; ஆனால் கிறிஸ்துவினால் தான்.

இப்பொழுது அவர் அப்போஸ்தலரென்று, அல்லது ஆம், அப்போஸ்தலர்கள் என்றும், அடிப்படைவாதிகள் என்றும் தங்களை அழைத்துக் கொள்வார்களானால்...

இப்பொழுது இங்கே கொஞ்ச காலத்திற்கு முன்னர், ஒரு அடிப்படைவாதி என்னிடத்தில் வந்து, அவர் என்னிடம், "நீங்கள் ஒருவிதமாக கால்வினிசத்தைச் சார்ந்தவர், இல்லையா?" என்று கேட்டார்.

நான், "பாருங்கள், கால்வின் வேதாகமத்தில் இருக்கும் வரை, நான் அவரோடு இருக்கிறேன்" என்றேன். நான், "நான் வேதாகமத்தோடு செல்கிறேன், கால்வின் வேதாகமத்தில் தரித்திருந்தால் நலமாயிருக்கும். ஆனால் அவர் வேதாகமத்தை விட்டு விலகிச் சென்றால், அப்பொழுதும் நான் தொடர்ந்து சென்று வேதாகமத்தை விசுவாசிப்பேன்" என்றேன்.

அவர், "சரி," என்று கூறி, அவர், "நான் உங்களுக்கு ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஒரு மனிதன் ஒரு முறை இரட்சிக்கப்பட்டிருந்தால், அவன் ஒருபோதும் இழக்கப்பட முடியாது என்று நீர் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்" என்று கூறினார்.

நான், "அப்படித்தான் வேதம் கூறுகிறது. 'அவன் நித்திய ஜீவனை உடையவராயிருக்கிறான், அவர் ஒருபோதும் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்'" என்றேன். நான், "அது நான் கூறவில்லை. அதுதான் இயேசு கிறிஸ்து அதைக் கூறினார்" என்று கூறினேன்.

அவர், "அப்படியானால் நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன்" என்றார். "சவுல் இரட்சிக்கப்பட்டான் என்று நீர் விசுவாசிக்கிறீரா?" என்று கேட்டார்.

நான், "சவுல், சவுல் இராஜாவா?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "ஆம்" என்றார்.

143 "ஏன்," நான், "நிச்சயமாக!" என்றேன்.

அவர், "இப்பொழுது நினைவிருக்கட்டும், அவன் ஒரு தீர்க்கதரிசியாய் இருந்தான்" என்றார்.

144 நான், "அவன் தீர்க்கதரிசிகளைக் கொண்டு தீர்க்கதரிசனம் உரைத்ததாக வேதம் கூறுவது சரியே" என்றேன். அவன் ஒரு தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்தான். அவன் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கவில்லை, ஆனால் அவன் ஒரு தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்தான், ஏனெனில் தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டிருந்தபோது, அவனும் அவர்களோடு கூட இருந்தான். ஆனால் அந்த நாளில் சாமுவேல் தீர்க்கதரிசியாயிருந்தான் என்பதை நாம் அறிவோம், ஆனால், சவுல் தீர்க்கதரிசிகளோடு தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டிருந்தான்.

அவர், "அப்படியானால் அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தால், அப்பொழுது அவன் இரட்சிக்கப்பட்டானா?" என்று கேட்டார்.

நான், "முற்றிலும்!" என்றேன்.

அவர், “அப்படியானால் நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன்” என்றார். “நான் உம்மிடம் ஒரு காரியம் கேட்க விரும்புகிறேன்” என்றார். மேலும், “அப்படியானால் சவுல் இரட்சிக்கப்பட்டான் என்று நீங்கள் கூறுகிறீர்கள், அவன்—கர்த்தர் அவனை விட்டுப் பிரிந்து சென்று, அவன் தேவனுக்கு ஒரு சத்துருவானான் என்று வேதம் கூறியுள்ளது, அவன் தற்கொலை செய்து கொண்டான், அதன்பின்னர் அவன் இரட்சிக்கப்பட்டான் என்று கூறுகிறீரே?” என்று கேட்டார்.

145 நான், “நீங்கள் ஒரு அடிப்படைவாதியா?” என்று கேட்டேன். நான், “சகோதரனே, நீங்கள் அதைச் சரியாக வாசிக்கவில்லை; அவ்வளவுதான். வேதம் கூறியுள்ளதை நீங்கள் படித்துக் கொண்டிருக்கவில்லை” என்றேன்.

அவர், “சவுல் தேவனுடைய சத்துருவாகிவிட்டால், அவன் இரட்சிக்கப்பட முடியாது” என்றார்.

நான், “சவுல் இரட்சிக்கப்பட்டான்” என்றேன்.

“ஓ,” அவர் கூறினார்...

146 நான், “அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான், அவன் இரட்சிக்கப்பட வேண்டியதாயிருந்தது. பார்த்தீர்களா? தேவன் அவனை இரட்சித்தார், நாம் அழைக்கிறபடி, தேவன் ஒன்றைக் கொடுத்துவிட்டு திருப்பிக் கேட்பவரல்ல. அவர்...பாருங்கள், தேவன் உங்களுக்குப் பரிசுத்த ஆவியை அளித்து, அவர் உங்களை இங்கேயே இழக்கப் போகிறார் என்பதை அறிந்து, ஏன், அவர் உங்களுக்கு முதலாவதாகப் பரிசுத்த ஆவியை அளிப்பது என்ன ஒரு முட்டாள்தனமான காரியமாயிருக்கும்” என்றேன்.

147 நீங்கள் பரிசுத்த ஆவியைப் போலப் பாவனை செய்து, நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளது போன்று செயல்படலாம், ஆனால் நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தால், தேவன் உங்களுடைய துவக்கத்தையும் முடிவையும் அறிந்திருக்கிறார். அது உண்மையே! அது வேலையை நடத்துவதற்கான ஒரு தளர்வான முறையாகும். தேவன் தம்முடையவற்றில் அவ்வாறு செயல்படுகிறதில்லை... அவர்—அவர் முடிவற்றவர், அவர் துவக்கம் முதல் முடிவுவரை அறிந்திருந்தார், இங்கு இருக்க வேண்டிய ஒவ்வொரு காரியத்தையும் அறிந்திருந்தார். ஒவ்வொரு ஈயும், அல்லது ஒவ்வொரு கொசும் பூமியின் மேல் எப்போதும் இருக்கும் என்பதை, அவர் உலகம் தோன்றுவதற்கு முன்னரே அவை யாவற்றையும் அறிந்திருந்தார். எனவே பாருங்கள், அவர் எதற்காகத் தம்முடைய ஊழியத்தை அந்தவிதமாக நடத்துவார்? அவர் அதைச் செய்கிறதில்லை.

148 நீங்கள் ஒருமுறையாவது பரிசுத்த ஆவியைப் உண்மையாகவே பெற்றிருந்தால், நீங்கள் நித்தியமாக இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். அதை வேத வாக்கியங்களின் மூலமாக என்னால் நிரூபிக்க முடியும், நாம் அதை அநேக முறை நியமித்திருக்கிறோம். ஆனால்

இந்தக் கேள்விகளைப் பெற்றுக்கொள்ள நேரத்தை மிச்சப்படுத்த, நான் இதைக் கூறலாம் (நீங்கள் பாருங்கள்?), இந்த நபர், "சரி, அப்படியானால் நீங்கள் சவுலைக் குறித்து என்ன கூறுவீர்கள்?" என்று கேட்டார்.

149 நான், "நிச்சயமாகச் சவுல் இரட்சிக்கப்பட்டான்" என்றேன். நான், "சவுல் பின்வாங்கிப் போனான் என்பது நினைவிருக்கட்டும்; நான் அதை ஒப்புக்கொள்வேன். அவன் பேராசையுள்ளவனாயிருந்த காரணத்தால், அவன் பின்வாங்கித் தேவனை விட்டு அகன்று சென்றான். அவன் பணத்தை விரும்பினான்" என்றேன். சாமுவேல் தேவனுடைய வார்த்தையினூடாக எல்லாவற்றையும் அழிக்கும்படி அவனிடம் கூறியபோது, அவன் அந்த எல்லா பலிகளையும் மற்ற காரியங்களையும் கொண்டு வந்திருந்தான். ஆனால் அவன் ராஜாவைக் கூடக் காப்பாற்றினான், மேலும் நிறைய பொருட்களையும் காப்பாற்றினான், அதைக் கொண்டுவந்தான் ஏனென்றால்...பார்த்தீர்களா? அது கூறுகிறவிதமாகத் தேவனுடைய வார்த்தையை அப்படியே பின்பற்றுவதற்குப் பதிலாக, நீங்கள் உங்களுடைய சொந்த கருத்தை அதில் வைக்கிறீர்கள்; அங்குதான் நீங்கள் பின்வாங்கிப் போகிறீர்கள்.

150 ஸ்தாபனங்களைக் குறித்தும் மற்றக் காரியங்களைக் குறித்தும் நான் அப்படித்தான் கருதுகிறேன், அவர்கள் வார்த்தையைப் பின்பற்றாத காரணத்தால், அவர்கள் பின்வாங்கிப் போகிறார்கள். நீங்கள் வார்த்தையை அவர்களுக்குக் காண்பியுங்கள், அவர்கள் அதிலிருந்து தங்களுடைய முதுகைத் திருப்பி, "ஓ, எங்களுடைய சபை *இதைப்* போதிக்கிறது" என்று கூறுகிறார்கள். அது சரியல்ல, அது தேவன் கூறியுள்ள காரியமாயிற்றே!

151 சாமுவேல் அங்கே சென்று—இல்லை சவுல் எல்லாவற்றையும் முற்றிலுமாக அழித்துப் போடும்படி கட்டளையிடப்பட்டான். "எல்லாவற்றையும், நீ அதை அழித்துப் போடு." அதைச் செய்வதற்குப் பதிலாக, அவன் சிலவற்றைப் பலிக்காகச் சேமித்து வைத்தான், அவன் இராஜாவின் ஜீவனைக் காத்தான், அவன் எல்லாவற்றையும் செய்தான். சாமுவேல் அவனிடத்திற்கு நடந்து சென்று, தேவனுடைய ஆவி அவனை விட்டு அகன்று போய்விட்டது என்றும்—அதைப் போன்ற மற்ற எல்லாவற்றையும் அவனிடத்தில் கூறினான்.

152 சாமுவேல் மரித்துப் போனான். ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அப்பொழுது சரி, சவுல் பெற்றிருந்த... தேவனுடைய ஆவி அவனை விட்டுச் சென்றுவிட்டது, ஆனால் அவன் இழக்கப்படவில்லை. நிச்சயமாக அவன் அப்படியிருக்கவில்லை, அபிஷேகம் அவனை விட்டுப் போய்விட்டது. இப்பொழுது கவனியுங்கள், அது இப்பொழுது உள்ளதா என்று பாருங்கள்.

153 சவுல் தேவனை விட்டு மிகவும் தூரமாய் விலகி, அவன் யுத்தத்திற்கு சென்றபோது...அவன் யுத்தத்திற்கு செல்லத் துவங்கினான். அவன் யுத்தத்திற்கு செல்வதைக் குறித்து கவலை கொண்டிருந்தான், அவன்—அவன் கர்த்தரிடத்தில் ஒரு சொப்பனத்தைக் கேட்டான். கர்த்தர் அவனுக்கு ஒரு சொப்பனத்தையும் அளிக்கவில்லை. அந்நாளில் தேசத்தில் தீர்க்கதரிசிகளே இல்லை, தீர்க்கதரிசிகளே இல்லை. சாமுவேல் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான். அவர்களிடம் தீர்க்கதரிசனம் உரைப்பவர்களை எல்லாம் இருந்தார்கள், ஆனால் அவர்களால்—அவனால் எந்த வழியிலும் தேவனிடத்திலிருந்து ஒரு பதிலைப் பெற முடியவில்லை. அவன் ஊரீம் மற்றும் தும்மீம் வரை சென்று அங்கே கேட்டான். அப்பொழுது ஊரீம் மற்றும் தும்மீமின் மீதிருந்த மின்னலின் ஒளி கூட அவனுக்குப் பதிலளிக்கவில்லை. அவன் என்ன செய்தான்? அவன் ஒரு குகைக்குள் ஊர்ந்து சென்றான், அங்கே ஒரு சூனியக்காரி, குறி சொல்பவள் இருந்தாள். இந்தச் சூனியக்காரி... அவன் ஒரு வீட்டு வேலைக்காரனை போல வேடமிட்டு அங்கே சென்றான், அதற்கு அவன், "தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் ஆவியைக் எனக்குக் குறிசொல்ல வைப்பீரா?" என்று கேட்டான்.

மேலும் அவள் கூறினாள்—அவள், "சரி இப்பொழுது, சவுல் என்னைக் கூறினான் என்று உனக்குத் தெரியுமா" என்றாள். (அவள் சவுலிடம் பேசிக்கொண்டிருந்தாள், ஆனால் அவள் அதை அறியவில்லை.) மேலும், "சவுல் அஞ்சனம் பார்க்கிற ஆவிகளைக் கொண்ட யாவரும் கொல்லப்பட வேண்டும் என்று கூறினான்" என்றாள்.

அவன், "நான் உன்னைச் சவுலிடமிருந்து பாதுகாப்பேன், ஆனால் சாமுவேலின் ஆவியினால் எனக்குக் குறி சொல்லு" என்றான்.

ஆகவே அந்தச் சூனியக்காரி தன் மாயவித்தைகளில் இறங்கினாள், முதலாவது காரியம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா, சாமுவேல் எழுந்து நிற்பதை அவள் கண்டதும், அவனுடைய ஆவி அவர்களுக்கு முன்பாகத் தோன்றினபோது, அவள், "தேவர்கள் பூமியிலிருந்து எழும்புவதை நான் காண்கிறேன்" என்றாள்.

154 அது ஆறுதல்களில் ஒன்று. வயதான சாமுவேல் அங்கே நிற்பதைப் பாருங்கள். அவன் மரித்து இரண்டு வருடங்கள் ஆகியிருந்தன, ஆனால் அவன் அங்கேயே நின்றான். மாத்திரமல்ல... அவன் தன்னுடைய தீர்க்கதரிசியின் அங்கியுடன் அங்கே நின்று கொண்டிருந்தான். அவன் இன்னமும் உயிரோடிருந்தது மாத்திரமல்ல, அவன் அப்பொழுதும் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான். அல்லேலூயா!

அவள், "நீ என்னை வஞ்சித்துவிட்டாய்" என்றாள். தீர்க்க-...

அப்பொழுது சவுல், "சாமுவேலே, எனக்கு என்ன

செய்வதென்றே தெரியவில்லை; நான் நாளை யுத்தத்திற்கு செல்லப் போகிறேன், ஆவியானவர் என்னை விட்டுப் போய்விட்டார்" என்றான். அவன், "என்னால் கர்த்தரிடத்திலிருந்து ஒரு சொப்பனத்தைக் கூடப் பெற முடியவில்லை. ஊரீம் மற்றும் தும்மீம் என்னிடத்தில் பேசவில்லை. நான் ஒரு பயங்கரமான நிலையில் இருக்கிறேன்" என்றான்.

155 அவன், "நீ தேவனுக்கு சத்துருவானாய்" என்று கூறி, "என்னுடைய இளைப்பாறுதலிலிருந்து ஏன் என்னை அழைத்துள்ளாய்?" என்று கேட்டான். பார்த்தீர்களா? சாமுவேல் அதைக் கூறினான். "நீ தேவனுக்கு சத்துருவானாயென்றும், என் இளைப்பாறுதலிலிருந்து என்னை அழைத்தது ஏன்?" என்று கேட்டான். அதன் பிறகு அவன் அவனிடம் சொன்னான். அவன் கூறினான்...ஆனாலும், அவன் கர்த்தருடைய வார்த்தையை அவனிடம் கூறுவான். அவன் அதைச் செய்தபோது...அவன் மரித்து இரண்டு வருடங்கள் ஆகியிருந்தது என்பது, இப்பொழுது நினைவிருக்கட்டும். பார்த்தீர்களா? ஆனால் அவனோ, "நான் உங்களுக்கு வார்த்தையைக் கூறுவேன்" என்றான். அவன் கர்த்தருடைய வார்த்தையை அவனிடத்தில் கூறினான். "நாளை நீ யுத்தத்தில் விழப்போகிறாய், உன்னோடு உன் மகன் யோனத்தானும் விழப்போகிறான். மேலும்," என்று கூறிவிட்டு, அவன், "நாளை இரவு இந்த நேரத்தில் நீ என்னோடு இருப்பாய்" என்றான். அவன் இழக்கப்பட்டிருந்தால், தீர்க்கதரிசியாகிய சாமுவேலும் இழக்கப்பட்டிருப்பான். அது அடிப்படைவாதம்; அப்படிச் சொல்லப்படுவது என்னவென்று பார்த்தீர்களா. பாருங்கள், பார்த்தீர்களா? அவன், "நாளை இரவு இதே நேரத்திற்குள் நீ என்னுடன் இருப்பாய்" என்று சொன்னான். பார்த்தீர்களா? அப்பொழுது சவுல் இழக்கப்பட்டிருந்தால், சாமுவேலும் இழக்கப்பட்டிருப்பான், ஏனென்றால் அவர்கள் இருவரும் ஒரே இடத்தில் இருந்தனர்.

156 இல்லை, இல்லை! அடிப்படைவாதிகள், நீங்கள்... அடிப்படைவாதிகள் என்று அழைக்கப்படுபவர்கள், கிறிஸ்துவின் சபை என்று அழைக்கப்படுவதையும், கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுவதையும், கிறிஸ்தவ மார்க்கம் என்று அழைக்கப்படுவதையும் போல. இன்றைக்கு நீங்கள் ஒரு அமெரிக்கராக இருப்பதால், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருக்க வேண்டும், ஏனென்றால் நீங்கள்—நீங்கள் ஒரு அமெரிக்கர். பார்த்தீர்களா? அது—அதுதான் கிறிஸ்தவ மார்க்கம் என்று அழைக்கப்படுகின்றது. ஆனால் ஒரு உண்மையான கிறிஸ்தவனோ ஆவியில் மறுபடியும் பிறந்த ஒரு மனிதனாயும், ஆவியில் மறுபடியும் பிறந்த ஒரு ஸ்திரீகளாயுமிருக்கிறார்கள். அது உண்மையாகவே...இந்த மற்றவர்கள் ஆள்மாறாட்டம் செய்கிறார்கள், ஆனால் உண்மையான கிறிஸ்தவர்கள் தேவனால்

அழைக்கப்பட்டவர்கள்.

157. ஆவிக்கும் ஆத்துமாவிற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைத் தயவு கூர்ந்து விளக்குங்கள்.

157 சரி இப்பொழுது, அது ஒரு கடினமான ஒன்றாகும். ஆனால் முதலாவது காரியம், நீங்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியைப் போன்ற ஒரு திரித்துவ சரீரமாயிருக்கிறீர்கள். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று பட்டப்பெயர்கள் ஒரே நபருக்குச் செல்கின்றன, அது இயேசு கிறிஸ்து. நீங்கள் ஆத்துமா, சரீரம், ஆவியாய் இருக்கிறீர்கள். ஆனால் உங்களை உருவாக்குவதற்கு அந்த மூன்று தேவைப்படுகிறது. அவைகளில் ஒன்றைக் கொண்டு, நீங்கள் நீங்களாய் இருக்கவில்லை. உங்களை உண்டாக்க மூன்று தேவை.

158 அன்றொரு நாள் நான் கூறினது போல, "இது என்னுடைய கரம்; இது என்னுடைய விரல்; இது என்னுடைய மூக்கு; இது என்னுடைய கண்கள்; ஆனால் *நான்* யார்?" என்று கேட்டேன். இதற்குச் சொந்தமான நான் யார்? அது என்னுடைய உட்புறத்தில் என்ன இருக்கிறது; அதுதான் அறிவுத்திறன்.

இந்தக் கண்கள், இந்தக் கரங்கள், இந்தச் சரீரம் இன்றைக்கு இருப்பது போலவே இங்கே நின்றிருந்தால், இன்னமும் என்னால்—என்னால்...என்னுடைய சரீரம் இங்கே இருக்கக்கூடும், ஆனால் *நான்* என்னவாக இருக்கிறேனோ, நான் போய்விட்டிருக்கலாம். என்ன—எனக்குள்ளாக நான் யாராயிருக்கிறேனோ, அது போய்விட்டது. அது—அந்தப் பாகம்—அந்தப் பாகம் தான் ஆவி. ஆத்துமா என்பது அந்த ஆவியின் சுபாவமாய் உள்ளது, அதாவது பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போது, அது ஒன்றையும் செய்கிறதில்லை... நீங்கள்...அது உங்களுடைய ஆவியை ஒரு வித்தியாசமான ஆத்துமாவாக மாற்றுகிறது அல்லது மாற்றுகிறது. அந்த ஆத்துமா அந்த ஆவியின் மேல் உள்ள ஒரு வித்தியாசமான சுபாவமாய் உள்ளது. எனவே ஆத்துமா உங்களுடைய ஆவியின் சுபாவமாய் உள்ளது.

159 நீங்கள் முதலில் இழிவாகவும், பொல்லாங்காகவும், பகைமையுடனும், குரோதத்துடனும், சண்டை சச்சரவுகளுடனும் இருந்தீர்கள்; இப்பொழுது நீங்கள் அன்பாகவும், இனிமையாகவும், தயவாகவும், மற்றும்—மற்றும்...வேறுபாடு புரிகிறதா? அது உங்களுடைய சுபாவம். நாம் அழைப்போம், நான் அதை அவ்வாறு அழைக்கிறேன். அது மாற்றப்பட்டிருக்கிற உங்களுடைய ஆத்துமாவாகும். பழைய ஆத்துமா மரித்து, புதிய சுபாவமாகிய புதிய ஆத்துமா உங்களுக்குள் பிறந்தது. பார்த்தீர்களா?

160 உங்களுடைய மூளை உங்களுடைய அறிவாற்றல் அல்ல; அது உங்களுக்குள் இருக்கிற உங்களுடைய ஆவி, உங்களுடைய அறிவுத்திறனாயிருக்கிறது. பார்த்தீர்களா? உங்கள் மூளை என்பது

வெறும் சடப்பொருட்கள் மற்றும் உயிரணுக்கள் போன்றவை; அதற்குச் சுய அறிவு கிடையாது. அப்படி இருந்திருந்தால், அது அங்கே இருக்கும் வரை, நீங்கள் உயிரோடு இருந்தாலும் சரி, இறந்திருந்தாலும் சரி, அது இயங்கிக்கொண்டே இருக்கும். புரிகிறதா? ஆனால் அது—அது உங்களுடைய மூளையல்ல; அது உங்களுக்கு உள்ளே இருக்கிற உங்களுடைய ஆவியாகும். உங்களுடைய ஆத்துமா அந்த ஆவியின் சுபாவமாயிருக்கிறது. அந்த ஆவியின் ஆத்துமாவே கட்டுப்படுத்துகிறது—ஆவி சரீரத்தை கட்டுப்படுத்துகிறது. பார்த்தீர்களா? அங்குதான் காரியம்.

இப்பொழுது, நான் துரிதமாக முடிக்க வேண்டும், ஏனென்றால் நாம் சற்று தாமதமாகிக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது, அது அதைக் கவனித்துக்கொள்ளும் என்று நான் நினைக்கிறேன்—நான் நம்புகிறேன்.

158. சகோதரன் பிரான்ஹாம், ஸ்திரீகள் சபையில் சாட்சி பகர வேண்டுமா அல்லது அந்நிய பாஷையில் பேச வேண்டுமா என்பதை தயவு கூர்ந்து விளக்கி—தயவு கூர்ந்து தெளிவுபடுத்துங்கள்.

161 பாருங்கள், ஒரு பெண் சபையில் ஒரு—ஒரு பிரசங்கியாக இருந்தால், அவள் ஒரு பிரசங்கியாக இருக்கக்கூடாது என்று நான் நினைக்கிறேன். ஆனால் அவள் அந்நிய பாஷைகளில் பேசும் வரத்தைப் பெற்றிருந்து, சபையில் பேசுவாளேயானால், அங்கே—அங்கே தீர்க்கதரிசிகள் மற்றும்—மேலும் வரங்கள் ஒருமித்து திரட்டப்பட்டிருக்கின்றன, அதைச் செய்ய அவளுக்கு உரிமை உண்டு என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் வேதாகமத்தில் அவர்கள் மிரியாமைப் போன்ற தீர்க்கதரிசிகளை உடையவர்களாயிருந்தனர் என்பதை நாம் கண்டறிகிறோம், மேலும் அவர்களுக்கு—அவர்களுக்கு எந்த அதிகார வரம்பும் இல்லை...நான்—நான் என் சிறு பிரசங்கத்திற்கு வரும்போது, அதையும் சேர்த்துக்கொள்வேன். புரிகிறதா?

162 ஆனால் ஸ்திரீகளோ, அவர்கள் வரம் பெற்றவர்களாயிருந்தால்... இப்போது, நான் நம்பும் சரியான வழி என்னவென்றால், நாம் மிக விரைவில் ஒன்று கூடும்போது...நம்முடைய சபை இன்னும் கொஞ்சம் நிலைபெறும்போது...மேலும்—மேலும் சொல்லப்போனால், ஒரு புதிய குழு, ஒரு புதிய—மற்றொரு சபை இணையப்போகிறது...?...அவர்களுக்காகவும் மற்ற காரியங்களுக்காகவும் நாம் இங்கே இடம் கிடைத்தவுடனே, இந்தச் சபையோடு வருகிறது. வேறொரு சபை வந்து இந்தச் சபையோடு இணையப்போகிறதேயன்றி, எந்த ஸ்தாபனத்தோடும் இணையப் போகிறதில்லை, சபைக்கு, ஒரு சரீரமாக, ஒரு குழுவாக வர வேண்டும். மேலும்—மேலும் அவர்கள் வரம் பெற்ற ஒரு கூட்ட ஜனங்கள்.

163 இப்பொழுது, அது ஒன்று சேர்ந்து வரும்போது, செய்ய வேண்டிய காரியங்கள், இந்த வரம் பெற்ற ஜனங்கள் தங்களுக்கெனக் குறிப்பிட்ட நேரங்களில் ஒன்று கூடி, அவர்களுக்கு ஆவியானவர் என்ன கூறுகிறார் என்று பார்க்க வேண்டும். அப்பொழுது அது மேடையிலிருந்து கொடுக்கப்படலாம். ஜனங்கள்...அது சபையின் பக்திவிருத்திக்காகவே.

164 இப்பொழுது, நீங்கள் அந்நிய பாஷையில் பேசினால், உங்களுக்குத் தெரியும், யாருமே அதற்கு அர்த்தம் உரைக்கவில்லையென்றால்...அதன்பின்னர் நீங்கள் கூட்டங்களில் இருக்கும்போது, சில சமயங்களில் அது மிகவும் பயபக்தியற்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் சில நேரங்களில்...நான் என்னுடைய சபையில் நின்றுகொண்டு பீட அழைப்பு விடுத்து வருகிறேன், யாராவது ஒருவர் எழுந்து நின்று அந்நிய பாஷைகளில் பேசிப் பீட அழைப்பை முறிப்பார். இப்பொழுது பாருங்கள், இப்பொழுது அந்த நபர் சரியாக அந்நிய பாஷையில் பேசிக் கொண்டிருக்கலாம்; அது பரிசுத்த ஆவியாக இருக்கலாம், ஆனால் பாருங்கள், என்ன செய்ய வேண்டும் என்றும், அதை எப்படி பற்றிக் கொள்ள வேண்டும் என்றும் போதிக்கப்படாமல்...

165 நான் மேடையின் மேல் அமர்ந்து, ஒரு பிரசங்கி பிரசங்கிப்பதைக் கேட்டு, அவர் ஒரு சிக்கலான இடத்திற்கு வருவதைக் கண்டிருக்கிறேன்...என்னே, நான் எழுந்து அவருக்கு உதவி செய்ய விரும்பினேன். என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. நீங்களும் அதேக் காரியத்தைச் செய்திருக்கிறீர்கள்; நாம் யாவரும் அதைச் செய்கிறோம். ஆனால் அது என்ன? அது மரியாதையற்றது. உட்காருங்கள். என் சகோதரனைக் கவனியுங்கள்.

166 சகோதரர் நெவில் பிரசங்கம் செய்வதை நான் கேட்டேன்—நான் கேட்டேன், நாங்கள் இருந்தபோது, சந்தேகமின்றி, நான் பிரசங்கம் செய்வதை அவரும் கேட்டிருக்கிறார்...இங்குள்ள சகோதரர் ஜே. டி. மற்றும் அவர்கள் அனைவரும், அல்லது—அவர்கள் அனைவரும், நாம் ஒருவரையொருவர் பிரசங்கிப்பதைக் கேட்க முடியும் என்று நாம் நினைக்கிறோம், "ஓ சகோதரனே, அவருக்கு உதவி செய்ய நான் எழும்பி வருவேன் என்று நான் நம்புகிறேன்." பார்த்தீர்களா? ஆவியானது உங்கள்மேல் ஊற்றப்படுவதை நீங்கள் உணருகிறீர்கள், ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அமைதியாயிருங்கள். பார்த்தீர்களா? ஏனெனில் தீர்க்கதரிசிகளின் ஆவி தீர்க்கதரிசிக்கு அடங்கியிருக்கிறது. பார்த்தீர்களா? அது உண்மை, அமைதியாயிருங்கள். பார்த்தீர்களா? நீங்கள் அதைச் செய்யுங்கள்.

167 ஆனால் நான் நினைக்கிறேன் ஸ்திரீ என்றால்...அந்தக் கேள்வி என்னவென்றால், அந்த ஸ்திரீ அந்நிய பாஷை பேசும் வரத்தைப் பெற்றிருந்து, அவள் பேச விரும்பினால், அந்த நேரம் வரும்போது, அந்நிய பாஷைகளில் பேசுவதற்கு அவளுக்கு உரிமை உண்டு

என்று நான் நினைக்கிறேன், ஆனால் பிரசங்கிக்கவோ அல்லது மனிதன் மேல் எந்த அதிகாரத்தையும் செலுத்தவோ கூடாது. அவள் ஒரு பிரசங்கியாக இருக்கும்போது, உண்மையாகவே அவள் ஒரு மனிதனுக்கு மேல் அதிகாரம் செலுத்துகிறவளாய் இருக்கிறாள்.

159. சகோதரன் பிரான்ஹாம், இதற்கு முன்பு மணம் புரிந்து கொண்ட ஒரு பெண்ணை நான் திருமணம் செய்து கொண்டேன். நாங்கள் விவாகரத்து செய்துவிட்டோம், அதன்பின்னர் அவள் இரண்டு முறை திருமணம் செய்து கொண்டாள். நாங்கள் விவாகம் செய்துகொள்ள விரும்பினால்—நாங்கள் விவாகம் செய்துகொள்ள விரும்பினால், முதல் மனைவியிடம்...திரும்ப வேண்டும் என்று வேதம் கூறுகிறது. இப்பொழுது, நான் இதற்கு முன்பு விவாகம் செய்தவளிடம் திரும்பலாமா அல்லது நான் சுதந்திரமாக இருக்கலாமா?

168 சரி இப்பொழுது, என் சகோதரனே, நீங்கள் அதைச் செய்யக்கூடிய ஒரே வழி இதோ உள்ளது. இப்பொழுது, இது ஒரு மகத்தான பொருள், என்றோ ஒரு நாள் நான்—நான் விரும்புகிறேன், சபையானது ஸ்தாபனம் உண்டாக்கி, அது இருக்க வேண்டிய இடத்திற்கு நேராக்கப்படுமானால் அல்லது...நான்—நான் இதைப் பயபக்தியுடன் கூறுகிறேன், நான்...சபைகளில் இந்த விவாகம் மற்றும் விவாகரத்து ஆகிய இரண்டு பிரிவுகள் உள்ளன, ஒருவர் ஒரு பிரிவினரையும், ஒருவர் மற்றொரு பிரிவையும் பற்றிக்கொண்டிருக்கிறார். என்னுடைய கருத்துப்படி, தேவனுக்கும் அவருடைய வேதாகமத்திற்கும் முன்பாக என் இருதயத்தில் கிருபையினால், அவைகள் இரண்டுமே தவறாயிருக்கின்றன. பார்த்தீர்களா? ஆனால் அங்கே ஒரு உண்மை அடங்கியிருக்கிறது.

169 இயேசு என்ன கூறினார் என்று நீங்கள் கவனிப்பீர்களேயானால்... இப்பொழுது இங்கே, எனக்கு ஒரு சகோதரன் இருக்கிறார், என்னுடைய சொந்த இரத்தம் கொண்ட சகோதரனே, ஒரு பெண்ணை மணக்க ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறான். என்னுடைய சகோதரன் இதற்கு முன்பு ஒரு நல்ல பெண்ணின் மூலம் ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிறான். அவனுக்குத் திருமணம் செய்து வைக்க அவன் என்னிடம் வந்தான். நான், "முடியவே முடியாது!" என்று கூறினேன்.

170 இயேசு மத்தேயு 5-ல், "தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருவனை விவாகம்பண்ணுகிற எவனும் வேசித்தனத்திற்கான காரணத்தை மறைத்து (திருமணத்திற்கு முன்பு அவள் அதைச் செய்ய வேண்டியிருந்தது, அதைப் பற்றி அவனிடம் சொல்லவில்லை), அவள் விபச்சாரஞ் செய்யக் காரணமாயிருக்கிறது: புறம்பே தள்ளப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவன் விபச்சாரத்தில் வாழ்கிறான்" என்றார். எனவே அதைச் செய்யாதீர்கள். இல்லை, உங்களுடைய—உங்களுடைய முதல் மனைவி மறுபடியும் விவாகம் செய்து கொண்டால், நீங்கள் அவளிடம் திரும்பிச் செல்ல முடியாது.

ஆனால் நீங்கள்—அவள் உங்களை விவாகரத்து செய்து விட்டு, உங்களைத் தள்ளிவிட்டு...

171 அப்பொழுது நீங்கள், "நான் விடுதலையாகிவிட்டேனா?" என்று கேட்டீர்கள். நான் அதை மீண்டும் வாசிக்கட்டும். "நான் இதற்கு முன்பு விவாகம் செய்து கொள்ளாத ஒரு பெண்ணை மணந்து கொண்டேன். நாங்கள் விவாகரத்து செய்துகொண்டோம், அவள் இரண்டு முறை திருமணம் செய்துள்ளாள் (அந்த நபர் இன்னும் திருமணமாகாமல் இருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்.) நாம் விவாகம் செய்துகொள்ள விரும்பினால் மறுபடியும் முதலில்... வேண்டும்" என்று வேதம் கூறுகிறது.

172 இல்லை, ஐயா! லேவிய பிரமாணங்களுக்குள் சென்று பாருங்கள். நீங்கள் அந்தப் பெண்மணியிடம் திரும்பிச் சென்றால், அவள் வேறொருவருடைய சொத்து. நீங்கள் உங்களைக் கறைப்படுத்திக் கொண்டு, உங்களை முன்பைக் காட்டிலும் மோசமாக்கிக் கொண்டீர்கள். இல்லை, வேறு யாரோ ஒருவருக்கு விவாகம் செய்து கொண்ட ஒரு மனைவியை நீங்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாது.

173 இப்பொழுது, "நான் இதற்கு முன்பு விவாகம் செய்து கொண்டவளிடத்தில் திரும்பலாமா அல்லது நான்—அல்லது நான் சுதந்திரமாக இருக்க வேண்டுமா?" நீங்கள் விடுதலையாயிருக்கிறீர்கள்! சுதந்திரமாய் இருங்கள்! ஆம், நீங்கள் மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டாம். இல்லை, ஐயா! அவள் வேறொருவரை மணந்து கொண்டாள்; அவளை விட்டு விலகியிருங்கள். அது உண்மையே! இல்லை...அது அசுத்தமானது...?...நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். நமக்கு இன்னும் சிறிது நேரம் இருக்குமானால், நான் அதற்குள்ளாகச் செல்லமாட்டேன், ஆனால் என்னுடைய சகோதரனே, நீங்கள் யாராயிருந்தாலும் உங்களுடைய கேள்விக்காக மாத்திரம்: இல்லை, ஐயா! நீங்கள் திரும்பிச் சென்று அந்தப் பெண்ணை அழைத்துச் செல்ல வேண்டாம் அவள் உன்னை விவாகம் செய்ததிலிருந்து இரண்டு அல்லது மூன்று முறை விவாகம் செய்து கொண்டிருக்கிறாள். அது தவறு.

174 சமீபத்தில் இங்கே, இதற்கு முன்பே திருமணமாகி விவாகரத்து செய்த ஒரு—வயதான தம்பதியருக்கு நான் திருமணம் செய்து வைத்தேன், அவர்கள் பிரிந்து சென்றுவிட்டார்கள். பாருங்கள், அவர்கள் சகோதரன் மற்றும் சகோதரி பக்கெட்; அது சரியாக அப்படித்தான் இருந்தது. அவர்களால் ஒத்துப்போக முடியவில்லை, அவர்களுக்கு இடையே ஒரு சிறு சண்டை இருந்தது; அவர்கள் விவாகரத்து செய்தனர். அவள் தன்னால் முடிந்தவரை உண்மையாகவும் தனிமையாகவும் வாழ்ந்தாள், அவரும் அதேபோல வாழ்ந்தார். கொஞ்சங் கழித்து, அவர்கள் எவ்வளவு முட்டாள்தனமானவர்கள் என்று கண்டு, அவர்கள்

திரும்பி வந்து விவாகம் செய்துகொள்ள விரும்பினர். நான், "நிச்சயமாக!" என்றேன். பார்த்தீர்களா? "அதெல்லாம் பரவாயில்லை, அப்படித்தான் நீங்கள் இருக்க வேண்டும்." அதனால் அவர்கள்...சரி, அவர்கள் எப்போதும் திருமணமானவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் ஒருபோதும் விவாகரத்து செய்துகொள்ளவில்லை; அவர்களுக்குக் கணவன் மனைவியாக ஒன்றாக வாழ வேண்டிய ஆவணங்களைக் கொடுங்கள்; அவ்வளவுதான், ஏனென்றால் அவர்கள் ஆரம்பத்திலேயே திருமணம் செய்துகொண்டவர்கள்.

160. கத்தோலிக்க சிலுவையின் மேல் உள்ள மூன்று எழுத்துக்கள் எதைக் குறிக்கின்றன? (நாம் பார்ப்போம்.) **கத்தோலிக்க சிலுவையின் மேல் உள்ள மூன்று எழுத்துக்கள் எதைக் குறிக்கின்றன?**

175 சரி, எல்லா சிலுவைகளும் ஒரே மாதிரியானவையே என்று நான் நினைக்கிறேன், நான் நினைப்பது தவறென்றால்...நான் அதைப் பற்றித் தேடிப் பார்ப்பது நல்லது. ஆனால் அது கொண்டுள்ள ஐ-ஆர்-என்-ஐ என்பதற்கு "நாசரேயனாகிய இயேசு, யூதரின் ராஜா" என்று பொருள். பார்த்தீர்களா? அது என்னவாயிருந்தால், அவர்களுக்கு வேறு எந்த விசேஷித்த அல்லது ஏதோ ஒரு காரியமோ அல்லது மற்றவையோ இருந்ததை நான் அறிந்திருக்கவில்லை. ஆனால் அந்த எழுத்துக்களோ, "நாசரேயனாகிய இயேசு, யூதரின் ராஜா" என்று பொருள்படுகின்றன. ஐ-ஆர்-என்-ஐ, அதுதான் சிலுவையின் மேல் உள்ளது. சரி.

161. சபைக் கட்டிட நிதியில் தசமபாகத்தை உபயோகிப்பது தவறா?

176 சரி இப்பொழுது, இங்கே—இங்கே இப்பொழுது சபையைப் புண்படுத்தக்கூடிய ஒரு சிறு காரியம் உள்ளது. இல்லை, சரியான தசமபாகம் ஊழியக்காரனிடம் செல்ல வேண்டும். அது உண்மையே! வேதாகமத்தில் அவர்கள் பழைய ஏற்பாட்டில் கட்டிடம் கட்டும்போது வாசலில் ஒரு பெட்டியை வைத்திருந்தனர். இந்தப் பெட்டியானது ஜனங்கள் பழுதுபார்ப்பதற்காக அங்கே ஒரு நிதியை வைத்திருந்தது...நீங்கள் அதைப் பழைய ஏற்பாட்டில் அநேக முறை வாசித்திருப்பீர்கள். அவர்கள் கட்டிடங்கள் மற்றும் அது போன்ற காரியங்களைத் தொடர்ந்து பராமரித்து வந்தனர்... அந்தக் கட்டிடத்தின் பழுதுபார்ப்பு பணிகள் அனைத்தும் அந்த நிதியிலிருந்து எடுக்கப்பட்டன. ஆனால் தசமபாகங்களில் பத்தில் ஒரு பாகம்—எல்லா தசமபாகங்களும் அவர்களுடைய ஆசாரியர்களுக்கும், அவர்களுடைய மேய்ப்பர்களுக்கும் சென்றன. ஆம், தசமபாகமானது வேறெதற்கும் செலுத்தப்பட வேண்டியதில்லை.

177 ஜனங்கள் தங்களுடைய தசமபாகத்தை எடுத்து ஒரு விதவை ஸ்திரீக்கு கொடுப்பதை நான் அறிவேன். அது தவறு. நீங்கள் விதவை ஸ்திரீக்கு ஏதாவது கொடுப்பதற்கு வைத்திருந்தால், அவளுக்குக்

கொடுங்கள், ஆனால் அவளுக்குத் தேவனுடைய பணத்தைக் கொடுக்காதீர்கள். அது முதலில் உங்களுடையது அல்ல. அது தேவனுடையது!

178 ஒரு முழு ரொட்டியை வாங்க நீங்கள் என்னை நகரத்திற்கு அனுப்பினால், நீங்கள் ஒரு முழு ரொட்டியை வாங்க எனக்கு இருபத்தைந்து சென்டுகள் கொடுத்தால், மேலும் நான் தெருவில் ஒருவரைச் சந்தித்தேன், அவருக்கு அது...வேறு ஏதோ ஒன்று தேவைப்பட்டது, நான் அவருக்கு அந்த இருபத்தைந்து சென்டுகளைக் கொடுப்பேன், பாருங்கள், நான் அவர்களுக்கு உங்களுடைய பணத்தைத் தருகிறேன். அவர்கள் என்னிடம் ஏதாவதொன்றைக் கேட்டால், அவர்கள் அதை இங்கே இந்தச் சட்டைப் பையில் வைத்துள்ள என்னுடைய பணத்தை அவர்களுக்குக் கொடுக்கட்டும்; ஆனால் இதுவோ உங்களுடைய பணம். அதில் பத்தில் ஒரு பாகம் கர்த்தருடையதாயிருக்கிறது. லேவி, ஆசாரியத்துவம், பத்தில் ஒன்றினால் வாழ்ந்தான்.

179 பத்தாம் பாகமானது பண்டகசாலைக்குள் அதை ஆசீர்வதிக்கத் தேவனுடைய வாக்குத்தத்தத்தோடு கொண்டு வரப்பட வேண்டிய தசமபாகமாயுள்ளது. மேலும் ஒரு நிரூபணம், அவர், "நீங்கள் அதை விசுவாசிக்கவில்லையென்றால், நான் அதைச் செய்யமாட்டேனா என்று வந்து என்னைச் சோதித்துப் பாருங்கள்" என்றார். பார்த்தீர்களா? அது உண்மையே!

180 தசமபாகம் போதகர் மற்றும் அது போன்று ஜீவிப்பதற்காகச் சபைக்குச் செல்கிறது. அதன்பின்னர் கட்டிட நிதிகள் மற்றும் அது போன்ற காரியங்கள் முழுவதுமாக ஒரு தனி நிதியாக உள்ளது. இப்பொழுது, அது—அது வேதப்பூர்வமானது.

181 ஒரு சமயம் நாம் துவங்கும்போது, நான் ஒரு இரவு நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்புகிறேன்...நான் கூடாரத்தை விட்டு வெளியேறுவதற்கு முன்பு, சில காலத்திற்கு முன்னர் இங்கு வந்து, சுமார் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் தங்கியிருந்தேன், அது போன்ற விஷயங்களைப் பற்றி ஆழமாக ஆராய்ந்து, சபையில் தசமபாகம் என்றால் என்ன என்பதை விளக்கினேன்.

162. சகோதரன் பிரான்ஹாம், நாம் கிறிஸ்தவர்களாக மாறியபிறகு, மேசன்கள் போன்ற ஒரு சங்கத்தில் உறுப்பினராக இருப்பதில் ஏதேனும் தவறு உள்ளதா?

182 இல்லை, ஐயா! நீங்கள் எங்கிருந்தாலும் ஒரு கிறிஸ்தவராக இருங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் எனக்குக் கவலையில்லை, நீங்கள் இன்னமும் ஒரு கிறிஸ்தவராக இருக்க முடியும்.

163. கர்த்தரைக் கண்டறிய சிறந்த வழி என்பதை நீங்கள் எப்படி உணருகிறீர்கள்...சில முக்கியமான காரியங்களில் கர்த்தருடைய சித்தத்தைக் கண்டறிய சிறந்த வழி என்பதை நீங்கள் எப்படி—நீங்கள் எப்படி உணருகிறீர்கள்?

இப்பொழுது...நான் நம்புகிறதில்லை...நான் அதனுடைய தொடர்ச்சியைப் பெற முடியுமா என்று பார்க்கட்டும். "சிறந்த வழி என்பதை நீங்கள் எப்படி உணருகிறீர்கள் (அது அங்கே ஒரு காற்புள்ளியாக இருக்க வேண்டும் என்று நான் காண்கிறேன், நான் நினைக்கிறேன்)...சில முக்கியமான காரியங்களில் கர்த்தருடைய சித்தத்தைக் கண்டறிவதற்கான மிகச் சிறந்த வழியை நீங்கள் எப்படி உணருகிறீர்கள்?"

183 அருமையான நண்பரே, சில முக்கியமான காரியங்களில் தேவனுடைய சித்தத்தைக் கண்டறிய சிறந்த வழி ஜெபமே. புரிகிறதா?

184 இப்பொழுது, நான்...இங்கே ஒரு அற்புதமான சிறு காரியம் இங்கே உள்ளது. நீங்கள்—நீங்கள் மிகவும் முக்கியமான ஒரு காரியத்தை உடையவராயிருந்தால்...இப்பொழுது, நான் அதை இந்த விதமாகச் செய்கிறேன். நான் அதைக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டு செல்கிறேன். அதுவே எப்பொழுதுமே என்னுடைய பலமாய் இருந்து வருகிறது; நான் கர்த்தர் பேரில் காத்திருந்து, அவர் என்னக் கூறுகிறார் என்று பார்க்கிறேன். நான் எந்தப் பக்கமும் சாராமல், அதற்கு நடுநிலையாக இருந்து, "பரலோகப் பிதாவே, அது—அது முடியும்..." என்று சொல்வேன்.

185 நிச்சயமாகவே, என்னுடைய காரியத்தில் பெரும்பாலும், அது மிக முக்கியமானதாயிருந்தால், நான் ஒரு தரிசனத்திற்காகக் காத்திருக்கிறேன். ஆனால் அநேக ஜனங்களோடு, தேவன் தரிசனங்களில் ஈடுபடுகிறதில்லை. ஆகையால், அதைச் செய்யும்படி நான் உங்களுக்கு ஆலோசனை கூறமாட்டேன். பார்த்தீர்களா? ஏனென்றால் அது சில ஜனங்கள் தரிசனங்களை உடையவர்களாய் இருக்கின்றனர், சிலர் வேறு ஏதோ ஒன்றை செய்கிறார்கள். என்னால் செய்ய முடியாத மற்ற ஏதோ ஒரு காரியத்தை நீங்கள் செய்கிறீர்கள், ஒருக்கால்—நீங்கள் கர்த்தருக்கு சேவை செய்யும் விதத்தில்—நீங்கள் செய்ய முடியாத ஒரு காரியத்தை நான் செய்யலாம். பார்த்தீர்களா? தேவன் நம்மோடு வித்தியாசமாக இடைபடுகிறார்.

186 எனவே நான் உங்களுடைய ஸ்தானத்திலிருந்து, கர்த்தருக்கு முன்பாகத் தரிசனங்களை பெற்றுக்கொள்ளாமலிருந்தால், நான் கர்த்தர் பேரில் காத்திருந்து, "கர்த்தாவே, இப்பொழுது எடுக்க வேண்டிய தீர்மானம் என்ன என்பதை நீர் எனக்குக் காண்பியும்" என்று கூறுவேன். அதன்பின்னர், நீங்கள் அதைச் செய்யும்படி வழிநடத்தப்படுவதை உணரும்போது, சிறிது நேரம் காத்திருந்து, அதன்பின்னர் இன்னும் சிறிது நேரம் காத்திருங்கள், மேலும், நீங்கள் எந்தப் பக்கம், நீங்கள் எந்தப் பக்கம் சாய்கிறீர்கள், ஆவியானவர் எந்த வழியில் செல்கிறார் என்று பாருங்கள்..."இப்பொழுது பிதாவே, அது ஒரு பொருட்டல்ல என்பதை என் இருதயத்தில் நீர் அறிந்திருக்கிறீர்; ஆனால் நீர் அதைக் குறித்து என்ன செய்ய விரும்புகிறீர் என்பதை நான்—நான் அறிய விரும்புகிறேன்" என்று கூறுங்கள்.

187 அந்தவிதமாகவே நான் சில நேரங்களில் கூட்டங்களைக் குறித்து செய்கிறேன். நான் ஒருவிதமாக இந்த வழியாக அல்லது அந்த வழியாகச் செல்லும்படி வழிநடத்தப்படுவதை உணருகிறேன், அப்பொழுது நான் அந்த வழியைப் பின்பற்றுவேன். அந்தவிதமாகத்தான் அதைச் செய்ய வேண்டும், ஏனென்றால் அது ஜெபத்தில்; நீங்கள் உங்களால் முடிந்தளவு சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

188 என் நண்பர்களே, கடந்த நாட்களில் புதிய ஏற்பாட்டில் பவுல் இருந்தது போல நான் இதை விசுவாசிக்கிறேன். அவன் இரண்டு இடுக்கங்களுக்கிடையே இருந்தான், அந்த வழியாக அவன் செல்ல வேண்டியதாயிருந்தது. அவன் தவறான பாதையில் செல்லத் துவங்கினான், அவனுக்கு ஒரு மக்கெதோனியா அழைப்பு வந்தது. நீங்கள் தேவனுக்காக ஒரு தீர்மானம் செய்து கொண்டிருந்தால், உங்களால் முடிந்தளவு அதைச் சிறந்த முறையில் செய்யுங்கள் என்று நான் நினைக்கிறேன். தேவன் உங்களைத் திருத்துவார் என்று நான் விசுவாசிக்கிறேன், நீங்கள் தவறாகப் போகாதிருப்பதைக் காணமாட்டீர்கள். தேவன் அதைச் செய்வார் என்று நான் விசுவாசிக்கிறேன்.

164. நாம் பார்ப்போம். **சகோதரன் பிரான்ஹாம், நித்திரை செய்யும் கன்னிகைகள் என்று கருதப்படுகிற ஜனங்களுக்கு, அவர்கள் நியாயத்தீர்ப்பில் நியாயந்தீர்க்கப்படும்போது, என்ன நேரிடுகிறது?**

189 பாருங்கள், நித்திரை செய்யும் கன்னிகைகள் நிச்சயமாகவே இரட்சிக்கப்படுவார்கள். அவள் நியாயத்தீர்ப்பில் இரட்சிக்கப்படுவாள். அவள் ஒருபோதும் மணவாட்டியாக இருக்கமாட்டாள், ஆனால் அவள் நியாயத்தீர்ப்பில் வரப்போகும் ஒரு இரட்சிக்கப்பட்ட ஜனக் குழு, மணவாட்டியில் சேர்க்கப்படமாட்டார்கள். ஆனால் அவர்கள் கன்னியர்களாக இருக்கும் வரை, அவர்கள் தேவனுக்கு முன்பாக இருக்கிறார்கள். பார்த்தீர்களா? அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும். அவர் பிரிக்கிறார்...அவர்கள் அவருடைய வலது பக்கத்தில் உள்ள ஆடுகளாயிருப்பார்கள். மகத்தான வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் அவருடைய இடதுபக்கத்தில் உள்ள வெள்ளாடுகள் இரட்சிக்கப்படாதவர்களாக இருக்கும்.

என்னால் அதன் பேரில் அதிக நேரம் செலவழிக்க முடியும், ஆனால் எனக்கு—அது சற்று காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது.

165. பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட ஒரு நபர், சிறு காரியங்களைச் செய்யத் தூண்டப்படுவது—தூண்டப்படுவது சாத்தியமா... அற்பமான—அற்பமான காரியங்களைச் செய்யும்படி ஆவியின் தூண்டுதலால் உந்தப்படுவது சாத்தியமா?

190 ஓ, ஆம்! ஆம், ஐயா! ஆம், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட

ஒரு நபர்...இந்தக் காரியங்களினால் துரத்தப்பட வேண்டிய இடத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் ஒரு இலக்கை வெறுமனே அமைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அங்கே சாத்தானுக்கு சேவை செய்யும்போது, நீங்கள் எப்படி வேண்டுமானாலும் சோம்பேறித்தனமாகச் சுற்றித் திரிய அவன் உங்களை விட்டுவிடுகிறான். ஆனால் நீங்கள் ஒருமுறை கிறிஸ்துவுக்காக ஒரு நிலைப்பாட்டை எடுத்தால், அப்பொழுது நீங்கள் மறுபக்கத்தில் இருக்கிறீர்கள், அப்பொழுது அவன் உங்களைச் சுற்றிலும் உள்ள ஒவ்வொரு துப்பாக்கியையும் திருப்புவான். ஒவ்வொரு சோதனையும், உங்களுக்கு வீசப்படக்கூடிய ஒவ்வொரு காரியமும், அப்பொழுது நீங்கள் அதைப் பெற்றுக் கொள்கிறீர்கள். ஆனால் நீங்கள் என்ன பெற்றுள்ளீர்கள்? "உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்." பார்த்தீர்களா?

191 நீங்கள் இங்கே எந்தப் போரிலும் ஈடுபடவில்லை, சும்மா சோம்பேறித்தனமாகப் போய்க்கொண்டிருந்தீர்கள். பார்த்தீர்களா? ஆனால் இப்பொழுது, நீங்கள்—நீங்கள் சுத்தம் செய்துள்ளீர்கள்; நீங்கள் உடை உடுத்தியிருக்கிறீர்கள்; நீங்கள் சவரம் செய்துள்ளீர்கள்; நீங்கள் உங்களுடைய தலைமுடியை சீவியுள்ளீர்கள்; நீங்கள் ஒரு சீருடையை அணிந்துள்ளீர்கள்; நீங்கள் உங்களுடைய கரத்தில் ஒரு துப்பாக்கியை வைத்திருக்கிறீர்கள். "நாம் போவோமாக!" பார்த்தீர்களா? நீங்கள் போர்க்களத்தில் இருக்கிறீர்கள், தற்பெருமை காட்டுவதற்காக அல்ல, ஆனால் சண்டையிட, சண்டையிடவே! நிச்சயமாகவே சோதனைகள் எழும்பும்போது, விசுவாசம் என்னும் கேடகமாகிய ஆவியானாலே அதைத் தடுத்துவிட்டு, முன்னேறிச் செல்லுங்கள். பார்த்தீர்களா? அது உண்மை. ஓ, தேவனுடைய எல்லா சர்வாயுதவர்க்கத்தையும் அணியுங்கள். நீங்கள் சண்டையிடப்போவதில்லையென்றால், நீங்கள் ஏன் ஒரு சர்வாயுதவர்க்கத்தை அணிந்துகொள்கிறீர்கள்? எல்லா வீரர்களும் போரிடுவதற்காகவே உடையணிந்துள்ளனர், தற்பெருமை காட்டிக்கொண்டு, வெளியே வந்து, "நான் *இன்னார் மற்றும் இன்னார்*. இப்போது, நான் ஒரு கிறிஸ்தவன்" என்று சொல்வதற்காக அல்ல. நான் யாரென்று பாருங்கள். நான் *இன்னாரைச்* சேர்ந்தவன். அல்லேலூயா! அன்றொரு இரவு நான் பரிசுத்த ஆவியைப் பெற்றேன். நிச்சயமாகவே, இனிமேல் எதுவுமே என்னைத் தொல்லைப்படுத்துகிறதில்லை." ஹூ-ஹூ! ஓ, சகோதரனே, நீங்கள் திரும்பிச் சென்று மீண்டும் முயற்சிப்பது நல்லது என்று நான்—நான் நினைக்கிறேன். பார்த்தீர்களா?

192 ஓ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டீர்கள் என்று நீங்கள் கூறினவுடனே; சாத்தான் ஒவ்வொரு துப்பாக்கியையும் உங்கள் மீது வைத்து, உங்களைச் சுட்டுக்கொண்டிருக்கிறான். அதன்பின்னர் நீங்கள் முழு சர்வாயுதவர்க்கத்தையும் தரித்து, அதன்பின்னர் விசுவாசம் என்னும்

கேடகத்தை, ஆவியின் பட்டயத்தை அல்லது வார்த்தையை எடுத்து, சுவிசேஷத்தோடு உங்களையே அணிந்துகொள்ளும்—கொக்கியை எடுத்துக்கொண்டு, இங்குள்ள பழைய நடுப்பகுதியை எடுத்துக் கொண்டு, மார்புக் கவசத்தை அணிந்து, அதன் இறுக்கியை மேலே இழுத்து, உங்களைச் சற்று இறுக்கிக் கொள்ளுங்கள், அதற்காக ஆயத்தமாக வேண்டும், ஏனென்றால் அது வந்து கொண்டிருக்கிறது. நீங்கள் கவலைப்படாதீர்கள். ஆம், ஐயா! உங்களுக்கு ஏராளமான தொல்லைகள் உண்டாகப் போகிறது. ஆனால் நினைவிருக்கட்டும், "உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்."

166. பரிசுத்த மத்தேயு 16:9 மற்றும் 10-ல் இயேசு எதைப் பொருட்படுத்திக் கூறினார்? பன்னிரண்டு கூடைகளும் ஏழு கூடைகளும் எதைக் குறிக்கின்றன? ஞாயிறு காலைக்கான கேள்வி.

193 நாம் பார்ப்போம்—நாம் பார்ப்போம், மத்தேயு 16:10. இப்பொழுது எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. அது எங்கே உள்ளது என்பதை நான் பார்க்கட்டும், மத்தேயு 16:9 மற்றும் 10—16:9 மற்றும் 10. இங்கே நாம் பார்ப்போம்.

...நீங்கள் உணரவில்லையா? ஐந்து அப்பங்களை ஐயாயிரம்பேருக்குப் பகிர்ந்ததையும், மீதியானதை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்கள் என்பதையும்;

ஏழு அப்பங்களை நாலாயிரம்பேருக்குப் பகிர்ந்ததையும், மீதியானதை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்கள் என்பதையும் நீங்கள் நினைவுகூராமலிருக்கிறீர்களா?

இப்பொழுது கவனியுங்கள். இதற்கு முன்னர் நாம் சற்று எடுத்துக் கொள்வோம்.

இயேசு அவர்களை நோக்கி: பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றார்.

நாம் அப்பங்களைக் கொண்டுவராதபடியால் இப்படிச் சொல்லுகிறார் என்று அவர்கள் தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டார்கள்.

இயேசு...(இப்பொழுது கவனியுங்கள்!)... இயேசு அதை அறிந்து:...(அவர் அவர்களுடைய சிந்தனைகளை அறிந்துகொண்டார், நீங்கள் பாருங்கள்.)...அற்பவிசுவாசிகளே, அப்பங்களைக் கொண்டுவராததைக்குறித்து நீங்கள் உங்களுக்குள்ளே யோசனைபண்ணுகிறதென்ன?

...நீங்கள் உணரவில்லையா? ஐந்து அப்பங்களை ஐயாயிரம்பேருக்குப் பகிர்ந்ததையும், மீதியானதை எத்தனை கூடைநிறைய எடுத்தீர்கள் என்பதையும்;

194 இதைப் போன்ற வேறு வார்த்தைகளில் கூறினால்: "தேவன் அளித்து ஒரு அற்புதத்தைச் செய்கிறதை நீங்கள் கண்டால், அப்பொழுது அவரால் மீண்டும் ஒரு அற்புதத்தைச் செய்ய முடியாதா?" பார்த்தீர்களா? பாருங்கள்...வேறு வார்த்தைகளில் கூறினால், இதைப் போன்று: அவர் உங்களைப் பாவத்தின் ஜீவியத்திலிருந்து இரட்சித்திருந்தால், அவரால் உங்கள் சரீரத்தை சுகப்படுத்த முடியாதா? நீங்கள் ஒரு பாவியாயிருந்தபோது, அவர் எப்படி உங்கள் ஆத்துமாவை விசுவாசிக்கும்படி விசுவாசத்தில் உயர்த்தினார் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? அதேவிதமாக அவரால் மீண்டும் ஒரு மகத்தான காரியத்தை உங்களுக்காகச் செய்ய முடியாதா? அவரால்—அவரால் உங்களுக்காக அற்புதத்தை அல்லது வேறெந்த காரியத்தையும் செய்ய முடியாதா? ஐந்து கூடைகள்..."நினைவில் கொள்ளுங்கள்..."

195 அதைப் போன்று...அவர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தபோது, தேவன் அந்தவிதமாக வழியைத் திறந்து, சிவந்த சமுத்திரத்தை இந்தவிதமாகத் திறந்து, அவன் அந்த வழியாக நடந்து சென்று, மறுபுறம் வந்தான், அவனுக்குத் தண்ணீர் இல்லாமல் போனவுடனே, அவர்கள் முறுமுறுக்கத் துவங்கினர். அது சரியா? அவர்கள் அப்பமில்லாமல் போனவுடனே, "எங்களுக்கு அப்பம் இல்லையே" என்று கூக்குரலிட ஆரம்பித்தார்கள். பார்த்தீர்களா?

"அங்கே சிவந்த சமுத்திரத்தில் நடந்த அற்புதத்தை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவில்லையா? நீங்கள் எல்லாருமே சிவந்த சமுத்திரத்தண்டை சிக்கிக்கொண்டபோது, நீங்கள் இறங்கி வந்திருக்கவில்லையா?

"ஓ," அவர்கள், "நாங்கள் மரித்திருக்க வேண்டும். இதோ எகிப்தியர்கள் இப்பொழுது எங்கள் மேல் வருகிறார்கள். இதோ அது உள்ளது; நாங்கள் என்ன செய்யப் போகிறோம்?" என்றனர்.

196 மேலும், "பூமியை அங்கே வாதைகளினால் வாதித்தது யார்? கோசேனில் சூரியன் பிரகாசிக்கச் செய்தது யார்?" என்று கேட்டான். பார்த்தீர்களா? நாம் அந்தக் காரியங்களை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும், தேவன் தேவனாய் இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்! அல்லேலூயா! அதில் எதுவாக இருந்தாலும், அவர் இன்னமும் தேவனாயிருக்கிறார். அவரால் நிச்சயமாக எதையும் செய்ய முடியும்.

167. முதலாம் கொரிந்தியர் 12:27-ல் உள்ள "கிறிஸ்துவின் சரீரம்" என்பதையும், வெளிப்படுத்தல் 2:9—9-ல் உள்ள "கிறிஸ்துவின் மணவாட்டி" என்பதையும் தயவுசெய்து விளக்குவீர்களா. வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள புதிய எருசலேம் இங்கே ஆவிக்குரியதாயிருக்கிறதா—ஆவிக்குரியதாயிருக்கிறதா? அது—அது—இது சபையின் ஆவிக்குரிய பகுத்தறிதலா?

197 இல்லை! இப்பொழுது, முதலாம் கொரிந்தியர் நிருபத்தில், இப்பொழுது நான் இதை முதலில் கூறுகிறேனா என்று பார்ப்போம், முதலாம் கொரிந்தியர் 12-ம் அதிகாரம், சரி, 27-ம் வசனம்.

நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்.

198 அதன்பின்னர் அடுத்த வேதவாக்கியம் எங்கேயிருந்தது? வெளிப்படுத்தின விசேஷம் 2—21:9, வெளிப்படுத்தின விசேஷம் 21-ம் அதிகாரம் 9-ம் வசனம். சரி, நாம் இங்கே இருக்கிறோம்.

பின்பு, கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் என்னிடத்தில் வந்து: நீ இங்கே வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி,

199 ஆம், கிறிஸ்துவின் சரீரம். பாருங்கள், கிறிஸ்துவின் சரீரம் நம்முடைய பாவங்களுக்காக நொறுக்கப்பட்டது, ஒரே ஆவியினாலே நாம் யாவரும் அந்தச் சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, அங்கத்தினர்களாகிறோம். எங்கிருந்து—எங்கே—அந்த—அந்தச் சரீரம்...குறியீடாகச் சொல்வதானால் என் மனைவி...ஏவாள் எங்கிருந்து வந்தாள்? ஆதாமின் சரீரம். அவள் அவனுடைய பக்கவாட்டிலிருந்து வெளியே எடுக்கப்பட்டாள். ஏவாள் ஆதாமின் பக்கத்திலிருந்து எடுக்கப்பட்டாள். கிறிஸ்து...அவள் அவனுடைய சரீரத்தின் பாகமாயிருந்தாள். அவன், "அவள் என் மாம்சத்தில் மாம்சமும், என் எலும்புகளில் எலும்புமாயிருக்கிறாள். நான் அவளை ஸ்திரீ என்று அழைப்பேன்" என்றான். பார்த்தீர்களா?

200 இப்பொழுது, கிறிஸ்துவின் சரீரம் இயேசுவின் சரீரத்திலிருந்து எடுக்கப்பட்டது, ஏனென்றால் நாம் அவருடைய ஆவியும், மாம்சமும், எலும்புமாயிருக்கிறோம். பார்த்தீர்களா? ஏனென்றால் நாம் அவருடைய சரீரத்திற்குள்ளாகப் பிறந்திருக்கிறோம். இங்குள்ள இந்தச் சரீரம் அவருக்குச் சொந்தமானது, அதே சமயத்தில் அது பாவத்தில் பிறந்திருக்கிறது, அவர் அதை மீட்டிருக்கிறார். தேவன் கடைசி நாட்களில் அதை எழுப்புவார், நான் அதில் நித்தியமாக ஜீவிப்பேன். பார்த்தீர்களா? அதுதான். சரி.

201 இப்பொழுது, நாம் பார்ப்போம், இங்கே கடைசி கேள்வி: "புதிய எருசலேம் ஆவிக்குரியதாயிருக்கிறதா?" இல்லை, இல்லை, புதிய எருசலேம் வானத்திலிருந்து தேவனிடத்திலிருந்து வருவதை யோவான் கண்டான்; அது இப்பொழுது சபையின் பகுத்தறிதல் அல்ல. நீங்கள் பார்த்தீர்களா? அது—அது ஒரு—அந்த...வெளிப்படுத்தின விசேஷம் 21-ம் அதிகாரத்தில் ஆயத்தம் செய்யப்பட்டுள்ள புதிய எருசலேம் வானத்திலிருந்து இறங்கி வருவதை யோவான் கண்டான், (பார்த்தீர்களா?)—தன்னுடைய

கணவனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தப்பட்டிருக்கிறாள்...

கடைசி கேள்வி இப்பொழுது; அதெல்லாம் அவ்வளவுதான் என்று நான் நினைக்கிறேன்.

168. கர்த்தரிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகக் நடக்கிறது என்று வேதம் கூறுகிறது. அப்படியானால் நீங்கள் தேவனை நேசித்து, உலகத்தண்டை திரும்பினால், தேவன் உங்களைப் பாவத்தில் மரிக்க விட்டுவிடுவாரா அல்லது அவர் உங்களை எடுத்துச் செல்வதற்கு முன்பு அவரோடு நீங்கள் ஒப்புரவாகும்படி அவர் அனுமதிப்பாரா?

202 அந்தப் பெண்மணி தன்னுடையப் பெயரை அதில் கையொப்பமிட்டாள், எனவே அது ஒரு—ஒரு பெண்மணி என்று நான் கூறுவேன் (புரிகிறதா?), ஏனென்றால் அவள் தன்னுடைய பெயரைக் கையொப்பமிட்டாள். ஆம், சகோதரி. நீங்கள் பிறந்திருந்தால்...இப்பொழுது, நான் இதைப் புரிந்து கொள்ளட்டும். பாருங்கள், தற்காலிகமாக, சிறியதாக, நாம் ஒவ்வொருவரும் ஒரு நாளில் அநேக முறை பின்வாங்கிப் போகிறோம். நாம் அதை அறிவோம். நாம் ஒவ்வொருவரும் குற்றவாளிகளாயிருக்கிறோம்; நம்மில் எவருமே பூரணப்படுத்தப்படவில்லை. நாம் இந்தச் சரீரத்தில் இருக்கும் வரையில், நாம் இன்னும்...ஜனங்கள் எவ்வளவுதான் கூற முயற்சித்தாலும், "நான் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறேன்; என்னால் இந்தப் பெண்ணை முத்தமிட முடியும் அல்லது அதைச் செய்ய முடியும்." அவன் பொய்யுரைத்துக் கொண்டிருக்கிறார்; அவனால் முடியாது. இப்பொழுது, அவ்வளவுதான்.

203 நான், "கர்த்தாவே, என்னால் எவ்வளவு அருகாமையில் செல்ல முடியும் என்பதை நான் காணட்டும்" என்று கூற முயலுகிறதில்லை. அது, "கர்த்தாவே, என்னால் முடிந்தளவு தூரமாய் என்னைக் காத்துக் கொள்ளும்" என்பதாகும். பார்த்தீர்களா? அப்படியே தூரமாய் நில்லுங்கள்...நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் இன்னமும் மானிடராகவே இருக்கிறீர்கள். பார்த்தீர்களா?

204 மேலும்...ஆனால் இப்பொழுது, நீங்கள் ஒரு தவறு செய்து, ஏதோ ஒரு காரியத்தைத் தவறு செய்தால்...நீங்கள் வேண்டுமென்றே...நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருந்தால், நீங்கள் மறுபடியும் பிறந்த ஒரு கிறிஸ்தவராயிருந்தால், நீங்கள் தவறு செய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை. உங்களுடைய நோக்கங்களும் மற்றும் ஒவ்வொரு காரியமும் சரியாயிருக்கிறது. ஆனால் அவள் இங்கே சொன்னது போல், நீங்கள் ஒரு தவறு செய்து, தவறான ஒன்றைச் செய்தால், தேவன் உங்களை அந்தவிதமாகவே தொடர்ந்து வாழ்ந்து அவ்வாறே மரித்து, இழக்கப்பட அனுமதிப்பாரா அல்லது அவர் உங்களை ஒப்புரவாகுதலுக்குத் திரும்பக் கொண்டு வருவாரா?

அவர் உங்களைத் திரும்பக் கொண்டு வருவார். அது உண்மையே! அவர் உங்களைத் திரும்பக் கொண்டு வருவார்.

205 ஒரு—அதன்பின்னர், நீங்கள் எந்தத் தவறைச் செய்தாலும், அது உங்களைக் கண்டனம் செய்யவில்லை என்றால், நீங்கள் அந்த விதமாகவே தொடர்ந்து செல்லும்போது, நீங்கள் துவக்கத்திலேயே இரட்சிக்கப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது உண்மை. நீங்கள்—நீங்கள் இரட்சிக்கப்படவில்லை; நீங்கள் ஒரு பாவனை விசுவாசத்தை உடையவர்களாயிருந்தீர்கள்; நீங்கள் இரட்சிக்கப்படவில்லை. ஆனால் நீங்கள் இரட்சிக்கப்படும்போது, நீங்கள் ஒரு வித்தியாசமான ஆவியைப் பெற்றிருக்கிறீர்கள்; நீங்கள் ஒரு வித்தியாசமான சுபாவமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சிருஷ்டியாயிருக்கிறீர்கள், பழைய காரியங்கள் ஒழிந்து போய்விட்டன, அவைகள் மரித்து மறதியின் கடலில் அடக்கம் பண்ணப்பட்டிருக்கின்றன. உங்களுக்குப் புரிகிறதா?

206 மேலும்...ஆனால் நீங்கள் இங்கே இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறபடியால், உங்களுக்கு எல்லா இடங்களிலும் கண்ணி வைக்கப்பட்டுள்ளது, நீங்கள் உங்களுடைய கண்களைக் கிறிஸ்துவின் மேல் வைத்து நடந்து கொண்டிருக்கிறீர்கள். நினைவிருக்கட்டும், நீங்கள் ஒரு தவறு செய்யும்போது, ஒரு உண்மையான கிறிஸ்தவன் ஒப்புரவாகுதலுக்காக எப்பொழுதுமே துரிதமாகத் திரும்பி வருவான்.

207 பாருங்கள், பேழையில் இருந்த வயோதிக காகத்தைத் தேவன் வெளியே விட்டார்—இல்லை நோவா காகத்தை வெளியே விட்டான். இப்பொழுது, அவன் என்னவாயிருந்தான்? அவன் ஒரு காகமாயிருந்தான். ஓ, ஆம், அவன் அதே கூட்டில்தான் புறாவுடன் அமர்ந்திருந்தான். அவை இரண்டும் ஒரே கூட்டில் அமர்ந்திருந்தன; ஆனால் அவன் அந்தக் காகத்தை வெளியே விட்டபோது, பாருங்கள், அந்த வயதான...கோடிக்கணக்கான ஜனங்களின் வீங்கிய உடல்கள் தண்ணீரின் மேல் அழுகிப் போய், எல்லா தண்ணீரும் துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்தது என்று நான் யூகிக்கிறேன், குதிரைகள், மிருகங்கள் யாவும் மரித்துப்போய்விட்டன. முழு உலகமும் அழிக்கப்பட்டது. அங்கே அவைகள் இருந்தன, இந்தப் பழைய செத்த பிணங்கள் தண்ணீரின் மேல் மிதந்து கொண்டிருந்தன மற்றும் அதைப் போன்ற காரியங்கள். நோவா புறாவை வெளியேவிட்டான், ஏனென்றால் அவன் சூரிய வெளிச்சத்தைக் கண்டான் என்று யூகித்தான். அவன் தண்ணீர் வடிந்துவிட்டதா அல்லது இல்லையா என்று அறிய விரும்பினான், எனவே அவன் காகத்தை வெளியேவிட்டான். வயதான காகம் ஒரு பழைய சடலத்தின் மேல் பறந்து வந்து, "என்னே, அது அருமை; அது நல்லது!" பாருங்கள், ஒரு மரித்த சரீரத்தைப் புசித்தல். ஏன்? அதுவே அவனுடைய சுபாவமாயிருந்தது. அவன் ஒரு காகமாயிருந்தான்.

அவன் எவ்வளவுதான் புறாவுடன் அமர்ந்திருந்தாலும், நோவா பிரசங்கித்ததை அவன் கேட்டிருந்தாலும், அவன் இந்தச் சுத்தமான பறவையோடு அமர்ந்திருந்தாலும், அது துவக்கத்திலேயே ஒரு காகமாக இருந்தது. தன்னுடைய நிறங்களைக் காண்பிக்க அவனுக்கு வாய்ப்புக் கிடைத்தவுடனே, அவன் அதைக் காண்பித்தான்.

208 இப்பொழுது, ஆனால் அவன் புறாவை வெளியே விட்டபோது, புறா புறப்படத் துவங்கினபோது, வ்யூ, அவளால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவளால் எங்கும் செல்ல முடியவில்லை; அவள் தன்னுடைய உள்ளங்கால்களுக்கு இளைப்பாறுதலைக் கண்டறிய முடியவில்லை, எனவே அவள் மீண்டும் பேழைக்கு வந்தாள். அந்த விதமாகத்தான் அது உள்ளது.

209 நீங்கள் என்ன செய்வீர்கள் என்று காணும்படியாகச் சில சமயங்களில் நீங்கள் சற்று அவிழ்த்துவிடப்படலாம், ஆனால் நீங்கள் எப்பொழுதுமே ஒரு புறாவின் சுபாவத்தைப் பெற்றிருந்தால், உங்களால் காகத்தின் ஆகாரத்தைப் புசிக்க முடியாது. அவ்வளவுதான், அது ஜீரணிக்காது; அவ்வளவுதான்.

210 நீங்கள் எங்கே போய், என்ன செய்வீர்கள்? நீங்கள்—நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இல்லாவிடில், நீங்கள் என்ன செய்வீர்கள் என்று எனக்குச் சொல்லுங்கள்! நான் ஒரு கிறிஸ்தவனாயிருந்திருக்கவில்லையென்றால், நான் இந்தக் காலையில் என்ன செய்வேன் என்பதை எனக்குக் கூறுங்கள்! இன்று காலை என் தாயார் மருத்துவமனையில் அந்த நிலையில், சுயநினைவின்றி படுத்திருக்கும்போது, நான் என்ன செய்துவிட முடியும், என் மனதிற்குள், நான் இங்கே பிரசங்க பீடத்தில் நின்று பிரசங்கம் செய்துகொண்டும், நான் வழக்கமாகச் செய்வது போலவே தொடர்ந்துகொண்டும் இருந்தால், நான் அதற்கு அதிக கவனம் செலுத்தாதது போலத் தோன்றுமே? ஏனென்றால் என் தாயார் இரட்சிக்கப்பட்டிருக்கிறாள் என்பதை நான் அறிவேன். பார்த்தீர்களா? அவள் இரட்சிக்கப்பட்டிருக்கிறாள் என்பதை நான் அறிவேன். நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன்; நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்.

211 இப்போது அம்மா என்ன செய்வார்? இப்பொழுது ஒருவேளை, “என்றாவது ஒருநாள் நான் ஒரு கிறிஸ்தவளாக ஆகப் போகிறேன்” என்ற நல்ல எண்ணம் அவளுக்குத் தன் வாழ்நாள் முழுவதும் இருந்திருக்கலாம். ஆனால், இப்போது அங்கே சுயநினைவின்றி கிடக்கும்போது அவளால் எப்படி அப்படி ஆக முடியும்? இப்பொழுது அவளால் எப்படியொரு கிறிஸ்தவளாக முடியும்? அவளுடைய பிள்ளைகள் என்ன செய்வார்கள்?

212 அன்றொரு நாள் நாங்கள் அவளுக்குக் குளுக்கோஸ் கொடுக்க அங்கே அழைத்துச் சென்றபோது...அவளுடைய சரீரத்தில்

உள்ள ஒரே காரியம் குளுக்கோஸ் தான். அவளால் விழுங்க முடியாது; அவள் செயலற்றுப் போய்விட்டாள். அவள், "பில்லி, இந்த ஒரு காரியத்தை நீ அறிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்று கூறினாள், அவள் நானும், டெலோரஸ் அங்கே நின்று கொண்டிருப்பதையும், அவளுடைய பிள்ளைகளையும் மற்றக் காரியங்களைக் குறித்தும், என்னுடைய இரண்டு சகோதரர்கள் மது அருந்துவதைக் குறித்தும் பேசினாள்.

அதற்கு நான், "பாருங்கள், அவர்கள் உங்களுடைய இருதயத்தை நொறுக்கினர்" என்றேன்.

அவர் கூறினார்—அவள், "ஆனால் பில்லி, ஒரு தாய்க்காக எல்லாமே சக்கரத்தில் செல்கிறது" என்றாள். அவள், "ஆனால் நான் இரட்சிக்கப்பட்டேன்" என்றாள். அவள், "நான் போக ஆயத்தமாயிருக்கிறேன்" என்றாள்.

213 நான், "அம்மா, ஜெபர்ஸன்வில்லிலிருந்து யூடிகா வரையிலான ஒரு அரண்மனையை, எங்களுக்கு ஒரு வீட்டை விட்டுச் சென்றிருக்கலாம்; நீங்கள் சென்றபிறகு, நாங்கள் சண்டையிட்டுக் கொள்வதற்காகப் பத்து மில்லியன் டாலர்களை எங்களுக்கு விட்டுச் சென்றிருக்கலாம், (அவ்வளவுதான் அதற்கு நேரிடும்); ஆனால் அம்மா, எவருமே விட்டுச் செல்ல முடியாத மிகப் பெரிய பொக்கிஷத்தை நீர் எங்களுக்கு விட்டுச் சென்றிருக்கிறீர், நதிக்கப்பால் உள்ள அந்தத் தேசத்தில் நாங்கள் உங்களை மீண்டும் சந்திப்போம் என்ற உறுதி" என்றேன். அது உண்மையே! பார்த்தீர்களா?

214 நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள், கிறிஸ்து நம்முடைய இரட்சிக்கிறார் என்பதை அறிந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்...ஆனால் நாம் பின்வாங்கிப்போகலாம்; நாம் தவறு செய்யலாம்; நாம் எல்லோருக்கும் நம்முடைய ஏற்றத் தாழ்வுகள் உண்டு; ஆனால் நீங்கள் எந்தக் காரியத்தையும் செய்தவுடன் உங்களுடைய ஆத்துமாவில், சரி, உங்களுக்குள்ளாக ஏதோ காரியம் தவறாக நடக்கிறது; நீங்கள் அதை அறிவீர்கள். இப்பொழுது, குதிக்க வேண்டிய நேரம் இதுவே. குதிக்க வேண்டிய நேரம் அதுவே. அதிலிருந்து விலகிச் செல்லுங்கள்.

215 இப்பொழுது, நீங்கள் இன்றைக்கு இங்கிருந்து வெளியே செல்லும்போது, யாரோ ஒருவர் உங்களிடம் வந்து, "ஏய், நீங்கள் பரிசுத்த உருளைகளில் ஒருவர் என்று அவர்கள் என்னிடம் கூறுகிறார்கள்."

உடனே சாத்தான், "அவனை அறைந்து தள்ளு!" என்கிறான். பார்த்தீர்களா?

216 "ஒரு பரிசுத்த உருளையைக் குறித்து எனக்குத் தெரியாது; நான் ஒரு கிறிஸ்தவன்!" பார்த்தீர்களா? எப்பொழுதும் தீமையினால், தீமையை நன்மையினால் சந்திக்க வேண்டும். நினைவிருக்கட்டும்,

இப்பொழுது இதை எடுத்துக் கொள்ளுங்கள், இதை நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் தீமையையும் நன்மையையும் சந்திக்கும்போது, நன்மையின் முன்னிலையில் தீமை நிற்க முடியாது. அது அதைச் செய்ய முடியாது.

217 இப்பொழுது, நான் ஒரு மிஷனரி, நான் உலகத்தைச் முழுவதும், எல்லாவிதமான பொல்லாங்குகளிலும், எல்லாவிதமான மரித்த ஆவிகளோடு தொடர்பு கொண்டவர்களுடனும் இருந்து வந்துள்ளேன், கொள்கைகளையும், எல்லாவிதமான பிசாசு வழிபாடுகளையும், ஓ, ஒவ்வொரு காரியத்தையும் சிந்தித்துப் பார்க்க முடியும், அங்கே ஒவ்வொரு காரியமும், சரியானது எப்பொழுதுமே தீமையை ஜெயிக்கிறது என்பதை நான் எப்பொழுதும் கண்டிருக்கிறேன்.

218 கவனியுங்கள், இரவு எவ்வளவு இருளாய் இருந்தாலும் எனக்குக் கவலையில்லை; நீங்கள் அதை உணரும் அளவிற்கு அது மிகவும் இருட்டாயிருக்கலாம்; நீங்கள் இந்தவிதமாக உங்கள் கரங்களை உயர்த்தி, எந்தவிதமான ஒரு நிழலையும் காண முடியாது. மிகச்சிறிய வெளிச்சம் அந்த இருளை அம்பலப்படுத்தும். நிச்சயமாகவே, மரணத்தின் பிரசன்னத்தில் அந்தவிதமாகவே ஜீவனானது செய்கிறது. அந்தவிதமாகவே சரியானது தவறானதின் முன்னிலையில் செய்கிறது. அந்தவிதமாகத்தான் விசுவாசம் சந்தேகத்தின் முன்னிலையில் செய்கிறது, அது அதைச் சிதறடித்துவிடுகிறது.

219 சூரியன் தன்னுடைய ஆசீர்வாதங்களை பிரகாசிக்கும்போது, எப்படி இரவு இங்கே தங்கியிருக்க முடியும்? இரவு எங்கே செல்கிறது? அது இனிமேல் இல்லை. இரவுக்கு என்ன சம்பவித்தது? கிட்டத்தட்ட பன்னிரண்டு மணி நேரத்திற்கு முன்பு இந்தக் கூடாரத்தில் இருந்த அந்த இருள் எங்கே? இங்கே இந்த மதில்களுக்குள் உறைந்திருந்த அந்த இருள் எங்கே? அது இனிமேல் இல்லை. அது மறைந்து போனது. ஏன்? வெளிச்சம் உள்ளே வந்தது. வெளிச்சம் உள்ளே வந்தபோது, இருள் போக வேண்டியதாயிருந்தது. ஆம், ஐயா!

220 இரவில் சுற்றித் திரிகிற உயிரினங்கள், கரப்பான் பூச்சிகள், வண்டுகள், பூச்சிகள் போன்றவற்றை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். சூரியன் உதிக்கட்டும் அல்லது ஒரு வெளிச்சம் பிரகாசிக்கட்டும், அவைகள் எப்படி இருளை நோக்கி ஓடுகின்றன என்பதைக் கவனியுங்கள். அந்தவிதமாகத்தான் சுவிசேஷமும் உள்ளது. அது பிரகாசிக்கும்போது, உங்களை பரிசுத்த-உருளையர் என்று அழைக்க விரும்புகிறவர்களுக்கு என்ன சம்பவிக்கிறது? உங்களைப் பரிகசிக்கிற அந்த ஜனங்களுக்கு என்ன நேரிடும்? ஒளி பளிச்சிடும்போது, அவர்கள் தங்களால் இயன்ற அளவு முழு வேகத்தில் இருளை நோக்கிப் பாய்கிறார்கள். ஏனென்றால் அவர்கள்—அவர்கள் இரவின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். ஆனால் பகலின் பிள்ளைகளோ ஒளியில் நடக்கின்றனர்.

221 ஆகையால் நாம் தேவனுடைய கிருபையினால் ஒளியின் பிள்ளைகளாயிருக்கிறோம். எனவே வெளிச்சம் பிரகாசித்தபோது, நாம் தேவனுக்கு நன்றி செலுத்தி, நம்முடைய திறந்த கண்களுடன் நடந்து, நீங்கள் உங்களுடைய இயற்கையான கண்ணினால் காண முடியாத காரியங்களை நோக்கிப் பார்க்கிறீர்கள். விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. ஆமென்! நான் அதை விரும்புகிறேன்.

222 நான் பேசவிருந்த என்னுடைய சிறு பிரசங்கத்திற்கு எனக்கு நேரமில்லை, ஏனென்றால் நாம் வியாதியஸ்தருக்காக ஜெபிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

223 எத்தனை பேர் கர்த்தரை நேசிக்கிறீர்கள்? ஆமென்! இப்பொழுது, நாம் இந்தக் கேள்விகளைப் பெற்ற பிறகு, அங்கே அவைகளில் சில கூர்மையாயும் மற்றும் ஒவ்வொரு காரியமும் உள்ளன, ஒருக்கால் அதற்குப் பதில் அளிக்கப்பட்டிருக்கலாம்...ஒருவேளை நான் அதன் பேரில் சரியான வேலையைக் கூடச் செய்யாமலிருக்கலாம், ஏனென்றால் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க எனக்கு நேரமில்லை. நான் அதை ஒரு தாளில் எழுதி வைத்திருந்தால் நலமாயிருக்கும். ஒவ்வொருவரும் திருப்தியடைந்துள்ளனர் என்று நான் நம்புகிறேன். இல்லையென்றால், ஏன், அதை மீண்டும் எனக்கு எழுதுங்கள். அது முழுமையாகப் பதிலளிக்கப்படவில்லை என்று நீங்கள் கருதினால், அதை ஆய்ந்து படிக்க எனக்கு ஒரு நேரம் இருக்கட்டும்.

224 தங்கியிருந்ததற்கு நன்றி. இப்பொழுது, இன்னும் ஒரு நிமிடத்தில் நாம் ஜெப வரிசையை உருவாக்கப் போகிறோம். ஆனால் நாம் அதைச் செய்வதற்கு முன்பு, இப்பொழுது இந்தப் பதில்கள் மற்றும் ஒருவர் இதற்குப் பதிலளிக்கும் சூழ்நிலையை மாற்றுவோம், ஒருவன் இந்த விதமாகவும், அந்த விதமாகவும் விசுவாசிக்கிறான். நீங்கள் பாருங்கள், கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், சில சமயங்களில் அது சற்று கடினமானது, எனவே நாம் கர்த்தரை ஆராதித்து பாடுவோமாக.

நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரை
நேசிக்கிறேன்
ஏனென்றால் அவர் முதலில் என்னை நேசித்தார்
என்னுடைய இரட்சிப்பை சம்பாதித்தார்
கல்வாரி மரத்தின் மேல்.

இப்பொழுது, நாம் மறுபடியும் பாடும்போது, உங்களைச் சுற்றிலுமுள்ள யாரோ ஒருவரோடு நீங்கள் கரங்குலுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரை
நேசிக்கிறேன்
ஏனென்றால் அவர் முதலில் என்னை நேசித்தார்

என்னுடைய இரட்சிப்பை சம்பாதித்தார்
கல்வாரி மரத்தின் மேல்.

இப்பொழுது, நாம் *இவ்விதமாக* அவரண்டை நம்முடைய கரங்களை உயர்த்துவோம்.

நான்...

இப்பொழுது நம்முடைய கண்களை மூடலாம்.

...அன்பு..., நான் அவரை நேசிக்கிறேன்
ஏனென்றால் அவர் முதலில் என்னை நேசித்தார்
என்னுடைய இரட்சிப்பை சம்பாதித்தார்
கல்வாரி மரத்தின் மேல்.

225 எங்கள் பரலோகப் பிதாவே, கர்த்தாவே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம். இந்தச் சிறு குழு உம்மை நேசிக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். நாங்கள் ஜீவனுள்ள தேவனுடைய வீட்டிற்கு, ஒரு சிறிய கட்டிடத்திற்கு, கட்டிடம் அல்ல, ஆனால் கட்டிடத்தில் ஜீவிக்கிற தேவனிடத்திற்கு வருகிறோம். என்னைப் போல, இந்தப் பழைய சரீரம், இந்நாட்களில் ஒன்றில், அது கீழே விழ வேண்டும், ஆனால் அதனுள் ஜீவிக்கிற மனிதனால் கீழே விழ முடியாது, ஏனென்றால் அது தேவனுடைய வல்லமையினால் பிடித்து வைக்கப்பட்டிருக்கிறது.

226 நாங்கள் இந்தக் காலையில் தொழுது கொண்டிருக்கிற இங்கே இந்தப் பழைய கட்டிடம், நாம் எவ்வளவுதான் அதைச் சரி செய்தாலும் அது ஒரு பொருட்டல்ல, என்றோ ஒரு நாள் அது கீழே விழும், ஆனால் கட்டிடத்தில் ஜீவிக்கிற தேவன் நித்தியமானவராயிருக்கிறார். பிதாவே, இப்பொழுது உமக்கு நன்றி செலுத்தவும், துதி செலுத்தவும் நாங்கள் உம்மைச் சந்திக்க வருகிறோம்.

227 ஜனங்களுடைய இருதயங்களில் உள்ள இந்தக் கேள்விகளுக்காக, அவர்கள் *இதைச்* செய்ய வேண்டுமா அல்லது *அதைச்* செய்ய வேண்டுமா என்று அவர்கள் யோசித்துக் கொண்டிருந்தனர் என்பதை நாங்கள் காண்கிறோம். பிதாவே, ஒவ்வொரு கனிவான கிறிஸ்தவனுடைய இருதயத்திலும் அது பதிலை எப்படியாவது அளிக்கும் என்றும், சத்தியம் என்னவென்பதை அவர்களுக்குப் புரியவைக்கும் என்றும் நான் நம்புகிறேன். கர்த்தாவே, அதை அருளும். நான் தவறியிருந்தால், அப்பொழுது என்னை மன்னியும். நான் தவறிப்போக வேண்டும் என்று எண்ணவில்லை, ஏனென்றால் அது உம்முடைய பிள்ளைகள், அவர்கள் அந்தக் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பிதாவே, நான் கூறினதின் மூலம் என்னை நியாயந்தீர்க்க நீர் இங்கே நின்று கொண்டிருப்பீரேயானால் நலமாயிருக்கும் என்று நான்—நான் அறிந்துள்ள எல்லாவற்றையும் அவர்களுக்கு அளிக்க விரும்புகிறேன்.

228 இப்பொழுது, கர்த்தாவே, நாங்கள் வியாதியஸ்தருக்காகச் சந்திக்க வருகிறோம். இப்பொழுது, நாங்கள் எதைப் பெற்றுக் கொள்கிறோம் என்று நாங்கள் விசுவாசிக்கின்றோமோ, அதை மாத்திரமே நாங்கள்பெற்றுக் கொள்கிறோம் என்பதை வேதத்தில் நாங்கள் அறிவோம். ஒரு சமயம், பிதாவே, இயேசுவானவர் பூமியில் இருந்தபோது, சீரோபேனிக்கியா ஸ்திரீ அவரண்டை வந்து, "கர்த்தாவே, என் மகளுக்கு இரக்கமாயிரும், ஏனென்றால் அவள் ஒரு—ஒரு பிசாசினால் பலவிதமாகத் தொல்லைப்படுத்தப்பட்டிருக்கிறாள்" என்று கூறுவதை நாங்கள் நினைவுகூர்கிறோம்.

"பிள்ளைகளுடைய அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குக் கொடுப்பது நல்லதல்ல" என்று அவர் கூறினதை நாம் கேட்கிறோம்.

229 ஓ, தேவனே, அது என்ன ஒரு—ஒரு வெளிப்படையான மறுப்பு, அது மாத்திரமல்ல, ஆனால் அவளை ஒரு நாய் என்று அழைப்பது. ஆனால் அவள் அதைக் குறித்து அகங்காரத்துடன் இருப்பதற்குப் பதிலாக, மிகவும் இனிமையாகவும், தாழ்மையாகவும், "கர்த்தாவே, அது உண்மை" என்றாள். ஏனென்றால் அது சத்தியமாயிருந்தது. அவள், "கர்த்தாவே, அது உண்மைதான், ஆனால் நாய்களோ தங்களுடைய எஜமான்களின் மேசையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னும்" என்றாள். அதுதான் கிரியை செய்தது. பிள்ளைகளின் மேஜையிலிருந்து வரும் துணிக்கைகளை அவள் எடுத்துக் கொள்ள ஆயத்தமாயிருந்தாள். தேவனே, அதுவே இப்பொழுது எங்களுடைய மனப்பான்மையாயுள்ளது. பிதாவே, நீர் எங்களோடு செய்ய விரும்புகிற எந்தக் காரியத்திற்கும் நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம். நாங்கள் உம்முடைய கரங்களில் இருக்கிறோம்.

230 பழைய ஏற்பாட்டின் தேவன், தரிசனங்களைக் காண்பித்து, அடையாளங்களையும், அற்புதங்களையும் அளித்தவர் இன்றைக்கும் ஜீவிக்கிறார் என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் போக வாஞ்சிக்கிற பரலோகத்திற்கு, என்றோ ஒரு நாள் தேவனுடைய கிருபையினால் நாங்களும் கூடச் செல்வோம், ஏனென்றால் அதே தேவன் எங்களுக்கு மத்தியில் அதே தேவனாயிருக்கிறார் என்று தம்மை காண்பித்துக்கொண்டிருக்கிறார்.

231 பிதாவே, இந்தக் காலையில் எங்கள் மத்தியில் சுகவீனமாயும், தேவையாயுமிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு ஜெப வரிசையினூடாகச் செல்லப் போகிறார்கள். அவர்கள் வந்து, "பாருங்கள், நீர் எனக்கு எந்த நன்மையும் செய்ய முடியும் என்று நான் விசுவாசிக்கவில்லை. நான்—நான்..." என்று கூறாதிருப்பார்களாக. கர்த்தாவே, அந்த மனப்பான்மை இல்லாதிருப்பார்களாக, ஆனால் தேவன், "விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள் பின் தொடரும். வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள்,

அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்று தேவன் சொன்னதை நினைவுகூர்ந்து அவர்கள் வருவார்களாக. நீர் அதை வாக்குத்தத்தம் செய்தீர்; நீர் அவ்வாறு கூறினீர்.

232 அவர்கள் பரிசுத்த பயபக்தியோடும் விசுவாசத்துடனும் வருவார்களாக, ஜெபம் செய்யப்பட்டு, அவர்கள்மேல் கரங்கள் வைக்கப்பட்ட உடனே, அப்பொழுது இந்தக் கேள்வியை எழுதிய அன்பு சகோதரியின்மேல் வந்ததுபோல, பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் வருவாராக, பரிசுத்த ஆவியானவர் அவருடைய பிரசன்னத்தின் அப்பேர்ப்பட்ட ஒரு மகத்தான ஞானஸ்நானத்தினால் அவளுடைய அழிவுள்ள ஜீவிகளை ஏறக்குறைய கொன்று போட்டார் என்று கூறினாள்.

233 கர்த்தாவே, இந்தக் காலையில் வருகிற ஒவ்வொருவர் மேலும் அந்த—அந்தவிதமான தாக்கங்கள் இருப்பதாக. அதை அருளும். அவர்கள் சுகமடைவார்களாக. நீர் அதை வாக்குத்தத்தம் செய்தீர் என்றும், உம்மால் பொய்யுரைக்க முடியாது என்பதை சந்தேகத்தின் நிழலில்லாமல் அவர்கள் அறிந்து கொள்வார்களாக, வெளிச்சம் உள்ளே வந்தவுடனே, இருளும் சந்தேகமும் ஓடிவிடும். பிதாவே, இதை அருளும். நாங்கள் இயேசுவின் நாமத்தில் அவர்களுக்காக ஜெபிக்கையில், நாங்கள் அவர்களை இப்பொழுது உம்மிடம் சமர்ப்பிக்கிறோம். ஆமென்!

234 இப்பொழுது ஜெபிக்கப்பட விரும்புகிறவர்கள், முதலில் *இந்தப்* பக்கத்தில், இங்கே கட்டிடத்தின் நெடுகிலும் வரிசையில் நில்லுங்கள், *மகத்தான வைத்தியர் இப்பொழுது அருகில் இருக்கிறார்* என்ற பாடலை எங்களுக்காக டெடி வாசிக்கிறார். அவர்களில் சிலர் *இங்கே* திரும்பி, வாருங்கள்.

அந்த மகத்தான வைத்தியர் இப்பொழுது...

235 சகோதரர் நெவில். தொடர்ந்து வரிசையாக வந்து கொண்டேயிருங்கள். நாங்கள் இங்கே நின்று கொண்டிருப்போம். எல்லா சபையும் ஜெபித்துக் கொண்டிருக்கட்டும். சகோதரன் நெவிலும் நானும் இங்கே ஒன்றாக இருப்போம்; அவர் எண்ணெய்யைப் பூசுவார், நான் வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பேன், இங்கே முன்னால் உள்ளது. இப்பொழுது, ஒவ்வொருவரும் ஜெபத்தில் இருங்கள்.

236 இப்பொழுது நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? நாங்கள் வியாதியஸ்தர்களுக்கு அபிஷேகம் செய்யவும், அவர்களுக்காக ஜெபிக்கவும் வருகிறோம். இப்பொழுது நான் உங்களுக்கு வேதவாக்கியங்களை மேற்கோள் காட்டட்டும். "உங்களில் ஒருவன் சுகவீனமாயிருந்தால், அவர்கள் சபையின் மூப்பர்களை அழைக்கக்கடவர்கள்; அவர்கள் எண்ணெய் பூசி, அவர்களுக்காக ஜெபிப்பார்களாக: விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளிகளை இரட்சிக்கும், தேவன் அவர்களை எழுப்புவார்;

பாவம் செய்தவர்களுக்கு அது மன்னிக்கப்படும். நீங்கள் குணமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபியுங்கள்."

இப்பொழுது இந்தப் பக்கத்தில் மீதியாயுள்ளவர்கள், நீங்கள் வாஞ்சிக்கும்போது, நீங்கள் அங்கே அந்த வரிசையின் கீழே சென்றவுடன், அந்த இடம், அந்த நடைபாதையில், நீங்கள் அப்படியே பின்னால் நில்லுங்கள். இப்பொழுது இங்கே, சபையின் மூப்பர் எண்ணெய்யைப் பூசுவார், ஜெபத்தையும் செய்வார். நான் ஜெபித்து, வியாதியஸ்தர் மேல் கரங்களை வைப்பேன். இப்பொழுது, நண்பர்களே, ஜெப வரிசையில் நின்று கொண்டிருக்கிற நீங்கள், நீங்கள் இங்கே எதற்காக நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய தருணம் இதுவே என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் சுகமடைய வேண்டும்.

நான் என் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறேன், அதுதான் என் தாயாரை இத்தனை காலம் பிடித்து வைத்திருந்தது (அவள், ஒரு வயோதிக பெண்மணி), ஏனென்றால் நான் அதை விசுவாசிக்கிறேன். அவர் அதை என்னிடத்தில் கூறும் வரை, (அவள் மரித்துக் கொண்டிருக்கலாம்), ஆனால் அவர் என்னிடம் கூறும் வரையில், அவள் மரித்துக் கொண்டிருக்கவில்லை என்று நான் விசுவாசித்துக் கொண்டிருக்கிறேன். பார்த்தீர்களா? இப்பொழுது, அவள் போக வேண்டும் என்றும், அவள் போகப் போதிய வயதை அடைந்துவிட்டாள் என்றும், அவள் போக விரும்புகிறாள் என்றும், போக முயற்சித்துக் கொண்டிருக்கிறாள் என்றும் நான் அறிவேன். ஆனால் அதே சமயத்தில் அவர் என்னிடம் கூறுவார் என்று நான்— நான் விசுவாசிப்பேன். இப்பொழுது அவர் என்னிடம் கூறுவார் என்று நான் விசுவாசிக்கிறேன், பாருங்கள். இப்பொழுது அவர் அவ்வாறு செய்யாமலிருக்கலாம். எனக்குத் தெரியாது, அவர் செய்வார் என்று எனக்குத் தெரியாது, ஆனால் அவர் அவ்வாறு செய்வார் என்று நான் விசுவாசிக்கிறேன். பார்த்தீர்களா? ஆனால் இதுவரை, அவர் அதைக் குறித்து என்னிடம் ஒன்றுமே கூறவில்லை. நான் அதை விசுவாசிக்கிறேன். நீங்கள், அனுதினமும், நீங்கள்...

237 அவர் எனக்குக் காண்பிக்கிற எல்லாவற்றையும் நான் ஜனங்களுக்கு வெளிப்படுத்துகிறதில்லை, நீங்கள் அதை அறிவீர்கள். பாருங்கள், நேற்று, நான் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்தேன், என்ன செய்யப் போவதாயிருந்தது என்பதை சரியாக ஒரு தரிசனத்தில் கண்டேன், தேவன் அது உண்மை என்பதை அறிந்திருக்கிறார், மேலும், இன்னும் இரண்டு அல்லது மூன்று மனிதர்களுடன் அமர்ந்திருந்தேன். சுமார் அரை மணி நேரம் கழித்து, அது சம்பவித்ததையும், பரிபூரணமாக, அது இருந்ததையும் நான் கண்டேன். நான் அப்படியே அங்கேயே நின்று, எனக்குள்ளே நடுங்கி, சிந்தித்துப் பார்த்தேன். பார்த்தீர்களா? ஒருவேளை...நான்,

“அது அந்தவிதமாக இருக்கப்போகிறது என்று ஒருவேளை நான் அவர்களுக்குக் கூறியிருக்கலாம்” என்றேன். ஆனால் நான், “சரி, அதை அப்படியே விட்டுவிடு” என்றேன். பார்த்தீர்களா?

238 அது அனுதினமும் சம்பவிக்கிறது, பாருங்கள். ஏதோ ஒன்று நடக்கப் போகிறது, நான் அதை அப்படியே விட்டுவிடுகிறேன். அது உண்மை என்பதை தேவன் அறிவார். பார்த்தீர்களா? சம்பவிக்கப் போகிற ஏதோ ஒன்று, அதைக் காண்பிக்கிறதாயும், அதைக் கூறுகிறதாயும் இருக்கிறது. ஏதோ ஒன்று எனக்குத் தோன்றி, “*இந்த வார்த்தையை இந்த விதமாகக் கூறு, இந்தக் காரியம் இங்கே சம்பவிக்கும்*” என்று கூறும். அப்பொழுது நான், “சரி, அது அவ்விதமாக இருக்கட்டும்” என்று கூறுவேன். அதன்பின்னர் நான் கவனிப்பேன், இங்கே அது இங்கே உள்ளது. பார்த்தீர்களா? ஆம்.

239 சரி, அவருடைய வார்த்தைக்கு ஏற்ப, உயிரற்ற, பௌதீகமான பொருட்களைக்கூட அவர் அசைக்க முடியும் என்றால், நாங்கள் அதைக் கூறியிருக்கிற காரணத்தால், என்னோடு இணைந்த உங்களை அவர் எவ்வளவு அதிகமாக ஆக்க முடியும். நீங்கள் என்னோடு இருக்கிறீர்கள், நீங்கள் என்னுடைய—நீங்கள் சுகவீனமாயிருக்கிற என்னுடைய சகோதரனும் சகோதரியுமாயிருக்கிறீர்கள். நாம் இந்த வார்த்தைகளைக் கூறும்போது, “தேவனுடைய வல்லமை இந்த நபரைக் குணமாக்குவதாக,” ஏன், அது சம்பவிக்கத்தான் வேண்டும். இப்பொழுது, அந்தப் பொருள், “இல்லை, நான் அதைச் சந்தேகிக்கிறேன்” என்று கூற முடியாது. அது தொடர்ந்து சென்று அதைச் செய்யும். ஆனால் உங்களால், “சரி, என்னவாக இருக்கும் என்று யோசிக்கிறேன்” என்று கூறலாம், அது நிறைவேறாது, பாருங்கள். ஆனால் நீங்கள் அப்படியே தொடர்ந்து சென்று, இப்பொழுது உங்களுடைய சிந்தனையோடு சரியாகத் தரித்திருந்தால், “நான் சுகமடையப் போகிறேன்,” நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா?

240 இப்பொழுது நாம் யாவரும் ஜெபிப்போமாக. எங்கள் பரலோகப் பிதாவே, இந்த வாலிப ஸ்திரீயின் மேல் கைகளை வைத்து, இங்கே நின்றுகொண்டிருக்கிற இந்த இளம் தாய், இந்தக் கடுமையான ஜலதோஷத்தினால் அவதியுற்றுக்கொண்டிருக்கிறாள். அனுமதிக்க...

241 [சகோதரன் பிரான்ஹாம் வியாதியஸ்தருக்காகத் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறார். ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.]

242 எனவே நீர் இந்த உறுமால்கள் வைக்கப்படுகிற இந்த ஜனங்களைச் சுகப்படுத்த வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். அவர்களுடைய விண்ணப்பங்களை அவர்களுக்கு அருளும். நான் இதை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறேன். ஆமென்.

243 நீங்கள் தங்கியிருந்ததற்கு ஆழ்ந்த பாராட்டுதலோடு, இந்தக் காலம் முழுவதும் தரித்திருக்க உங்களுடைய உத்தமத்தையும், நாம்

இருக்கும்போது இப்படி சபையில் காத்திருப்பது....ஆனால் சபையில் இருப்பதைக் காட்டிலும் ஒரு மேலான இடத்தை நான் அறியேன் என்பதை நீங்கள் அறிவீர்களா? இதைவிட மேலான ஒரு இடத்தைக் குறித்து எனக்குத் தெரியவில்லை. மேலும் தேவன் இப்போது பிரசன்னமாக இருக்கிறார்...என்ற விதத்தில் நமக்குக் கிடைக்கும் ஆறுதலும் கூட.

244 நாம் சற்று, அவர் எவ்வளவு மகத்தானவர் என்றும், அவர் நமக்காக என்ன செய்திருக்கிறார் என்றும் நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமாக. அவர் இல்லாமல் நம்மால் என்ன செய்திருக்க முடியும்? நாம் எவ்வளவாய் அவரைக் கண்டிருக்கிறோம், இதன் மூலம் அவர் நமக்கு ஒரு காரியத்தைக் கூடக் கூறவில்லை: அவர் எனக்குத் தரிசனங்களை அளித்து, நான் இந்தக் காலையில் உங்களைக் கேள்விக்குள்ளாக்குகிறேன், அவர் நிறைவேற்றியதைத் தவிர வேறு ஒன்றை நீங்கள் எப்போதாவது கண்டிருக்கிறீர்களா? அவர் சரியாக என்ன செய்வதாகக் கூறினாரோ, அப்படியே சரியாக இந்த நேரத்தில். அப்படியானால், அவர் தேவனாயிருக்கிறார். அப்படியானால், அவர் நம்முடைய பிதாவாயிருக்கிறார். அவர் நம்மை நேசிக்கிறார். அவருடைய பரலோகம் எங்கிருக்கிறதோ, என்றோ ஒரு நாள் நாம் அங்கே செல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். அவர் இப்பொழுது இங்கே இருக்கிறார் என்பதை நாம் அறிவோம். நாம் அதை உணருகிறோம்.

245 நாம், நாம் காணாத காரியங்களை நாம் பார்க்கிறோம். இப்பொழுது உங்களில் அநேகர் ஜெபிக்கப்பட்டனர், பாருங்கள், அதற்கு முரணான எந்தக் காரியத்தின் எந்த அறிகுறிகளையும் நாம் அப்படியே மறுக்கிறோம். பார்த்தீர்களா? தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ள எந்தக் காரியத்தையும், பாருங்கள், கிறிஸ்தவன் நோக்கிப் பார்க்கிறதில்லை...நீங்கள் எப்படியும், உங்கள் கண்களினால் காண்கிறதில்லை. நீங்கள் அதை அறிவீர்கள். நீங்கள் உங்களுடைய கண்களினால் காண்கிறதில்லை. நீங்கள் உங்களுடைய இருதயத்தினால் பார்க்கிறீர்கள். பார்த்தீர்களா? பார்த்தல் என்றால் "*புரிந்து கொள்ளுதல்*" என்று பொருள். நீங்கள் உங்களுடைய இருதயத்தினால் புரிந்துகொள்கிறீர்கள், ஆகையால் எங்களுடைய கண்கள் காணாதவைகளை நாங்கள் நோக்கிப் பார்க்கிறோம். பார்த்தீர்களா? கிறிஸ்தவ அறிக்கையானது, கிறிஸ்தவ மார்க்கத்தின் முழு சர்வாயுதவர்க்கமும் அதன் அடிப்படையில் அமைந்துள்ளது. நாம், நாம் காணாதவைகளை நோக்குகிறோம், ஏனெனில் ஆபிரகாம் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைத்தான், ஏனென்றால் அவன் தேவனை விசுவாசித்தான். பார்த்தீர்களா?

246 இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்? இப்பொழுது நீங்கள் அந்தவிதமாக ஜெபிக்கப்படும்போது, அப்பொழுது தேவன் உங்களைச் சுகப்படுத்துவதாக வாக்குப்பண்ணினார். அப்படியானால் இப்பொழுது நீங்கள் ஒரு சிறு வித்தியாசத்தை

உணராமலிருக்கலாம், ஆனால் அவர் ஒருபோதும்...அது, அதுவே அதுவல்ல. பார்த்தீர்களா? நாம் எப்படியும், அதை விசுவாசிக்கிறோம்.

247 நீங்கள் மாத்திரம் அறிந்திருந்தால், நான் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு முன்னர் பிரசங்க பீடத்திற்கு வருவேன் மேலும், கூட்டத்தின் பாதியளவாவது செல்வேன் என்று நான் நினைக்கவில்லை. நான் மிகவும் சோர்வுற்று, களைப்புற்றிருந்தேன், மேலும் எனக்குக் காய்ச்சல் இருப்பது போன்று உணர்ந்தேன், ஆனால் இப்பொழுது நான் நலமாக உணருகிறேன், ஏனென்றால் நான், "நான் தேவனுக்கு கடமைப்பட்டவன். நான் தேவனை விசுவாசிக்கிறேன்" என்றேன். நான் அதனோடு சண்டையிட வேண்டியதாயிருந்தது. அங்குள்ள என்னுடைய மனைவியும் அதையே உங்களிடம் கூறலாம், இன்று காலை இங்கு வர முயற்சித்துக் கொண்டிருந்தபோது, எனக்குத் தொண்டை கரகரப்பாய் இருந்தது. நான், "எப்படி என்னால் அதைச் செய்ய முடியும்?" என்று கேட்டேன். ஆனால், உண்மையாகவே, நான் இப்பொழுது அற்புதமாக உணர்கிறேன். நான்—நான் என்னுடைய பாடப் பொருளை எடுத்து, தொடர்ந்து சென்று பிரசங்கிக்க முடியும், மேலும்—நான் நன்றாக உணர முடியும் என்று நான் நம்புகிறேன்.

248 ஆனால், ஏனென்றால், நீங்கள் பாருங்கள், நீங்கள் உங்களுடைய கண்களினால் காணாத காரியங்களை நோக்கிப் பார்க்க வேண்டும். நீங்கள் அதை உங்களுடைய இருதயத்தினால் காண்கிறீர்கள். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்கள், நீங்கள் காணாத காரியங்களைக் குறித்து, ஆனால் நீங்கள் விசுவாசிக்கிற காரியங்களைக் குறித்து சாட்சி கூறுகிறீர்கள். ஏனென்றால் அது விசுவாசமாயுள்ளது. "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது."

249 இந்தக் காலையில், ஒரு வாலிப கிறிஸ்தவன் எனக்கு முன்பாக இங்கே உட்கார்ந்து கொண்டிருப்பதை நான் கவனித்திருக்கிறேன். அந்த நபர் எடுத்த ஒரு தீர்மானத்தை நான் அறிவேன். நான் நிச்சயமாகவே அதைப் பாராட்டுகிறேன். அது யார் என்று நான் கூறமாட்டேன். ஆனால் இந்தக் குறிப்பிட்ட கிறிஸ்தவர் எடுத்த ஒரு—ஒரு தீர்மானத்தை நான்—நான் பாராட்டுகிறேன். அது ஒரு கூட்டாளியா, ஒரு நண்பனா என்று கூடப் பொருட்படுத்தாமல், தகப்பனோ அல்லது தாயோ, அல்லது அது என்னவாயிருந்தாலும், அவர்கள் கிறிஸ்துவுக்கு உண்மையாய் நிற்க வாஞ்சிக்கிறார்கள். புரிகிறதா?

250 அந்தவிதமாகவே நீங்கள் உத்தமமாயிருப்பதன் மூலமே அன்பார்ந்த ஒருவரை ஆதாயப்படுத்துகிறீர்கள். விசுவாசமுள்ளவர்களாயிருப்பதே நீங்கள் அன்பானவர்களை ஆதாயப்படுத்தும் வழியாய் உள்ளது. உங்களுடைய தீர்மானத்தில் நிலைத்திருங்கள். நீங்கள் தேவனோடு சரியாக இருக்கிறீர்கள் என்று

நிச்சயமுடையவர்களாயிருங்கள், அப்பொழுது அங்கே எப்போதும் நிலைத்திருங்கள். அதனோடு அப்படியே நிலைத்திருங்கள். நீங்கள் அதனோடு சரியாக நிலைத்திருந்தால், எந்தக் காரியமும் உங்களை அதிலிருந்து ஒருபோதும் அசைக்க முடியாது.

251 இப்பொழுது, நாம் யாவரும் தவறு செய்யப் போகிறோம். சற்று நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் ஒருவரையொருவர் நோக்கிப் பார்க்கும்போது, மற்ற நபரின் தவறை நோக்கிப் பார்க்காதீர்கள். பாருங்கள், அதைச் செய்யாதீர்கள், ஏனென்றால், நீங்களும் கூடத் தவறு செய்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால் இந்த நபரை வழிநடத்திக் கொண்டிருக்கிற கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால், அப்பொழுது நீங்கள் அவர்களுக்காக ஜெபியுங்கள். அந்தவிதமாகத்தான்—அந்தவிதமாகத்தான் நாம் ஒற்றுமையாக வாழ்கிறோம், பாருங்கள், ஜெபியுங்கள். மேலும், நினைவிருக்கட்டும், அந்த விதமான ஒரு பிழைத்திருத்தத்திற்காக நீங்கள் யாரோ ஒருவருக்காக ஜெபித்துக் கொண்டிருக்கையில், நீங்கள் வேறொருவருக்காக ஜெபிக்கும்போது, தேவன் உங்களைக் கனப்படுத்தி, சுகப்படுத்துவார். அது உண்மை. அந்தவிதமாகத்தான் கிறிஸ்தவ மார்க்கம் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து, ஒருவருக்காக மற்றவர் செய்வதும் தான் கிறிஸ்தவத்தின் அடிப்படையாகும். ஒருவருக்கொருவர் அன்பாகவும், புரிதலுடனும் இருங்கள். இப்பொழுது, உங்களுடைய அண்டை வீட்டாரின் தவறை நீங்கள் காண்பீர்களானால், அவர்கள் எங்கே தவறிழைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் காண்பீர்களேயானால், அவர்களோடு தவறாகப் போகாதீர்கள், ஆனால் அவர்களுக்காக ஜெபியுங்கள். தொடர்ந்து ஜெபித்துக் கொண்டேயிருங்கள், தேவன் அதைப் புரிந்துகொள்வார். அவர் எல்லாவற்றையும் சரிபடுத்துவார்.

252 இப்பொழுது, அது கர்த்தருடைய சித்தமாயிருக்குமானால், பில்லி ஒரு முறைமையை உடையவனாயிருக்கிறான் என்று நான் நினைக்கிறேன், அவன் ஒவ்வொருவருக்கும் ஒரு அட்டையைத் தபாலில் அனுப்புகிறான். இப்பொழுது நாம் அறிந்துள்ளபடி, இந்த வாரம் அம்மா சரியாகிவிடுவாரானால், நாம் நிச்சயமில்லாதவர்களாயிருக்கிறோம், ஆனால் இந்த வாரம் தாயாருக்கு சரியாகிவிட்டால், மற்றும் ஒவ்வொரு காரியமும், அடுத்த ஞாயிறு நான்—நான் ஒரு—ஒரு சுவிசேஷ செய்தியின் பேரில் பேச விரும்புகிறேன். இங்குள்ள நம்முடைய—நம்முடைய விலையேறப்பெற்ற போதகருடன் அது சரியாயிருந்தால். உங்களால் முடிந்தால், நாங்கள் உங்களை மீண்டும் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். உங்களால் வர முடிந்தால், நீங்கள் வருவதற்கு நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

253 நீங்கள் உங்களுடைய முழு இருதயத்தோடு அவரை நேசிக்கிறீர்களா? அவர் அற்புதமானவரல்லவா? அவரில்லாமல்

நம்மால் என்ன செய்ய முடியும்? இப்பொழுது நீங்கள் என்ன செய்ய முடியும்? அதைக் காட்டிலும் மகத்தான எந்தக் காரியத்தையாவது நீங்கள் எனக்குக் கூற முடியுமா? அதைக் காட்டிலும் மகத்தான ஒன்றை உங்களால் எனக்குக் காண்பிக்க முடிந்தால், அப்பொழுது நான்—நான்—நான் என்னிடம் உள்ளதை விற்றுவிடுவேன், இதைப் பார்க்கிலும் மகத்தானதை எனக்குக் காண்பிக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறேன். ஆம், ஐயா. நான் அறிந்துள்ள மகத்தான காரியம், நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்ற உறுதியோடு, வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த அதே தேவன் என்று அறிந்துகொள்ளும்படியாகவேயாகும், தம்மைத்தாமே தாழ்த்தி, இறங்கி வந்து, எங்கள் மத்தியில் வாசம் செய்து, நமக்காகச் செய்வார்.

254 இப்பொழுது நாம் சரியாயிருக்கிறோமா அல்லது இல்லையா என்பதை நாம் எப்படி அறிந்துகொள்கிறோம், பாருங்கள், ஏனென்றால் அவர் செய்த அதேக் காரியத்தை, ஆதியில், அங்கே பின்னால் இருந்த அந்தக் கிறிஸ்தவர்களோடு, அதே சபை, அதே செயல்பாட்டில், பரிசுத்த ஆவியானவர் அசைவாடின விதத்திலும், பிசாசு அவர்களுக்கு எதிராகச் சண்டையிட்ட விதத்தையும், அவர்கள் நின்ற விதத்தையும், அதே அடையாளங்களோடு, அதே காரியம் தான் இங்கே சம்பவிக்கிறது, அதே அற்புதங்கள், அதே தேவன், அவருடைய பிழையற்ற நிரூபணம்.

255 எனக்குச் சொல்லுங்கள், விஞ்ஞான வார்த்தையில், எனக்கு விஞ்ஞான வழியில் சொல்லுங்கள், அது சம்பவிப்பதற்கு முன்னர், வரப்போகும் காலங்களில் அல்லது வரப்போகும் காலங்களில் நடக்கப்போகும் ஒரு காரியத்தை எப்படி யாராகிலும் முன்னுரைக்க முடியும். அது எங்கே இருக்குமென்றும், அது சம்பவிப்பதற்கு முன்னரே அதை முன்னறிவிக்கும் வல்லமையை எனக்குக் காண்பியுங்கள். நீங்கள் விரும்புகிற எந்தக் காரியத்தினூடாகவும் பின்னோக்கிச் செல்லக்கூடிய எந்த மானிட சிந்தையையும் என்னிடம் சொல்லுங்கள், நீங்கள் ஒன்றைக் காணவும், ஏதோ ஒரு காரியத்தை முன்னறிவிக்கவும் எந்த வழியையும் எனக்குக் காண்பியுங்கள், அது—அது செய்கிற விதமாகவே அது சம்பவித்தது. பார்த்தீர்களா? அங்கு இல்லை.

256 எனவே அவர் தேவனாயிருக்கிறார். பாருங்கள், அவர் தேவன். அவர் தேவனாயிருக்கிறபடியால், அவருடைய கிருபையினூடாக அவர் வந்து நம்மோடு வாசம் செய்கிறார், இந்தக் காரியங்களை முன்னறிவித்த அந்த மனிதர்களுக்கு அவர் செய்தது போலவே, அவைகள் ஒவ்வொன்றும் முன்னறிவிக்கப்பட்ட விதமாகவே சம்பவித்தன. இப்பொழுது அதே தேவன் நம்மோடு இருக்கிறார், அவர் அங்கே முன்பு செய்த அதே காரியங்களைச் சரியாக முன்னுரைத்து, காண்பிக்கிறார். ஏன், நாம் மிகவும் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும், நாம் ஒரு மேகத்திற்கு மேகத்திற்கு குதிப்போம், அந்தவிதமாக, கிட்டத்தட்ட விண்வெளியினூடாக நடந்து செல்வதை

நாம் அறிவோம்.

257 நாம் மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். நமக்கு இரட்சிப்பு உண்டு என்பதை நாம் அறிவோம். நாம் கிறிஸ்தவர்கள் என்பதை நாம் அறிவோம். நாம் பரலோகத்திற்கு செல்லப் போகிறோம் என்பதை நாம் அறிவோம், ஏனென்றால் தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார், நாம் அவரைக் காணும் ஒரு விதத்தில் இங்கே அவர் நம்மோடு கூட அசைவாடிக் கொண்டிருக்கிறார்.

258 நாங்கள் அவரைக் காண்கிறோம். நான் எப்படி அவரைக் காண முடியும்? நான் உங்களைக் காணும்போது. நீங்கள் அவரை எனக்குள் காண்கிறீர்கள்; நான் அவரை உங்களுக்குள் காண்கிறேன். பாருங்கள், அவர் உங்களுக்காக என்ன செய்கிறார் என்பதை நான் காண்கிறேன். இப்பொழுது அவர் இங்கே எனக்கு வார்த்தையை வெளிப்படுத்துவதை இங்கே நான் காண்கிறேன். நீங்களோ, "உங்களால் எப்படி அவரை எனக்குள் காண முடியும்?" என்று கேட்கலாம். பாருங்கள், அவர் இங்கே எனக்கு வார்த்தையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். நான் அதை அங்கே வெளியே காண்கிறேன், அவர் அதை உங்களுக்கு அளிக்கிறதையும், நீங்கள் அதை வைத்துக்கொள்வதையும் காண்கிறேன். பார்த்தீர்களா? அதன்பின்னர் நீங்கள் திரும்பிப் பார்க்கும்போது, நீங்கள், "அவன் எப்படி வந்தான், அது எப்படி வந்தது?" என்று கேட்கலாம். அதன்பின்னர் நீங்கள் திரும்பி வந்து, அது சரியாயிருக்கிறது என்பதைக் கண்டறியலாம், பாருங்கள். எனவே நீங்கள் அவரை எனக்குள் காண்கிறீர்கள்; நான் அவரை உங்களுக்குள் காண்கிறேன்.

259 நாம் அவரைச் சூரியோதயத்தில் காண முடியும். நாம் அவரைச் சூரிய அஸ்தமனத்தில் காண முடியும். நாம் அவரை மலர்களில் காண முடியும். நாம் அவரைக் காண முடியும்—நாம் அவரை எங்கும் காண முடியும், ஏனெனில், இவ்வுலக வாழ்வின் கீழ்மட்ட நிலைகளிலிருந்து, தேவனின் மகிமை எனும் உயர்மட்டத்திற்கு நாம் கடந்து வந்திருப்பதால், அவருடைய அழகை நம்மால் காண முடிகிறது.

260 ஒரு சில நாட்களுக்கு முன்பு, நான் இந்த பயணத்தில் இருந்தபோது, அலாஸ்கன் நெடுஞ்சாலையில், நான் ஒரு வேட்டை பயணத்திற்கு சென்றிருந்தபோது, நான் அங்கே பின்னால், "ஏன்? ஏன்?" என்றேன். தேவன் எவ்வளவு—எவ்வளவு உண்மையானவர் என்பதை கவனியுங்கள். இப்பொழுது சுகவீனமான ஜனங்கள் எங்கும் உள்ளனர், ஆனால் அதே சமயத்தில் தேவன் அதை அறிந்திருக்கிறார்.

261 இப்பொழுது, நாளை நான் புறப்பட்டுச் செல்ல வேண்டும், அங்கே பின்னால் உள்ள சகோதரன் ராய், நாங்கள் யாவரும் நாளை கொலராடோவிற்கு புறப்பட்டுச் செல்ல வேண்டியவர்களாய்

இருக்கிறோம். எங்கள்...ஒவ்வொரு இலையுதிர் காலத்திலும் நாங்கள் வேட்டையாடச் செல்கிறோம்...நான் கூட்டங்களிலிருந்து செல்ல வந்திருக்கிறேன். அம்மா, அம்மாவின் நிலைமையின் காரணமாக என்னால் போக முடியவில்லை.

262 இப்பொழுது பரிசுத்த ஆவியின் தயவைப் பாருங்கள். அவர் அதை நீண்ட காலத்திற்கு முன்பே அறிந்திருந்தார். எனவே, என்னைப் போக அனுமதிப்பதற்குப் பதிலாக, அவர் திரும்பி, எனக்கு ஒரு தரிசனத்தைக் கொடுத்து, என்னை அங்கே அனுப்பினார், கொலராடோவிற்கு நான் செல்ல முடியாத ஒரு வேட்டை பயணத்தை எனக்கு அளித்தார். பாருங்கள், ஏனென்றால் அந்தவிதமான மிருகங்கள் கொலராடோவில் இல்லை. திரும்பி, ஒரு தரிசனத்தின் மூலம் அதை எனக்கு அளித்து, நான் அதைப் பெற்றுக்கொள்ளும்படிச் செய்து, கொலராடோவிற்கு செல்லும் இந்தப் பயணத்தில் அவர் என்னை விலக்கி வைக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார். நன்மையையும் இரக்கத்தையும் குறித்து பேசுங்கள்! பிறகு ஏன்? அதன்பின்னர் நீண்ட காலத்திற்கு முன்பே, என் தாயார் பாடுபடப் போவதை அவர் அறிந்திருந்தார். என்னுடைய தாயார் மருத்துவமனையில் இருப்பார் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் அதை அனுமதித்தால், அப்பொழுது நான் ஒன்றுமே அறியாத ஒரு நல்ல நோக்கத்திற்காகவே அவர் அதைச் செய்து கொண்டிருக்கிறார். ஆனால் அவை யாவும், "கர்த்தரில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது" என்பதை நான் அறிவேன்.

263 சபையே, நாம் எப்பொழுதாவது ஒருமுறை நின்று, நம்முடைய தேவனைக் காண்போமேயானால் நலமாயிருக்குமே! உங்களை அப்படியே நிறுத்தி, உங்களுடைய குழப்பங்களிலிருந்து விலகி, அவருடைய ஆவியின் பிரசன்னத்தில் ஒரு சில நிமிடங்கள் அமைதியாய் நில்லுங்கள், அவர் எங்கும் அசைவாடுவதை உங்களால் காண முடியும். அவர் எவ்வளவு நல்லவர் என்று பார்த்தீர்களா?

264 இப்பொழுது அம்மா அங்கே படுத்துக் கொண்டிருக்கிறார்கள், நானும் அவளைக் குறித்து யோசித்துக் கொண்டிருக்கிறேன். அவளுக்குப் பக்கவாதம் ஏற்பட்டபோது, அவர் ஏன் அவளை அப்படியே போகவிடவில்லை? அப்பொழுது அவள் ஏன் மரிக்கவில்லை? ஆனால், பாருங்கள், அவர் அதை முன்னமே அறிந்திருந்தார், நான் வாக்குப்பண்ணியிருந்ததை அறிந்திருந்தார்... நான் கொலராடோவிற்கு சென்று கொண்டிருந்தேன், நான் அந்தவிதமான காடுகளுக்குள் செல்ல விரும்புகிறேன் என்பதை அறிந்து, அவர் திரும்பி ஒரு மேலான ஒன்றை எனக்கு அளித்தார்; அங்கே என்னை அனுப்பி, நான் என்ன செய்யப் போகிறேன் என்றும், அதைக் குறித்த ஒவ்வொரு காரியத்தையும் என்னிடம் கூறினார், நான் புறப்படுவதற்கு முன்பு; ஜனங்கள் எப்படி உடை

உடுத்துவார்கள் என்றும், நாங்கள் என்ன செய்வோம் என்றும், அதைக் குறித்த எல்லாவற்றையும் என்னிடம் கூறினார். அப்பொழுது நான் வந்து உங்களிடம் எல்லாவற்றையும் கூறினேன். அதன்பின்னர் அவன் மேலே சென்று, அது சம்பவிக்கிறதைக் காண்கிறான், அது சரியாக அவ்விதமாகவே உள்ளது. சரியாக, பாருங்கள், தாய் அங்கே இருப்பாள் என்றும், அவள்—அவள் இந்த நேரத்தில் உடல்நலக்குறைவாக இருப்பாள் என்றும், நான் இந்த மற்றொரு பயணத்தை மேற்கொள்ள முடியாது என்றும் அறிந்திருந்தார். பார்த்தீர்களா? நாம் புரிந்து கொள்ள மாட்டோம்...அப்பொழுது நானே, அதைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் நீங்கள் உங்களை அவருக்கு ஒப்புவித்து, அவரைக் கவனித்துப் பார்ப்பீர்களேயானால், அவர் எல்லாவற்றையும் சரியாக வழிநடத்துகிறார். பாருங்கள், அவர் அவையாவற்றையும் படிப்படியாக, சரியாக வெளிப்படுத்தும்படி செய்கிறார்.

265 அன்றொரு நாள் நான் சில சொப்பனங்களை கண்டிருந்த ஒரு வாலிப ஊழியக்காரன் அருகில் நின்று கொண்டிருந்தேன், அவனே அந்தச் சொப்பனங்களை எனக்குக் கொண்டு வந்திருந்தான். அர்த்தம் உரைக்கப்பட்டபோது, நாங்கள் அங்கே நின்றோம், பில்லியும் நானும், இந்த ஊழியக்காரனும் ஒன்றாக அங்கே நின்றோம். அது அங்கிருந்தது. ஏன், அது எவ்வளவு சரியாக இருக்க முடியுமோ அவ்வளவு பரிபூரணமாக இருந்தது. எப்படியாய் அந்த மனிதன் அங்கே பயபக்தியோடு—உடனே—உடன் நின்று, எப்படி பரிசுத்த ஆவியானவரால் அந்தக் காரியங்களை வெளிப்படுத்த முடிந்தது என்பதைக் கண்டு, அவனை நேராகக் கொண்டு வந்து, அது எங்கே செய்ய வேண்டும் என்றும், அதைச் செய்ய வேண்டிய பாதையில் சரியாகக் காண்பிக்கிறார். ஓ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், அவர் தேவன். அவர், அவர் வாசம் செய்கிறார்... அவர் தேவனாயிருக்கிறார்.

266 ஜனங்களாகிய உங்களில் அநேகர் தியாகங்களைச் செய்திருக்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய ஆண் நண்பர்களை அல்லது பெண் சிநேகிதிகளை விட்டுவிட்டீர்கள், நீங்கள் குடும்பங்களையும், போன்றவற்றையும் விட்டுவிட்டீர்கள், உங்களில் அநேகர் கூட்டாளிகளிடமிருந்தும், நண்பர்கள் மத்தியிலிருந்தும், மற்ற காரியங்களிலிருந்தும், கர்த்தருடைய வழியில் நடக்கும்படியாக, நீங்கள் நீண்ட காலமாக அறிந்திருக்கிற பழைய நண்பர்கடமிருந்தும் வெளியே வந்திருக்கிறீர்கள். அதற்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன். அதைச் செய்வது அற்புதமானது என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது நீங்கள் சுவிசேஷ வெளிச்சத்தை கண்டிருக்கிறீர்கள், அது சத்தியம், நீங்கள்—நீங்கள் அந்த ஒளியில் நடப்பீர்கள். பிள்ளைகளே, நீங்கள் என்ன செய்தாலும், நீங்கள் என்ன செய்தாலும், நீங்கள் எங்குச் சென்றாலும், பொல்லாங்கான தோற்றத்தைப் புறக்கணித்து, கிறிஸ்துவைப்

பின்பற்றுங்கள். நீங்கள் உயிரோடிருக்கும் வரை, அந்தப் பாதையில் அப்படியே இருங்கள். அதிலிருந்து நகர வேண்டாம், அது நிச்சயமாகவே நன்மையை அளிக்கும். அது நித்திய ஜீவன்.

267 நான் அம்மாவைக் காண்கிறேன், அவள் எப்போதெல்லாம்...ஒரு சில நிமிடங்களில் அவளால் தன்னைத்தானே சுதாரித்துக்கொள்ள முடியும்போது. நான், "அம்மா, அம்மா, நான் பேசுவதை நீங்கள் கேட்கிறீர்களா?" என்று கேட்கிறேன். சில சமயங்களில் அவள் அங்கேயே படுத்துக் கொண்டிருந்து, அவள் பதிலளிக்கமாட்டாள். அதன்பின்னர் சிறிது நேரம் கழித்து அவள், "ஹூ" என்று தன் தலையை *இவ்விதமாக* அசைத்துக் கூறுவாள். நான், "நீங்கள்..." என்று கூறலாம். அன்றொரு இரவு நான் கூறினேன், நான், "அம்மா, உங்களுக்கு என்னைத் தெரியுமா?" என்று கேட்டேன். அவளுக்கு என்னைத் தெரியவில்லை. நான், "இங்கே நின்று கொண்டிருக்கிற இது யார் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டேன். இல்லை, அவள் அதை அறிந்திருக்கவில்லை. நான், "அம்மா, உங்களுக்கு இயேசுவைத் தெரியுமா?" என்று கேட்டேன். அவள்... ஓ, என்னே! தன்னுடைய சொந்த குழந்தையை மறந்து போகலாம், ஆனால் அவளால் இயேசுவை மறக்க முடியாது. அதுதான். ஓ, சகோதரனே!

268 நீங்கள் பாருங்கள், நீங்கள் உங்களுடைய சொந்த குடும்பத்தண்டை வர வேண்டியிருக்கும் வரை, அது என்ன பொருட்படுத்துகிறது என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள், நீங்கள் பாருங்கள். அவரை அறிந்து கொள்வதே ஜீவனாயுள்ளது. இந்த ஜீவியத்தின் பந்தயம் ஓடிக்கொண்டிருக்கும்போது, அவரை அறிந்துகொள்வதே திருப்தியாயிருக்கிறது, நாம் ஆகாயத்திற்கு அப்பால் உள்ள ஒரு வீட்டைப் பெற்றுள்ளோம். அது என்னவென்று எனக்குத் தெரியாது. அது எப்படியிருக்கும் என்று உங்களுக்கு எப்படி கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை, ஏனென்றால் எனக்கே தெரியாது. ஆனால் என்றோ ஒரு நாள் தேவனுடைய கிருபையினால் நாம் அங்கே பிரயாணம் செய்வோம் என்பதை நான் அறிவேன்.

269 இந்த வாரம் எனக்காக ஜெபியுங்கள். எனக்கு அது தேவையாயிருக்கிறது. இப்பொழுது நீங்கள் எனக்காக ஜெபியுங்கள்; நான் உங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருப்பேன். கர்த்தருக்குச் சித்தமானால், நான் உங்களை அடுத்த ஞாயிற்றுக்கிழமை சந்திப்பேன். மேலும் இன்றிரவு ஆராதனையை நினைவில் கொள்ளுங்கள். கூடுமானால், இன்றிரவோ அல்லது வேற எதுவும் எனக்கு இல்லையென்றால், அங்கே வெளியே அம்மாவோடு இருப்பேன், அநேகமாக நான் இன்றிரவு உங்களோடு திரும்பி வருவேன்.

270 இப்பொழுது, சகோதரன் நெவில், நம்முடைய விலையேறப்பெற்ற போதகர், இங்கே வாருங்கள். எப்படி நான்

நிச்சயமாக...வீட்டில் உள்ளவர்களைத் தவிர வேறு யாருமே இங்கு இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் எல்லோருமே சபை ஜனங்கள் என்று அழைக்கிறோம். இந்தச் சுவிசேஷ சத்தியத்திற்கான சகோதரன் நெவிலின் நிலைப்பாட்டை நான் பாராட்டுகிறேன். ஜனங்களுக்கு முன்பாக அவருடைய விசுவாசத்தையும், உத்தமத்தையும் நான் பாராட்டுகிறேன். அன்றொரு நாள் அவர் பேசிக்கொண்டிருந்தபோது; நான் அதை ஒருபோதும் கவனித்ததேயில்லை, ஆனால் அவர் ஆவியின் ஏவுதலினால் தீர்க்கதரிசனம் உரைத்த காரணத்தால், அவர் என்னை ஒரு தீர்க்கதரிசி என்று ஆவியின் ஏவுதலினால் அழைத்தார். அப்பொழுது அவர் என்னை அந்தவிதமாக அழைத்துக் கொண்டிருக்கவில்லை, அது பரிசுத்த ஆவியாயிருந்தது. எனவே அதுவே எனக்குத் தைரியத்தையும் விசுவாசத்தையும் அளித்து, தேவனோடு ஆழமான ஆழங்களுக்கும், உயரிய உயரங்களுக்கும் செல்லத்தக்கதாக இருக்கிறது. சகோதரன் நெவில், நான் உங்களைப் பாராட்டுகிறேன். தேவன் உங்களை எப்போதும் ஆசீர்வதிப்பாராக. நான் உங்களை மீண்டும் காணும் வரை, தேவன் உங்களோடு இருப்பாராக.

61-1015M கேள்விகளும் பதில்களும்
பிரான்ஹாம் கூடாரம்
ஜெபர்ஸன்வில், இந்தியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org